திருத்தியது

உ

ஓம்

சித் சத் பரப்பிரஹ்மணே நம:

திருப்போரூர்

ஸ்ரீ சிதம்பர தேசிகரந்தாதி.

இது

ஸ்ரீமத் ஆத்துமாநந்த சுவாமிகளால்

இயற்றப்பெற்று

மதுரை

மீ. முருகேசம் பிள்ளையவர்களால்

பார்வையிடப்பெற்று

திண்டுக்கல்

ஆத்துமாநந்தா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

உ

ஓம்

சுத் சத் பரப்பிரஹ்மணே நம

திருப்போரூர்

ஸ்ரீ சிதம்பர தேசிகரந்தாதி.

இது

ஸ்ரீமத் ஆத்துமாநந்த சுவாமிகளால்

இயற்றப்பெற்று

மதுரை

ஸ்ரீ முருகேசம் பிள்ளையவர்களால்

பார்வையிடப்பெற்று

திண்டுக்கல்

ஆத்துமாநந்தா அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

 1105-ம் ஆண்டு சுக்கில வரு [விலை அணா 6

திருப்போரூர்ச்

சிதம்பரதேசிகரந்தாதி

சிறப்புப் பாயிரம்.

இது
திருவண்ணாமலை
ஈசானிய மடாதிபதி

ஸ்ரீமத் நடேச சுவாமிகளியற்றியது.

நேரிசை வெண்பா.

சீரோங்கு போரூர்ச் சிதம்பரதே வற்கணிந்தா ன்
பாரோங்கந் தாதிப்ர பந்தத்தை நாரோங்க க்
காத்தும் படைத்துங் கரந்துமருண் முத்தனை யே
யாத்துமா நந்தமுனி யாய்ந்து. *

இக்கவியில்

ஆத்துமாநந்தமுனி என்றதால்—ஆக்கியோன்பெயரும்

அந்தாதிப்பிரபந்தத்தைப் போரூர்ச் சிதம்பரதேவற்கணிந்தான் என்றதால் —நூற்பெயரும்

முத்தனையேயாய்ந்தென்றதால்—விஷயமும்

பாரோங்கு என்றதால்—அதிகாரியும், பயனும்

வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவும் அமைந்துள்ளன.



திருப்போரூர் ஸ்ரீ சிதம்பரதேசிகர்.



சிராழக்கான் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர்.



சோளிங்பட்டு ஸ்ரீ முத்தானந்த தேசிகர்.



நூலாசிரியர் ஸ்ரீ ஆத்துமாநந்தர்.

ஸ்ரீ சற் குரவே நம:

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர தேசிகரந்தாதி.

ஆசிர்வாத ரூபமங்கலம்.

வெண்பா.

சீர்பெருகு போரூர்ச் சிதம்பரதே வற்கணி யு
நார்பெருகந் தாதிக்கு நன்கருள்க—பார் மே
னடக்குஞ் சயிலமென நாற்புயங்கொண் டோங் கு
கடக்குஞ் சரத்தின் கழல். *

இதன் பொழிப்புரை.-பூமியின்கண் நான்கு திருப்புயங்களோடு நடக்கின்ற மலை யென்று கண்டோர் யாவருங் கூறுமாறு உயர்வாக விளங்குகின்ற மதம் பொழிகின்ற குஞ்சரத்தி (யானை முகமுடைய விநாயகப் பெருமா)னது திருவடியானது மேன்மை மிகுந்த திருப்போரூரென்னுந்தலத்திற் றிருக்கோயில் கொண்டெழுந்தருளிய சிதம்பரதேசிகனுக்கு யான் சூட்டுகின்ற அன்பு மிகுதற்கேதுவாகிய அந்தாதிப் பிரபந்தத்திற்குச் சொற்சுவை பொருட் சுவையாகிய அழகினைக் கொடுத்தருளுக. எ—று.

"நாற்புயங் கொண்டோங்கு" என்னும் வினைத்தொகைப் பொருள் குஞ்சரத்தையேயன்றிக் கடத்தையுணர்த்தாமையாற் கவர்படுதலில்லை. பெருகு இரண்டனுள் முன்னையது வினைத்தொகை. பின்னையது முதனிலைத்தொழிற் பெயர்.

நூல்

அவதாரிகை:- இந்நூலின் விஷயாகிய சிதம்பா தேசிகர் இத்தன்மையரெனல்

1. சொல்லும் மனமுந் தொடாத சோதியுமற்
றெல்லாமு மெங்கு மிருப்பானு—நல்லதிருப்
போரூரிற் புல்லிப் புரிந்தாண்ட புண்ணியனே
யாராயின் வேறொன் றலன். *

பொ-ரை. முன்னொருநாளில் நன்மையமைந்த திருப்போரூரின்கண் அடியேனைத் தமது புயத்திலணைத்து விருப்பத்துடன் உபதேசித்தாட்கொண்டருளிய எனது புண்ணியமேதிருமேனியாகத்திருவுருக் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ சிதம்பரதேசிகரெத்தன்மையரெனில் நிருபாதிகவடிவத்தால் வாக்கு மனங்களுக்கெட்டாத சொப்பிரகாசரும், சோபாதிகவடிவத்தாற் பிரபஞ்சவடிவமாகக் காணப்படுகின்ற எல்லாப்பொருள்களும் அவற்றிற்காதாரமாக வெல்லாவிடங்களிலும் பரிபூரணமாக நிறைந்திருக்கின்ற சச்சிதாநந்த சொரூபியுமாவர். அவ்வாறு பிரபஞ்சப்பொருள்களாயிருப்பின் அவர் ஜடசொரூபியும் அநித்திய சொரூபியுமாவரெனில் அப்படியல்லர். அதைக்குறித்தாராய்ந்துபார்க்கின் அச்சடப்பொருள்களெல்லா மத்தியஸ்தங்களாதலால் அத்தியாச சர்ப்பத்திற் கதிஷ்டானமாகியகயிறு எவ்வாறு அச்சர்ப்பரூபமன்றோ அவ்வாறு தம்மிடத்திலத்தியஸ்தமாகிய நாமரூபவஸ்துக்களொன்றுமல்லர் அவரேகாதலின். எ—று.

சொல்லும் மனமுமென்றது விரிக்கும்வழிவிரித்தல். ஏகாரம் அசைநிலை. (1)

அ-கை. ஞானிகளாயினும் மனமடங்காவிடின் அவருக்கு ஜீவன் முத்திச்சுகமடையப்படமாட்டாதெனல்.

2. அல்லும் பகலுமுன தம்புயப்பூ மென்பதமே
புல்லிக் கிடந்தின் புறுதலின்றி—வல்லவெறி
நாய்போ லலைந்துமன நைதனன்சீரு போரூரிற்
றுய்போ லருளியவெந் தாய் *

பொ-ரை. முன்னொருநாளிற் றிருப்போரூரின்கட்பேரருளுடைய தாய்போலக்கிருபையுற்று ஞானோபதேசஞ் செய்தருளிய எனது தந்தையே! இங்ஙனம் பேரருள் புரிந்தவுனது தாமரை மலர்போன் மெல்லிதாகிய திருவடியின்கண்ணேயே கலந்தடங்கி நின்று, எப்பொழுதும் பேரின்பத்தை யடைதலல்லவாமுறை. அவ்வாறின்றிப்பலமாக வெறிபிடித்த நாயலைந்து வருந்துதல்போல இம்மனமானது இரவும் பகலும் விஷய வாசனையாற் பிடிக்கப் பட்டுச்சலித்து வருந்துதன் முறையோ முறையன்று. எ-று.

அல்லும்'பகலும்' என்பன பின்னுஞ் சென்றியைந்தன. ஏகாரம் பிரிநிலைப்பொருளிலும், ஓகாரம் எதிர் மறைப்பொருளிலும் வந்தன.

"தினமு மண்ணுகர் பிள்ளைநோய்க் கிரங்கியே தீம்பண்ட மெதிர் காட்டிக், கனம ருந்துக ளொளித்துவைத் தழைக்கின்ற கருணைநற் றாய்போல" தன்னிடத்தநாதியே பொருந்தியுள்ள ஜன்ன மரணாதி துக்கரூபமாகிய வியாதியைக்கண்டிரக்கமுற்று முன்னொருநாளில் அத்திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய முருகப்பெருமானைத் தரிசிக்கச்சென்ற தன்னை யறுசுவையுருசியுள்ளவுணவினைக்காட்டி (உண்கவாவென்று) அழைப்பித்து ஞானமாகிய வவுஷதத்தைத் தனக்குப் புகட்ட (ஞானோபதேசஞ்செய்த)லின் ஞானாசிரியர் தாயெனவும், அவ்வுபதேசவாயிலாக அந்தக்காரணத்தின்கண்ணந் தரியாமியாக விருந்து, பிரஹ்ம வித்தையைக் கொடுத்தலிற்றந்தை யெனவும் விசேடிக்கப்பட்டனர். இவ்வாறே பிறவிடங்களிலும் இப்பதங்கட்குப் பொருள் கொள்க.

மனத்தை யடக்குதலெனக்கே கர்த்தவ்வியமாம். ஆனாலும் "ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே,யடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே." எனமேலோர்கூறிய வாக்கியப்படி சர்வசத்திமானாகிய நீயாட்டுவித்தால் உன்னாலாட்டுவிக்கப்பட்ட இம்மனம் அற்ப

சத்தியுடையவெனக்கடங்காது, நீயடங்குமாறு செய்தாலடங்கு மாதலால் அடிமையாகிய வெனதுடலாதிகள் ஆண்டவனுகிய வுன துடைமையாதல் போல எனது இவ்வடக்குதற்செயலுமுன்னு டையதே யென்பார் அதனை யம்மனத்தின்மேல்வைத்து "மன நைதனன்றே" எனக்கூறினர்.

அ-கை. சற்குரு மூர்த்தியே தனக்கனுகூல வஸ்துக்கள் யாவுமாயிருக்கின்றாரெனல்.

3. தாயும் பிதாவுந் தமருந் துணையுமென — க்
காயும் பொருளுநினை யன்றியுண்டோ—தீயவிள — ங்
கன்றினையு மீன்றவான் காத்தலெனப் போரூரி *
லன்றேடி வந்தளித்த வா. *

பொ-ரை. ஓரிளங்கன்றனது அறியாமையாற் றீய செயலு டையதாயிருந்தாலும் அத்தீயகன்றினையும் தாய்ப்பசுவானது கண்டவுடன் மனமுருகிப் பால்கொடுத்துக் காத்தல்போல அறியா மையாற் றீயனவுஞ் செய்தவனுயிருந்த என்னையும் முன்னொரு நாளில் திருப்போரூரின்கண்ணெழுந்தருளிய முருகப்பெருமானைத் தரிசிக்க வாலயத்திற் புகுந்தவுடனே கண்டு விரைந்து வந்து ஆட் கொண்டிரக்ஷித்தருளிய சிதம்பரதேசிகா! அடியேனுக்கு இங்ங னம் போருள்கொண்டாண்டருளிய உன்னைத்தவிரத்தாயும், தந் தையும், சுற்றமும், அனுகூலஞ்செய்பவரும், விசாரணை முகத்தாற் றனுகவறிந்தனுபவிக்கும் பொருளும் வேறுண்டோ இல்லை. எ-று,

அறியாமையாற் றீயனவுஞ் செய்தவனுயிருந்த என்னையும் என்பது இசை யெச்சம். ஒகாரம் எதிர்மறை. உத்தமாதிகாரி கள் சற்குரு மூர்த்தியையேதாய் முதலிய எல்லாப் பொருள்களு மாக நிச்சயிப்பார்களென்பதற்குதாரணம். பகவற்கீதை "நல்ல காதல்செய் நண்பனு மாயெனை, யல்ல தியாவு மறியலை யாத

லாற், சொல்லன்மேயினன்'' என வரும்.

அ-கை. ஞானசாரியரிடத்துத் தனக்குளதாகிய ஞானனு பவங்கூறுதல்.

4. ஆதிநா ளொன்று மறியேற் கமரு
லேதுமின்றி யொன்று மிருப்பளித்தா—யாதினியான்
செய்வேன் பிறிதுஞ் செயனுமிலே னுயி
னேயாசி தம்பரதே வா.

பொ-ரை. சிதம்பர தேசிகேந்திரா! முற்காலத்தில் ஒரு பொருளை யிது நல்லதென்றுவது தீயதென்றுவது அறியும் பகுப் புணர்வு மில்லாத வடியேனுக்குத் திருப்போரூரின்கண் ணவித்தியா கர்பித மற்பமுமில்லாமல் நாசமடையும்படி செய்து உன்னுடனே கமாகக் கலந்திருக்கின்ற வைக்கியானுபவங் கொடுத்தாய். அதனால் அவ்வைக்கியானுபூதியடைந்த வெனக்கன்னியமாக யாதொரு வஸ் துவும் பரமார்த்தமாகக் காணப்படாமையால் யான் ஏகனும், அவ் வேகத்தன்மையால் நிஷ்கிரியனுமாயினேன். ஆகவே செய்யவேண் டியவையெல்லாஞ் செய்து அடையவேண்டியவனைத்து மடைந்த கிருதகிருத்தியனுமாயினேன். எ—று.

யகாரமெய்முன் யகாரமெய் கெடுதல் உரையிற் கோடலாற் கொள்க. இலேனென்பது முன்னுஞ் சென்றியைந்தது.

முற்காலத்திற் றுவம்பதப்பொருளாகிய தனக்குத் தர்பதப் பொருளாகிய வீசுரவடிவ வாசிரியரிடத்துத் தேகமுதலியனவாகிய வுபாதி திருஷ்டியாலாண்டானடிமைவடிவமாக அல்லது குருசீட வடிவமாகப்பேதமிருந்தது. அப்பேதம் அவித்தையினலாகிய கற் பிதமாதலால் அக்கர்பிதம் முதலிற்செய்தவாக்கியோபதேசத்தாற் சேஷமற நாசமடையச் செய்தாயென்பார் ''ஏதுமின்றி'' எனவும், அவ்வவித்தியாகர்பிதம் நீங்கவே தனக்குமீசானுக்கும் பேதமற்ற

வைக்கியானுபூதி சித்தித்தமையின் அதனை "ஒன்ருமிருப்பளித் தாய்" எனவும், அங்ஙனம் அத்துவைத பரிபூரணமாகக்கண்ட தனது சொரூபத்திற் கன்னியமாக யாதொரு பொருளுங்காணப் படாமையாற் றன்னைச்சுவகதாதி பேதமற்ற வேகனென்பார் "பிறிதுமிலேன்" எனவும், அவ்வேக பரிபூரண சொரூபத்திற் குச்சலனவடிவக்கிரியையின்மையின் அதுபற்றி "செயலுமிலேன்" எனவும், அங்ஙனமிருக்கின்ற தனக்குச் செய்யவேண்டியவையும் அடையவேண்டியவையுமில்லாமையால் யான் கிருதகிருத்திய னென்பார் "யாதினியான் செய்வேன்" எனவும் கூறினர். (4)

அ-கை. குருமூர்த்தியினிடத்து முன்றனக்குபகரித்த தன் மையைப் புகழ்ந்து துதித்து மேலுமின்னபணியருளுகவென

வேண்டிக்கோடல்.

5. வாவிதிகழ் போரூரா மன்னியுளக் கற்பகப்பூ ங்
காவாய் விருப்பங் களையுதவு—தேவனை யே
நம்படியே ஞமுடிக ணற்புகழும் பொற்பமையு ஞ்
செம்பதமுந் தாங்கவருள் செய். *

பொ—ரை, கற்பகப்பூங்காவானது தன்னையடைந்தவருக்கு விருப்பமாயுள்ள பொருள்களையெல்லாங் கொடுக்கின்ற தன்மை போல வுன்னையே புகலிடமாக வடைந்தவடியேனுக்கு விருப்பமா யுள்ள துவம், தது, அசி யென்னுந்திரிபதார்த்தங்களின் ஞானனு பூதிகளையு மந்தக்கரணத்தின் கண்ணிலைபெறநின்று விளக்கிய கிருபா சொரூபியாகிய தெய்வமே! புனல் நிறைந்த தடாகங்களாற் சிறந்து விளங்குகின்ற திருப்போரூரின்கண்ணெழுந்தருளிய சிதம் பரதேசிகா! நன்மையமைந்த வுனது புகழையும் அழகார்ந்த சிவந்த திருவடியையும் எனது நாவுஞ் சிரமும் முறையே வாழ்த்தவும் வணங்கவுங் கிருபை செய்க. எ—று.

மன்னியென்பது செயவெனச்சத்திரிபு. "கற்பகப்பூங்காவாய் விருப்பங்களையுதவுதே" வெனவுருவகப் படுத்திக் கூறினாராயினும் படிப்போர்க்கு நன்கு விளங்குதற் பொருட்டுவமையும் பொருளும் பிரித்துரை செய்யப்பட்டன. தே என்பது அண்மை விளி. ஏகாரம் பிரிநிலை.

சொப்பிரகாசஞான மேகமாயினும் அது துவம்பதார்த்த (கூடஸ்த) ஞானம், தற்பதார்த்த (பிரஹம) ஞானம், அசிபதார்த்த (ஐக்கிய) ஞானம் என அம்மூன்று பதார்த்தங்களினுபாதி திருஷ்டியாற் காணப்படுகின்ற பேதநோக்கி விருப்பங்களெனப்பன்மையாகக் கூறப்பட்டது. அன்றியும் அது ஜிஞ்ஞாசையுடையாரிடத்திம் முறையாக வுண்டாதலன்றி யிம்முறையிற் பிறழ்தலில்லை. எப்படியெனில் கூடஸ்த ஞானமின்றிப் பிரஹம ஞானமும், இவ்விரண்டன்ஞானமுமின்றி யைக்கியஞானமுமுண்டாதலில்லை. இது "தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேற், பின்னையத் தலைவன் றானைப் பிரஹமமாய்ப் பிறப்புத் தீர்வன்" எனக்கூறிய கைவல்லியச் செய்யுளானு நன்குணரப்படும். (5)

அ-கை. சற்குருநாதா! நீயொருவன்றனே அஞ்ஞானி ஞானியென்னு மிருவருக்கும் வேறு வேறு வடிவாய் விளங்குகின்றயே யவ்வாறு விளங்குதற்குக்காரணம் யாது எனல்.

6 செய்யாபோ ரூரமரூந் தேசிகசி காமணியே
பொய்யரிடம் பொய்யாய்ப் பொருந்திநின்று-மெய்யருளம்
போக்கு மிடத்தின் புருவாய்ப் பொலிகின்றாய்
நீக்கமிலா விண்வடிவ நீ. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வாசிரிய சிரோரத்தினமாகியவழகனே! பிரிவற்ற வசங்க சிதாகாய சொரூபியாயிருக்கின்ற நீயொருவன்றனே அஞ்ஞானிகளுக்குத் துக்க காரணமாயுள்ள மித்தியா பிரபஞ்ச வடிவமாக விளங்கி நின்று

ஞானிகளுக்குத்தமது தூலமனத்தைக் கெடுத்தகாலத்திற் பிரஹமாநந்த வடிவமாக விளங்குகின்றாயே இவ்வாறு விளங்குதற்குக்காரணம் யாது. எ—று.

"என்பிலதனை வெயில்போலக்காயுமே, யன்பிலதனையறம்" என்றாற்போல "பொய்யரிடம் பொய்யாய்ப் பொருந்திநின்று மெய்யருளம் போக்கு மிடத்தின் புருவாய்ப் பொலிகின்றாய்" எனச் செய்யுளேக்காற் கூறப்படினும் பரம்பொருளை அஞ்ஞானிகள் பிரபஞ்சவடிவாகவும், ஞானிகள் தமது சச்சிதாநந்தசொரூபமாகவுங்காண்பர் என்பது கருத்தாகக் கொள்க. அவ்விருவரும் ஏனவ்வாறு காண்கின்றனரெனின் அஞ்ஞானிகள் மித்தையாகிய வஞ்ஞான சம்பந்தத்தால் அதன் காரியமாகிய தேகாதிகளைத் தாமென்றும், சத்தாதி விஷயங்களைத்தமதென்றும் கருதுதலானும் ஞானிகள் அவ்வஞ்ஞான விடுபாட்டாற் சச்சிதாநந்த சொரூபமே தாமென்றும் தேகாதிப்பிரபஞ்சம் மித்தையென்றுங் கருதுதலானுமென்றறிக. இது "நீக்கமிலா விண் வடிவ நீ பொய்யரிடம் பொய்யாய்ப் பொருந்திநின்று மெய்யருளம், போக்கு மிடத்தின் புருவாய்ப் பொலிகின்றாய்" இதற்குக் காரணம் யாது என்னும் வினவுரைக்கு விடைகூறியவாறு. (6)

அ—கை. துக்ககாரணமாயுள்ள பிரபஞ்சத்திற் சத்திய புத்தியுள்ளார்க்குச் சுகவடிவ மோக்ஷமடையப்படமாட்டாதெனல்.

7. நீநா னெனும்பேத நீக்கியொன்றாய் நிற்கவைத் த
கோனேபோ ரூரநினைக் கூடாதே—கான ற்
றெரிநீ ருலகமெயாச் சிந்தித் துழன் றே
யிருங்கதியுற் றார்க ளெவர். *

பொ-ரை. நீயீசுரனென்றும், நான் ஜீவனென்றுங் கூறுதற்குக் காரணங்களாகவிருந்த மாயை யவித்தைகளாலாகிய கற்

பித பேதத்தையுள்ளபடி கற்பிதமாக்கி யொழித்து மிஞ்சியிருந்த சச்சிதாநந்த வடிவவென்னை யச்சச்சிதானந்த வடிவவுன்னுடன் அபேத (அகண்டாநந்த சொரூப) மாக நிற்கும்படி கிருபை செய்தருளிய திருப்போரூரிறைவா! இவ்வாறுன்னைப் புகலிடமாகச் சார்ந்து அசைவற நின்று ஆநந்தவடிவ மோக்ஷமடைய வேண்டிய தாயிருக்க அவ்வாறடையாமல் கானலின்கண்ணில்லாமற் பிராதிபாசிக (தோற்றமாத்திர) மாகக் காணப்படுகின்ற ஜலம்போல உன்னிடத்தில்லாமற் பிராதி பாசிகமாகத் தோற்றுகின்ற மித்தையாகிய பிரபஞ்சத்தைச் சத்தியமாக நினைத்து அந்நினைப்பாற் றுக்ககாரணமாகிய சத்தாதி விஷயங்களிற் சுழன்று பூரணாநந்த வடிவமாகிய மோக்ஷத்தை யடைந்தவர் யாவர் ஒருவருமிலர். எ-று.

தெரிநீர் - கானலின்கண் ணில்லாமற்றெறிகின்ற ஜலம்.

ஏகாரமூன்றனுள் முன்னது விளியுருபு. பின்னுள்ளவை அசைநிலை. (7)

அ—கை:- மோக்ஷவிஷயமாகத் தனக்குண்டாகிய எண்ணமும் அதுபற்றி யாசிரியானுக்கிரகித்த மகிமையையும் கூறுதல்.

8. எவ்வாறு முத்திநிலை யெய்துமென வெண்ணிமன
னைவேனைப் போரூரென் னுதாரநா—ளெவ்வமெலாம்
போக்கிமுழு தாண்ட புதுமை புகலரிதே
வாக்கும் மனமுஞ் செலா *

பொ-ரை. மோக்ஷமானது எந்த வழியாலடையப்படுமோவென நினைத்து நினைத்து மனக்கலக்கமுற்றிருந்தவென்னைத் திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய எனது குருமூர்த்தியானவர் முன்னொருநாளில் என்னிடத்துள்ள கர்த்திருத்துவ முதலியனவாகிய மயக்கத்தாலுண்டாகிய துக்கங்களையெல்லாங் கெடுத்து

என்னுடலாதியனைத்தையு மாட்கொண்டருளியதாலடை யப்பட்ட வதிசயஞ் சொல்லமுடியாது வாக்கு மனதீதமாதலால். எ—று.

என்னென்பது பின்னுஞ்சென்றியைந்தது. ஏகாரம் அசைநிலை. வாக்கும் மனமுஞ் செலாவென்றது - விரிக்கும்வழிவிரித்தல். ஆதலால் என்பது சொல்லெச்சம்.

முழுதாண்டது:- உடலாதியனைத்தையும் வேறுபடுத்தித் தன்னைமாத்திரம் மிஞ்சவைத்தல். (8)

அ-கை:- தன்னையாசிரிய ராட்கொண்டதற்குக் காரணங் கூறுதல்.

9. செல்லாமற் செல்வரிடஞ் சென்றேதையே னுங்கொடுக்கச்
சொல்லாமற் றன்னடிக்கே தொண்டாக்க—வெல்லாங்
கெடுத்தேக னுக்கக் கிருபைப்போ ரூரன்
றடுத்தாண் டருளியது தான் *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய கிருபா சொரூபியாகிய சற்குருமூர்த்தி யென்னைச் செல்வரிடத்துச் செல்லாமலும், செல்லினும் அவரிடத்து யாதொன்றையுங் கேளாமலுஞ் சமுசார துக்கத்தினின்று மீட்டியாட்கொண்டது எதற்காகவெனில் தனது திருவடிக்கே யடியனாக்கவும், அவ்வடிமைத் திறத்தாலெல்லாப்பற்றுக்களையுங் கெடுத்து அத்துவைதனாக் கவுங் கருதி. எ—று.

சென்று என்பது செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சத் திரிபு. ஏகாரம் பிரிநிலை. தான் அசைநிலை. கருதி என்பது - சொல்லெச்சம்.

உபாதி திருஷ்டியாலடியனாக்கவும், சொரூபதிருஷ்டியாற் றனாக்

கவுங் கருதியெனக் கூறுவார் "தன்னடிக்கே தொண்டாக்க எல் லாங் கெடுத்தேக ஞக்க" எனக்கூறினர். (9)

அ-கை. ஞானசிரியர் தனக்குபதேசித்த முறையையுமதனு லாகிய பயனையுங் கூறுதல்.

10. தடுத்தாளுங் காலிடவத் தத்தா லணைத் தே
யெடுத்துச்சி யில்வலக்கை யேற்றிப்—பிடித்துரைத்த
சொல்லமரு ரையா தொழும்பனுளத் தேமுளைத் து
நல்லகனி யாயுளதிந் நாள் *

பொ—ரை. திருப்போரூரிலெழுந்தருளிய சற்குருநாதா! முன்னென்னைச் சமுசார பந்தத்தினின்று மீட்டியாட்கொண்ட பொழுது உனதிடக்கரத்தாலெனது வலச்செவி யுனதுபயத்திற் பொருந்து மாறணைத்து எனதுச்சியின் மீது உனது வலக்கை விரல்களைப் பொருத்தி நீயுபதேசித்த வாக்கியமாகிய வித்தானது அடியேனுடைய மனமாகிய விளை நிலத்தின்கண் முளைத்து மா மாகிப் பின் விசாரமாகிய பூப்பூத்து அதினின்று துவம்பதார்த்த சோதனவடிவப் பிஞ்சும், தற்பதார்த்த சோதனவடிவப் பெருங் காயுமாகி யோதப்புரோத பாவவடிவ பரிபக்குவமடைந்தகாலத் திற் பிரஹமாநந்தமென்னு மிரசப் பெருக்கோடு கூடிய அத்து வைத பரிபூரண ஞானவடிவக்கனியாகி நிரங்குசதிருத்தி வடிவ சுகத்தைக் கொடுத்துக்கொண்டு நிலைத்திருக்கின்றது. எ—று.

ஏகாரங்கள் - அசைநிலைகள். எடுத்துரைத்த வென்றியைத் துக்கொள்க. எற்றிப்பிடித்து என்பனவொருசொன்னீர்மைப் பட்டுநின்றன.

உளத்தே முளைத்து நலலகனியாயுளது எனக்கூறிய ஏக தேசவுருவகத்தால் வித்தும் மரமுதலியனவும் வருவிக்கப்பட்டன. அவற்றுட் பிஞ்சும் பெருங்காயும் முறையே பிரத்தியக்சேதனத்

தின் சூக்குமத்தன்மையையும் பிரஹம சேதனத்தின் வியாபகத் தன்மையையுஞ் சிறுமை பெருமைகளா லுணர்த்துகின்றன. இவ்வாறே வாசிட்டத்தும்.

"மூவகை யுலகி லிந்த வகங்கா மும்மை யென்று,
மேவரு மிரண்டு நன்று மிகவுமொன் றீன மாகும்,
யாவதும் பரமு நாமே யீறில மெமைய லாதோர்,
பாவனை யிலதென் றேரும் போதமே பரமாங் காரம். எனவும்
செங்கெல்வா லினுஞ்சற் றுகிச் செகங்களுக் கயலா யென்று
மன்னுது மெனக்கொள் போத மற்றையாங் கார மாகு
பிங்கில யிரண்டுஞ் சீவன் முத்தர்பா லிருந்தீ டேற்றித்
துன்னரு முத்தி நல்குஞ் சுழல்வுறு பந்த நல்கா." எனவும்

சிறுமை பெருமைகளா லறிவித்திருத்தலை யொப்பிட்டறிந்து கொள்க. (10)

அ-கை:- அன்பர்களே! ஸ்ரீசிதம்பரதேசிகன் றிருவடியை முடியிற் சூடித்துதிப்பீராயின் உம்மிடத்து இயமன்வரான் எனல்.

11. நாளவமே போக்காத நன்னெஞ்சீர் போரூரா ன்
றாளே தலைக்கணியாத் தாங்கியவ—னாளென வே
வாய்ப்பறைகொண் டார்க்கின் வருஞ்சமனுங்கண்டகல்வா
னாய்ப்பொருந்த வஞ்சுவா னால் *

பொ-ரை. தமக்குரிய வாழ்நாளை வீணாளாகக் கழிக்காத மோக்ஷவிச்சை நிறைந்த மனமுடைய மெய்யன்பர்களே! நீவிர் திருப்போரூரிலெழுந்தருளிய சிதம்பர தேசிகனுடைய திருவடியையேயுமது சிரத்தின் கண்ணணியத்தக்கவாபரணமாகச் சூடியுங் களை யவ்வாசிரியனுக்கடிமை யென்று பலருமறியுமாறு உங்கள் வாயாகிய வாச்சியத்தாற் பேரொலியெழுமாறு முழக்குமின். அங் ஙன முழக்குவீராயின் அப்பொழுது ஜீவர்களை யுடம்பினின்று

பிரிக்கவருகின்ற நமன் உம்மாற் செய்யப்படும் இம்முழக்கத்தைக் கேட்டு உமதருகில் வரவு மஞ்சி நீங்கிவிடுவன். எ—று.

உம்மையும், ஆயும் பிரித்துக் கூட்டப்பட்டன. ஏகாரமூன்றனுள் தாளே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலே. மற்ற ஏகாரங்கள், ஆல் - அசைநிலைகள்.

அன்பரிடம் நமன் வாரானென்பது "மார்க்கண்டனுக்கா மறவிபட்ட பாட்டையுன்னிப், பார்க்கிலன்பர்க்கென்ன பயங்காண் பராபரமே" எனக்கூறிய பெரியார் வாக்கானும் நன்குணரப்படும். (11)

அ-கை:- குருவின் றிருவடியிற் பேரன்புடைய மனத்தின்கண் ஞானமுதிக்குமுறையினையம் மனத்தை முன்னிலைப்படுத்திக் கூறுதல்.

12. ஆதரித்தா னெஞ்சே யமரூரெம் மாதியின் ரூ
ணீதரித்து நிற்க நிழலளிக்குந்—தீதறு சீ
ராநந்த நல்கும‌ப்பா லத்துவித பூரணமெய் ஞ்
ஞானமுமாய் நின்பா னணும் *

பொ-ரை. மனமே திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய எமது முதல்வராகிய சிதம்பரதேசிகருடைய திருவடிக்கண்ணன்பு செய்வாயாயின் அத்திருவடியானது நீயதனிடத்த பேதமாகக் கலந்து நிற்றற்கேதுவாகிய பிரகாசத்தையுனக்குக் கொடுக்கும். அதனாலவ்வாறசைவற நிற்கைவரும். அவ்வாறசைவற நின்றால் அதனோடு துக்கசம்பந்தமாகிய குற்றமற்ற சிறப்புடைய பிரஹமாநந்தத்திற்கேதுவாகிய வியாபகத்தன்மையை யடைவிக்கும். அப்பால் வியாபகமாகிய வுன்னைத் தன்னோடு பேதமாக்குவித்து அவ்வைக்கியத்தால் ஜீவப்பிரஹம வைக்கியரூபவத்துவைத பரிபூரண ஞானமுமாகியுன்னிடத்துப் பொருந்தும். ஆதலாலந்த அன்பினையே யுறுதியாகக் கொண்டொழுகுக. எ—று.

ஆனந்தம் ஆதபெயர். ஆதலால் அந்த அன்பினையே யுறுதியாகக்கொண்டொழுகுக. என்பது குறிப்பெச்சம். நிழல் இப்பொருளில் வந்ததை "விரியன் மின்னிலவு வில்வாள்வெயினிழல்" என்னும் சூடாமணி நிகண்டாலுணர்க. நணும் என்பது இடைக்குறை. உம்மை எச்சவும்மை. உயர்வு சிறப்பெனினுமமையும்.

அ-கை:- குருமூர்த்தியினுபதேச மகிமையை நினைக்குங் காலுண்டாகு மனுபவங் கூறுதல்.

13. நண்ணுசீர்ப் போரூரென் னுதனவி னல்வாக் கை
யெண்ணுதொறு முள்ள மிளகுமாற்—புண் ணே
மருவுடல்கம் பிக்கும் மயிர்க்கூச் செறி யு
மிருவிழியு நீர்சொரியு மே *

பொ-ரை. செல்வவளம் பொருந்திய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய எனது சற்குருமூர்த்தியுபதேசித்த வினிமையாகிய வாக்கியத்தை நினைக்கும்பொழுதெல்லாம் எனதுள்ளமுருகும், மாமிசம்பொருந்திய இவ்வுடல் நடுக்கமடையும், உரோமம் புளகிக்கும், இரண்டு கண்களும் புனல்சொரியும். எ—று.

ஆல் ஏகாரங்கள் அசைநிலைகள். உம்மை முற்றும்மை. தொறும் என்பது பன்மைப் பொருடரு மிடைச்சொல். (13)

அ-கை:- பெண்களைச் சுகசாதனமாக நினைப்பவரிவர் துக்கசாதனமாக நினைப்பவரிவரெனல்.

14. ஏவாருங் கோவார்பா வின்பாவ தெம்போரூர்த்
தேவனடி தீண்டாத சென்னியர்க்காம்—பூ வா
ரடிமுடியின் மேலணியு மன்புடையார்க் காழிக்
கடுவே கடுத்திலகுங் காண் *

பொ-ரை. அம்புபோற் கூர்மை பொருந்திய கண்களையுடைய மங்கையரிடத்துச் சுகசாதனபுத்தி யாவர்க்குண்டாவதெனில் திருப்போரூரின் கண்ணெழுந்தருளியவெமது குருதேவனுருடைய திருவடியில் வணங்காத தலையினையுடையா (அன்பற்றா)ர்க்கேயாம். ஆனாலத்திருவடியைத் தமது முடியிற் சூடுகின்ற அன்புடையார்க் கெவ்வாறுமெனில் அதற்கு மேற்கூறுகின்றார். அவ்வன்புடையார்க்கு முற்காலத்திற் சமுத்திரத்தினின்றெழுந்தி யாவருமஞ்சி நடுக்குறுமாறு தோன்றிய விஷமேபோலத் துக்க சாதனமாக விளங்கும். எ—று.

இன்பு ஆகு பெயர். தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. கடுவே யென்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை. தேற்றமெனினுமமையும். காண் - முன்னிலையசை.

விடமாகிய விடயந் தன்னைப் புசித்தவருக்குத் துன்பந் தருதல்போலப் பெண்ணாகிய விடயமுந் தன்னைப் புசித்தவருக்குத்துன்பந் தருதலால் "ஆழிக் கடுவே கடுத்திலகும்" எனக் கூறப்பட்டது. "கடுவே கடுத்திலகு மெனவிங்குக் கூறியதுபோல "விரிவிடம் விடமதன்று விடயமே விடமாந் துன்பம், புரிவிடங் கொல்வதோர் மெய்புலன் மறுபிறப்புங் கொல்லும்" என்று வாசிட்டத்தில் ஸ்ரீ ரகுநந்தனர் கூறியிருத்தலுணர்க.

அ-கை:- திருசியங்கள் மித்தை, திருக்குச் சத்தியமெனல்.

15. காணப் படுவதுவுங் காணப் படாததும்
பேணப் படாதவெறும் பேரேயாங்—காணும்
பொருளே நீ போரூரெம் பூரணனே பொய்த்து
மருளேயா மற்றோர் மதி *

பொ-ரை. திருப்போரூரின்கண் விளங்குகின்ற வெமது பரிபூரணா! பிராந்தி ஞானத்தின் சாதனங்களாகிய விந்திரியங்களுக்கு

விளங்குகின்ற காரியவடிவப் பிரபஞ்சமும் அவ்விந்திரியங்களுக்கு விளங்காத காரணவடிவ அஞ்ஞானமுமாகிய விருவகைப்பொருள்களும் விரும்புதற்கு யோக்கியம (பொருளை) ற்ற பெயர் (சொல்) மாத்திரமாம். நீ மாத்திரமே யுன்னிடத்தத்தியஸ்தமாகியவப் பொருள்களினுண்மை யின்மைகளைச் சொப்பிரகாச சாக்ஷியாக விருந்து விளக்குதலாற் சிதம்பரமென்னுங் காரணப்பெயர் கொண்ட காணும் (திருக்குப்) பொருளாதலால் நித்தியமாயிருக்கின்றாய். இவ்வாறன்றியுன்னை வேறுவிதமாக நினைப்பவர் நிச்சயம், பிராந்தியினாலாகிய மித்தையேயாம். எ—று.

ஆதலால் நித்தியமாயிருக்கின்றாய் என்பது குறிப்பெச்சம். பேரேயாமென்பதிலுள்ள ஏகாரமும், பொய்த்தவே எனப்பிரித்துக்கூட்டப்பட்ட ஏகாரமும் தேற்றப்பொருளில் வந்தன. நீயேயெனப் பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரம் பிரிநிலை.

எவ்வாறு அதிஷ்டானமாகிய மண்ணிற்காணப்படுங் கடமுங் கானலிற் காணப்படுஞ்சலமும் பொருளற்ற பெயர் மாத்திரமோ அவ்வாறு சேதனா சேதனவடிவ விருவகைப்பிரபஞ்சமும் அவற்றின் காரணமாகிய அஞ்ஞானமுஞ் சத்துமாகாமலசத்துமாகாமல் அதிஷ்டானமாகிய சேதனத்திற் கற்பிக்கப்பட்ட மித்தையாயிருத்தலின் வெறும் பெயரெனப்பட்டன. வெறும்பெயர் - பொருளற்றசொல். ஆனால் அம்மண்ணிற் கடமும் கானலிற் சலமும் வெறும் பெயரெனல் பொருந்தும். பிரபஞ்சமானது சுரோத்திராதி ஞானேந்திரியங்களாற் பிரத்தியக்ஷமாகவறிதற்குரிய சத்தாதி விஷய வடிவமாயிருத்தலால் வெறும் பெயரல்ல, பொருளோடு கூடியதேயாமெனச் சங்கிக்கின் அதற்கு விடையிங்குக் கூறிற் பெருகும். நித்தியாநித்திய வஸ்து விவேகமென்னும் நூலின் கண்ணுள்ள வசத்திலக்கணப் பிரகாணத்திற் சங்கை சமாதான பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. விருப்பமுளதேலாண்டுப் பார்த்துத் தெளிந்து கொள்க. (15)

அ-கை:- அகண்டானுபூதியின் சாதனோபாயங் கூறுதல்.

16. மதிபெற்ற மெய்யடியார் வாழ்வேபோ ரூரிற்
துதிபெற் றிலகுசுயஞ் சோதீ—திதிபெற்ற
வுன் சொரூபங் கண்ட வுடனனிய மோடினவே
லென் சொரூபம் யாதா யிடும்- *

பொ-ரை. சுத்த சித்தமுடைய மெய்யடியார்களுக்கு ஜனன மரண மற்றநித்தியமாகிய மோக்ஷவடிவவாழ்வு கொடுப்பவனே திருப்போரூரின்கண்ணன்பர்களாற்செய்யப்படுந் துதிகளைப் பெற்று விளங்குகின்ற சுயம்பிரகாச சொரூபியே! ஜடசேதனக் கலப்பாயுள்ள பிரபஞ்சத்தினின்று நித்தியமாகிய வுன்னுடைய வகண்டைகரச சச்சிதானந்த சொரூபத்தைமாத்திரம் புத்தியாற் பிரித்து அபரோக்ஷமாகத் தரிசித்தவுடனே உன்னின் வேறாகிய நாமரூபவடிவப் பிரபஞ்சம் முன்போற் சத்தியமாக விராமல் உன் சொரூபத்தினின்று வேறுபடுதலால் மித்தையாய்ப்போயிற்றெனின் அவ்வேதுவால் அத்தன்மைத்தாகிய (ஜடசேதனக் கலப்பாயுள்ள) எனது சொரூபம் எத்தன்மைத்தாகும். எ—று.

வாழ்வு ஆகுபெயர். எனவே ஜடபாகம் மித்தையா யொழியச் சேதனபாகம் சேதனத்தோ(உன்னோ)டைக்கியமாயிற்று, என்பதெஞ்சி நின்றது. உன்சொரூபங் கண்டவுடனனிய மோடின என்பதற்கு தாரணம் "களங்கமற்ற கண்ணடி தன்முன் வேறோர் களங்கமற்ற கண்ணடி காட்டும்போது, விளங்கியதன் மயமாகி யபேத மாகி விகற்பமின்றி நிருவிகற்ப மானாற் போல,வளந்தறியப் படா விபுவாய்ச் சத்தாய்ச் சித்தா யாநந்த மாம்பிரஹ்மத் தைக்கியமான, வுளந்தெளிந்த படியிருந்தா லுலக மெங்கே யுலையெங்கே யென்றுசங்கை யொழித்தி டாயே" எனவரும் மற்றும் வருவனவற் றாற் கண்டுகொள்க. (16)

அ-கை. அநித்தியனுயிருந்த தன்னை ஸ்ரீ சிதம்பர தேசிகர் நித்தியனாக்கினரெனல்.

17. இடும்பை யிடும்பை யெழுதா தியற்றில்
குடும்பக் குழாஞ்சுமக்குங் கூலி—யுடம்பினையே
நானென் றழிந்தேனை நற்போரூ ரெந்தையறி
வானந்த மாக்கினு னல். *

பொ-ரை. துன்பமாகிய சரக்கினை நிறைத்து வைத்திருக்கின்ற பையாகவும் தோலும், எலும்பும், மூளையும், தசையும், உதிரமும், உமிழ்நீரும், சுக்கிலமுமாகிய சத்ததாதுக்களாற் கட்டப்பட்ட வீடாகவும் மனைவி மக்கள் முதலிய சமுசாரக் கூட்டமாகிய வூட்டையைச்சுமக்கு (அபிமானிக்கு) ம் கூலியாளாகவுமிருக்கின்ற விவ்வுடம்பினையே யெனது சொரூபமென்று நிச்சயித்து அந்நிச்சயத்தால் அநித்தியனுய்ப் பிறந்திறந்து வருந்திய வென்னை நன்மையமைந்ததிருப்போரூரின்கண்ணெழுந்தருளிய சிதம்பர தேசிகராகிய வென்றந்தையாரானவர் அநாதியிலே சித்தித்துள்ள சச்சிதானந்த வடிவ நித்தியனுக்கினர். எ-று.

ஏகாரம்-பிரிநிலை. ஆல்-அசைநிலை. கூலி-ஆகு பெயர்.

உடம்பின்கண் வாத பித்த கப ரோகங்களாலுண்டாகுந் துன்பமே எப்போதுங் குடிகொண்டிருத்தலால் அத்தேகம் இடும்பையிடும் பையெனவும், செங்கல் மாமுதலியவற்ருற் கட்டப்பட்ட வீடுபோலச் சத்ததாதுக்களாலமைக்கப்பட்டிருத்தலால் எழுதாதியற்றில் எனவும், முற்கூலிவாங்கிய சுமையாளானவன் முன்பேசிய காலதேசவெல்லையளவும் கஷ்டப்பட்டாயினுஞ் சுமந்தேநீங்குதல் போல முந்திய ஜன்மங்களில் அன்னிய ஜீவர்களாற் செயயப்பட்ட வுபகாரத்தின்றன்மைக்கிணங்க அவர்கட்கவை கொடுபடுங் காலதேச வஸ்துக்களின் முடிவளவும் அவரைத் தன்னுடைய

வராக நிச்சயித்து வருந்தியுமபிமானித்தலாற் குடும்பக் குழாஞ் சுமக்குங்கூலியெனவும் கூறப்பட்டது. (17)

அ-கை:- எதனுல் நீயெல்லாஞ்செய்துஞ் செய்திலேயோ அதனுல் யானுமத்தன்மையன் எனல்.

18. ஆக்கலடி யைந்தொழிலுஞ் செய்து மசலனை ய்
நீக்கமிலா தெங்கு நிறைந்துநின் றுங்—காக்கவெனை ப்
போரூரி லன்றோர் புருடன்போ லாண்டாய் நி ன்
சீர்கண்டேற் கேது செயல் *

பொ-ரை. சிருட்டியாதி பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்தும் நிஷ்கிரியனுகவும், திருப்போரூரின்கண் முன்னொரு நாளிலடியேனைக் காக்கும் பொருட்டொரு தெய்வீகமமைந்த மானுடன் போல வந்தாட்கொண்டும் எவ்விடங்களிலும் பிரிவற நிறைந்து பரிபூரண சொரூபியாகவு மிருக்கின்றாய். இவ்வாறிருக்கின்றவுனது சுபாவத்தை யபரோக்ஷமாகவறிந்த எனக்கும் யாது செயலுளது ஒன்றுமேயில்லை. எ—று.

தொழிலும் என்பதிலுள்ள உம்மை முற்றுப் பொருளது. செய்தும் என்பதிலுள்ள உம்மை சிறப்புப் பொருளது.

அன்னியருக்குத் தேகத்தோடுகூடிக் கிரியை செய்பவன் போற் காணப்படினும் இச்சரீரேந்திரியாதிகளுக்கதீதனுய் வாஸ்தவத்திற் சச்சிதாநந்தவகண்டைகரச சொரூபியாதலால் யான் நீயாகவே யிருக்கின்றேன்அதனுல் யானும் நிஷ்கிரியன் என்பார். "நின் சீர்கண்டேற் கேது செயல்" என்றார். எற்கும் என்பதன் எச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. சிறப்பும்மையும் அவ்விகுதியும் பிரித்துக் கூட்டப்பட்டன.

குருவின் சொரூப வியாபாரங்களை யறிந்தவர் அக்குருவுக்

கொப்பாவர் என்பதற்குதாரணம் பகவற்கீதை "செயலாலுங் குணத்தாலுஞ் செயலாலு குலமாக, வியலான்முன் படைத்தே நானிப்பொழுதுங் காப்பேனுன், மயலாய வினைப்பயனின் மனம் வையேன் – மற்றதனு,லயலாயே யிருக்குமெனக் கவையறிவா ரெனையனையார்" (18)

அ-கை:- எனக்குஉன் றிருவடியி லடங்கிநிற்கு நிலைவேண்டும் அலலது அதற்குச் செய்யும் வழிபாடு வேண்டுமெனல்.

19. செயனுன் றிருவடிக்கீழ்ச் சேவையே யன் றே
யையொன் றறியா தடங்கு—மியலொன் றே
வேண்டுஞ் சமரநர் விளங்கும் விளக்கொளி யே
யாண்டோ விசையு மிசை *

பொ-ரை. திருப்போரூரின்கட் சோபாதிகத்தால் விளங்குகின்ற சற்குருமூர்த்தியே! சந்திரன் றன்னிடத்துப் பொருந்திய களங்கத்தை விளக்கினாற்போல உன்னிடத்தத்தியஸ்தமாகிய பிரபஞ்சப் பொருள்களையெல்லாம் சாக்ஷியாக விருந்து விளக்குகின்ற சொப்பிரகாச சொரூபியே! அடியேனுக்கு அன்னியமாகிய பிரபஞ்சப் பொருள்களுளொன்றையுங் கிரகியாமல் உனது திருவடியின் கண்ணடங்கி நிற்குநிலை யொன்றே வேண்டும். அஃதில்லையாயின் உனது திருவடிக்குச் செய்யும் வழிபாடொன்றே வேண்டும். இத்தன்மையாகிய செயல் எக்காலத்தடையப்படும்? கூறுக. எ-று.

திருவடிக்கீழ் என்பது பின்னும், ஒன்று என்பதும் வேண்டுமென்பதும் முன்னுஞ் சென்றியைந்தன.

எகாரங்களிரண்டும் தேற்றப் பொருளில் வந்தன. யாண்டென்பது ஈண்டுக்காலப் பொருண்மேனின்றது. ஓகாரம் அசைநிலை.[19]

அ-கை:- சற்குருநாதா! நீ கேடு செய்யினும் புண்ணியனெனக்கூறப்படுகின்றாயெனல்.

20. இசைத்தவிசை யொன்று மிருவினையோ டொன்		ற
வசைத்தபுர மூன்று மழித்துந்—திசைநான்கு		ம்
போர்த்தபுகழ்ப் போரூர புண்ணியனென் பேரடை		தி
தீர்த்தவிதுன் செய்கைத் திறம்		*

பொ-ரை. நான்குதிக்கின் கண்ணும் வியாபித்த புகழ்பொருந்திய திருப்போரூரின்கண்ணெழுந்தருளிய நின்மலா! என்னை நல்வினை தீவினைகளுடன் பொருந்துமாறு பந்தமுறுத்திய காரிய காரணவடிவ முப்பு(மூன்றுசரீ)ரங்களையும் முன்னொருநாளில் நீயுபதேசித்த வொரு சொல்லாலெரித்துக் கெடுத்தாய். அவ்வாறு கெடுத்தும் தரும சொரூபியென்னுந்திருநாமத்தையடை (தரும சொரூபியென்று சாஸ்திரங்களாற் றுதிக்கப்படு) கின்றாய். இது (கேடு செய்தும் புண்ணிய னெனப் பெயரடைகை) யாதுகாரணத்தாலெனில் உன்னுடைய செய்கையினது திறம் (உன்னாற் செய்யப்படும் அக்கேடானது) எனக்கு நித்தியானந்தமாகிய வாழ்வைக்கொடுத்தலால் எ—று.

அழித்தும் என்பதிலுள்ள வும்மை சிறப்புப் பொருளது. புண்ணியன் - தரும சொரூபி. இஃது "அறவாழியந்தணன்" என்னும் வள்ளுவர் வாக்கானு நன்குணரப்படும்.

அ-கை: சிதம்பர தேசிகரது அடியார்க்கடையப்படும் பயன் கூறுதல்

21. திறம்வேண்டி னல்ல செயல்வேண்டிற் சேம		ம்
பெறவேண்டிற் செத்துப் பிறவா—நெறிவேண்டி		ற்
செய்யதிருப் போரூர்ச் சிதம்பரப் பேர்த் தேசிகற்		கு
மெய்யடிய ராகிவிடு மின்		*

பொ-ரை. விவேகிகளே! உமக்கு உறுதிப்பொருள் கிடைக்க வேண்டுமாயின், நல்லொழுக்கம் வரவேண்டுமாயின், சுகானுபவம்

பெறவேண்டுமாயின், முத்திமார்க்கங் கிடைக்கவேண்டுமாயின் அழகு பொருந்திய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சிதம்பர மென்னுந்திருநாமமுடைய ஞானசாரியருக்கு உண்மையாகிய தொண்டராகுமின். அவ்வாறு தொண்டுபடுவீராயின் நீவிர் விரும்பிய அவ்வெல்லாமும்மாலடையப்படும். எ—று.

என்பது முன்னும் பின்னும் சென்றியைந்தது. வேண்டின்-ஆகிவிடுமின் எனவியையும்.

உறுதிப்பொருள்-அறமும், பொருளும். சுகம் - விஷயசுகம். (21)

அ-கை:- குருமூர்த்தியிடம் சொரூபதிருஷ்டியால் யானீயாகவும்,உபாதிதிருஷ்டியாலுன்னுடைமையாகவு மிருக்கின்றேனென்பதைக்குறிப்பித்தல்.

22. மின்னிப் பொழிகாள மேகமே வேறு கா
தென்னி லிலகு மிளங்கதிரே—மன்னுவள ம்
பூத்ததிருப் போரூரிற் பொன்னே கடைபோக க்
காத்த லுனக்கே கடன் *

பொ-ரை. பெய்யவேண்டிய நிலங்களுக்குத் தக்க காலங்களிற் பிரதியுபகாரங் கருதாது மின்னலிட்டு ஜலம் பொழிகின்ற கரியமுகில்போல அருள் புரியவேண்டிய மெய்யன்பர்களுக்குப் பக்குவ காலங்களில் அவர் விரும்பியவற்றைப் பிரதியுபகாரங் கருதாது வழங்குகின்ற சற்குருநாதா! என்னிடதது் பிரிவின்றியேகமாக விளங்குகின்ற வுதயகாலபாநுவாக விருந்து அஞ்ஞான வடிவ விருட்கூட்டதையும் விக்ஷேபவடிவ பனிக்கூட்டத்தையுங் கெடுத்தவனே! நிலைபெற்ற வளத்தாற் பொலிகின்ற திருப்போரூரின்கட் பொன்போல் விளங்குபவனே! அடியேனை நிறைவேறப்பாதுகாத்தல் உனது கடமை. எ—று.

மேகமே, கதிரே, பொன்னே என்பன உவமையாகு பெயர். உனக்கே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை.

இலக்கியார்த்த பாகத்தால் யானீயாயிருப்பினும் வாச்சி யார்த்த பாகத்தாலடிமையாயிருக்கின்றேனென்பார்.

"வேறுகாதென்னிலிலகு மிளங்கதிரே கடைபோகக் காத்த லுனக்கேகடன்" என்றார். (22)

அ-கை:- அஞ்ஞானத்தைக் கெடுத்தருளிய சற்குரு மூர்த் தியே! மேலுமின்னவித நன்மையருளுகவெனல்.

23. கடங்காத்து நல்லோர் களாலியற்றி வைத் த
மடங்காத்து மாய்ந்த மடந்தீர்த்—திடுபோ ரூ
ரெந்தாய் நிருவிகற்ப வின்ப நிட்டை நீங்கா த
மைந்துசிந்தைக் கெய்தவருள் வாய் *

பொ-ரை:- தேகத்தைத் தானெனை நிச்சயித்துப் பாதுகாத் தும் மேலும் அதன் காப்பின்பொருட்டு உத்தமர்களாற் கட்டப் பட்டிருக்கின்ற அன்ன சத்திரங்களுக்குக் காவலாளனாயிருந்தும் அவ்வபிமானச் செயல்களாலிறந்து பிறத்தற்கேதுவாயிருந்த வறியா மையைக் கெடுத்தருளிய திருப்போரூரின்கட் பொலிகின்ற சற் குருநாதா! மேலும் பிரஹமாநந்தத்திற் கேதுவாகிய நிருவிகற்ப சமாதியினின்று விலகாது நிலைத்து நிற்றற்குரிய வலிமையிம் மனத்திற்குப் பொருந்துமாறு திருவருள்புரிக. எ—று.

மாய்ந்ததற் கேதுவாகிய மடத்தை மாய்ந்தமடம் என்றார்.

இம்மனத்திற்கு வாசனைக்ஷயமுளதாமாறருளுக என்பார் "நிருவிகற்ப வின்ப நிட்டை நீங்காத மைந்து சிந்தைக்கெய்தவருள் வாய்." என்றார். (23)

அ-கை:- விஷயக்காக்ஷி யொழிபால் மனத்திற்குளவாகும் பயன் கூறுதல்.

24. வாய்க்கும்ப லாற்றான் வருமேன்மே லாகவின் ப
நோய்க்கும்ப னீங்கி யொறுங்குமே—தாய்க்கும் ப
லெண்மடங்கு செய்தயையா னேர்ப்போரூ ரெம்மான்ற
ளுண்மடங்கி நெஞ்சே யுனு. *

பொ-ரை:- ஒரு தேகத்தைத் தந்ததாய் அநித்தியமாகிய அவ்வொரு தேக விஷயமாகச் செய்யப்பட்ட கருணைபோலாகாமல் அதனினும் பலவாகிய வெட்டுமடங்கு (நித்தியத்தன்மையைத் தருதலாலளவு செய்யமுடியாததாகச்) செய்த கருணையாளனுகிய வழகிய திருப்போரூரின்கண்ணெழுந்தருளிய எமது பிரானுடைய திருவடியை மனமே! நாமரூபக்காக்ஷியினின்று திரும்பியந்தர் முகமாக நின்று சிந்தனைசெய். அவ்வாறு செய்யின் பலவழியாலும் ஒன்றினு மொன்றதிகமதிகமாக வனுபவத்திற்கு வருகின்ற சுகங்களெல்லாம் கிடைக்கும். வியாதிக் கூட்டங் களெல்லாம் பொடிபட்டொழியும். எ—று.

முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஏகாரம் அசைநிலை. தாய்க்கும் என்பது உருபு மயக்கம். பல்லாறு பலாறெ‌ன நின்றது.

பல்லாறு—ஆன்மதரிசனம், அத்துவைத தரிசன முதலியன. (24)

அ-கை:- குருவின்றிருவடியினின்று சலித்து நீங்க வெண்ணுகின்ற மனத்திற் கறிவுறுத்தல்.

25. உன்னியுன்னிப் பார்த்து முருமைபினுற் போரூரி ன்
மன்னிறைதா ணீங்க மதியாதே—நன்மன மே
நீகாண்டற் கொல்லா னிழலளிப்பா னின்றத ன
தாகார மாகையுன்வாழ் வாம் *

பொ-ரை:- நற்செயலுடையமனமே! பலநாளாகச் சிந்தித்துச் சிந்தித்துப்பார்த்துத் தரிசனங்கொடாமை மாத்திரத்தாற்

றிருப்போரூரின் கண்ணெழுந்தருளிய நமதிறைவனாகிய சற்குரு நாதன் றிருவடியைவிட்டு நீங்க வெண்ணுகின்றாயவ்வாறெண்ணு தல் உனக்குக்கூடாது.என் தரிசனங்கொடாதபோது நீங்க வேண்டுவதன்றோ முறையென்பாயாயின் அவனுன்னாலறியப்படுந்தன்மையனல்லனென்க. அப்படியானால் அம்முயற்சி பயனற்றதன்றோவெனின் பயனற்றதன்று. நீயத்திருவடியிலடங்கின் அக்காருண்ணியமூர்த்தி யத்திருவடி நிழலை (பிரகாசத்தை)க்கொடுப்பன். அந்நிழலுள்ளதாகவே யத்திருவடியினாகாரத்தைப் பெறுவாய். அப்பேற்றையடைந்திருக்கையே யுன்முயற்சிக்குப் பயனும் உன்னாலடையத்தக்க சுகவடிவ வாழ்க்கையுமாம். எ—று,

மதியாதே யென்பதின் ஏகாரம் "முன்னிலை முன்ன ரீயு மேயு"மென்பதனால் வந்த எதிர்மறை வினை முற்று விகுதி. (25)

அ-கை:- நாமரூபங்களிற் பற்றுள்ளார்க்கும் அஃதில்லார்க்கும் பயனிவையெனல்.

26. ஆமெனவு மொன்றைபிது வல்லவென வுங்கூ
நாமா தியிலழுந்து நாட்டமதா—லேமைந்
புத்தியுளார் வாய்ப்போர் புரிந்திறப்பார் போரூர
பத்தரது கண்டுநகைப் பார்

றிதன் *

பொ-ரை:- பெயர் முதலிய யாதொரு கற்பிதக்குறிகளுமில்லாமல் அகண்டாகாரமாயுள்ள பரம்பொருளை யாதேனுமொரு காரணவாயிலாக வறிவித்தற் பொருட்டிடப்பட்ட பேதத்தோடு கூடிய பலவகை நாமரூபங்களோடு கூடிய மூர்த்திகளுள் ஒவ்வொரு நாமரூபங்களிலழுந்திய விருப்பத்தாற் சில மந்தமதியாளர்தத்தமக்கு விருப்பமாகிய நாமரூபங்களோடு கூடிய மூர்த்திகளைப் பதிப் பொருளாமெனவும், தமக்கு விருப்பமில்லாத வன்னிய மூர்த்திகளைப் பசுப்பொருளாமெனவுங்கூறி அது காரணமாக

வொருவரோடொருவர் வாய்ச்சண்டையிட்டு அம்மயக்க நிச்சயத் தாற் பிறந்திறந்து வருந்துவார். திருப்போரூரிலெழுந்தருளிய சிதம் பரதேசிகன் மெய்யடியார் அவரவ்வாறு செய்யுஞ்சண்டையைப் பார்த்து அவரது அறியாமையையிகழ்வார். எ—று.

எனவே யிவரப் பரம்பொருளினுண்மை தெரிந்த ஞானிகளென் பது பெறப்படுகின்றது. ஏகாரம் அசை நிலை. (26)

அ-கை:- சற்குருமூர்த்தியினிடத்துத் தன்மனத்திற்கின்ன பணியருளுக வெனல்.

27. பாராதி பூதப் பரப்பாய்ப் பரந்துநின்று ம்
பேராதி யொன்றுமிலாப் பேரொளியே—சீரா தி
யோங்கு சமரூ ருடையா யுளமுன டி
நீங்கா தமைபவருணீ *

பொ-ரை:- பிருதிவியாதி பஞ்ச பூதங்களாகவும் அவற்றின் காரியமாகி விரிந்த பிரபஞ்சமாகவும், வியாபித்து நின்றும் நாம முதலிய கற்பிதக்குறிகளொன்றுந் தன்னிடத்தில்லாத சொப்பிர காச சொரூபியே! செல்வமுதலிய வளங்களாலுயர்வு பெற்ற திருப் போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருமூர்த்தியே நீ இம்மனமா னது உனதுதிருவடியினின்று நீங்காதடங்குமாறு திருவருள் புரிக. எ—று.

பாராதி பூதப் பரப்பா யென்றது சோபாதிக சொரூபத்தை. பேராதி யொன்று மிலாப் பேரொளியே யென்றது நிருபாதிக சொ ரூபத்தை. (27)

அ-கை:- குருமூர்த்தியினிடத்து முன்றனக்குச் செய்த பெருங்கருணைச் செயலைக் கூறி மேலுங் கருணைபுரியுமாறு வேண்டிக்கோடல்.

28. நீயாரென் பார்க்கெதிரே நிற்பதுட லென்னு து
நாயினுங்கீ ழாய்நா னரனென்று—பேய்பிடிக்க ப்
பட்டேன்போற் கூறும் பழியையம ரூரிலத்த ந்
தொட்டழித்தாய் நீயே துணை. *

பொ-ரை:- இச்சரீரத்தைப் பார்த்து நீ யாரென்று வினு வினுர்க்கு எதிரிற் காணப்பட்டு நிற்பது உடலாதலால் அதனை யுள்ளபடி யுடலென்று கூறவேண்டியதாயிருக்க அவ்வாறு கூறு மல் நாயறிவினுங் கடைப்பட்ட அறிவினனுய் நான் ஒரு பிசாசாற் பிடிக்கப்பட்டிருப்பின் எவ்வாறு அப்பிசாசு நானுகவும் அதன் செயல் முதலியன வென்செயல் முதலியனவாகவும் கூறுவேனே அவ்வாறு இச்சரீரம் நானுகவும் இதன் செயல் முதலியன என் செயல் முதலியனவாகவும் நிச்சயித்து நான் மனிதனென்று கூறிய நிந்தையை முன்னொரு நாளிற் றிருப்போரூரின் கண்ணு னது திருக்கரத்தா லெனதுச்சியைப் பரிசித்து நாசஞ்செய்தரு ளிய பெருங்கருணையாளனே! அந்நாட்செய்த காருண்ணியம் போல வினியெந்நாளு நீயே துணையாகுக. எ—று.

ஏகாரம் இரண்டனுள் முன்னது அசை. பின்னது பிரிநிலை. தேற்றமெனினு மமையும். கூறுவதால் உண்டாம் பழியை கூறும்பழி யென உபசரித்துக் கூறினுர். கீழாயென்பது கூறுமென்பதனேடு சென்றியையும். (28)

அ-கை:- குருமூர்த்தியைப் பல விசேடணங்களாற்றுதித் துத் தன்னை முற்றும் பாதுகாத்தருளும்படி வேண்டிக் கோடல்.

29. துணையென் றடைந்தேன் றுயரொழித்தா ளென் று
மிணையொன்று மில்லாத வேகா—பணையொன் று
பூம்பொழிலார் போரூரிற் பூரணனே யாரணமு ந்
காண்பரியா யுன்றன் கழல். *

பொ-ரை:- பிரபஞ்சப் பொருள்களனைத்துந் தன்னிடத் தத்தியஸ்தமாதலாற் றனக்குச்சமமா யாதொரு பொருளு மொரு காலத்து மில்லாதவத்துவைத சொரூபியே! மலர்களானிறைந்த கிளைகளோடு கூடிய சோலைவளம்பொருந்திய திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய பரிபூரண சொரூபியே வேதாதீதனாகிய சற் குருநாதா! உன்னுடைய திருவடியேதாரகமென நம்பிச்சரண் புகுந்தேன். எனது துன்பங்களைக்கெடுத்து முற்றிலும் பாதுகாத் தருளுக. எ—று.

என்று மென்பது பின்னும், பூவென்பது முன்னுஞ் சென் றியைந்தன. (29)

அ-கை:- முன் சஞ்சிதத்தைக் கெடுத்ததுபோல இக்கா லத்திற் பிராரத்தத்தையும் மாற்றும்படி யாசிரியரை வேண்டிக் கோடல்.

30. கழலடைந்த நாயேன் கடும்பவநோய் வித் தை
யழலடைந்த பஞ்சி னழித்தாய்—நிழலடைந் த
வாரத்த மொன்றீண் டமருரா செய்கொடு மை
சாராது சாரவரந் தா. *

பொ-ரை:- திருப்போரூரி லெழுந்தருளிய சற்குருநாதா! உனது திருவடியைச் சார்ந்த நாயினுங் கடையேனாகிய வென் னிடத்துக் கொடிய பிறவிப் பிணிக்குக் காரணமாயிருந்த சஞ்சித கன்ம மனைத்தையும் அக்கினியிற்பட்ட பஞ்சு, அதனாலெரிக்கப் பட்டு நாசமாதல்போல ஞானாக்கினியாலெரிபட்டு நாசமாகும்படி செய்வித்தாய். இனியொருவனது நிழல்போல அனுபவித்தால லது சரீரத்தை விட்டு நீங்காததாகிப் பொருந்தியுள்ள பிராரத்த கருமமொன்று மாத்திரம், அதனாற் செய்யப்படுங் கொடுமைகளொ ன்றுஞ் சாராமல் என்னாலிவ்விடத்து அனுபவிக்கப்பட்டொழியு மாறருள் புரிக. எ—று.

நிழலடைந்த வென்பது உவமைத் தொகை. (30)

அ-கை:- ஞானகன் மவிந்திரியங்களுளின்னதன் இன்ன செயல் பெருகவும், இன்னவற்றினின்ன வாசனை நசிக்கவுமருளுக எனல்.

31. தாவும் பரிகளாச் சத்தாதி வீதிகளி ன்
மேவிந் திரிய விரையடக்காய்—நாவொன்று ந்
தென்சா ரமஞரிற் றேசிகா செப்பரி ய
வுன்சீரே பாடிபுவக் கும். *

பொ-ரை:- அழகுபொருந்திய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருநாதா! எனது நாவொன்று மாத்திரம் அளவிட்டுச் சொல்லுதற்கருமையாகிய வுனது புகழையே பாடிக்களிக்கின்றது. அதற்கச் செயல்பெருகவும், தாவிச் செல்லுகின்ற குதிரைகள்போலச் சத்த, பரிச, உருவ, இரச, கந்தங்களென்று சொல்லப்படுகின்ற வழிகளில் முன் சென்ற பழக்கத்தாற் பயனின்றிச் செல்லுகின்ற சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, கிராணமென்று சொல்லப்படுகின்ற பஞ்சஞானேந்திரியங்களின் அவ்வாசனை நாசமடையவும் கிருபை செய்க. எ-று. தீய வாசனைக்கு நாசம் வேண்டப்பட்டமையாற் சுத்த வாசனைக்குப் பெருக்கம் வருவிக்கப்பட்டது. ஏகாரம் பிரிநிலை. (31)

அ-கை:- அந்தக்கரண வாசனையை யடக்குக வெனல்.

32. கும்பிமதங் கொண்ட குணம்போன் முன் வாசனையால்
வம்பிழைக்குங் கெட்ட மனங்கெடவே—நம்படியா ர்
மேவுதிருப் போரூர் விளங்கொளியே மெய்ம்மருந்தாஞ்
சேவடியே தந்தருந்தச் செய். *

பொ-ரை:- உன்னை நம்பிய அன்பர்கள் விரும்புகின்ற திருப்போரூரின்கண் விளங்குகின்ற

சச்சிதாநந்த சொரூபியே! யானைக்கு மதம்பிடித்தலாலுண்டா கின்ற தீச்செயற்சிந்தனம்போல இம்மனத்திற்கு முன் விஷயா காரமடைந்த கெட்ட பழக்கமாகிய வாசனைப் பிடிப்பாலுண்டா கின்ற தீச்செயற் சிந்தனங் கெடும்படி செம்மையாகிய வுனது திருவடிச் சிந்தனமென்று கூறுகின்ற வுண்மையாகிய மருந்தையே கொடுத்துப் புசிக்கச்செய்க. எ—று.

அடியென்றது அதன் சிந்தனத்தை. கெட்ட வென்பது முன் னுஞ் சென்றியைந்தது. மனமென்றது ஈண்டுச் சிந்தனத்தை. ஆம் என்பதும், ஏகாரமும் பிரித்துக் கூட்டப்பட்டன. பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரம் பிரிநிலைப் பொருளில் வந்தது. (32)

அ-கை:- வாசனுக்ஷயமும் மனோநாசமு முளவாமாறருளுக வெனல்.

33. செய்வா சனைக்கேடு தீயமனக் கேடொருங் கே
நையாம லீண்டுமின்ப நண்ணவே—மெய்யடியா ர்
சூழநிறைந் தார்த்துத் துதிபுரிந்து கொண்டா ட
வாழுஞ் சமரூர் மனே. *

பொ-ரை. மெய்ம்மையாகிய வடியவர்கள் நாற்புறங்களிலு நிறைந்து நின்று பேரொலி முழக்காற்றுதி செய்து புகழத் திருப் போரூரின் கண்ணெழுந்தருளிய யதிராஜனே அடியேனுக்கு விதேக முத்தியின் மாத்திரமின்றி யிவ்வுடலோடு கூடியிருக்கு மிடத்துந்துன்புறாது உனது திருவடியாநந்தங் கிட்டுமாறு வாசனு க்ஷயமும் மனத்தின் றூலசொரூபக்கேடுமாகிய விரண்டும் ஏககா லத்திலுண்டாகும்படி கிருபைசெய்க. எ—று.

ஏகார மூன்றனுள் முன்னுள்ளவை அசைநிலைகள், பின் னது விளியுருபு. உம்மை எச்சவும்மை. (33)

அ-கை:- குருமூர்த்தியைப் பல விசேஷணங்களாற் றுதித்துப் பிரபஞ்சமெல்லாமுனது சொரூபமெனல்.

34. மன்னேயே மங்கா மணிவிளக்கே வான்சுடரே
தன்னேரி லாயெனைமுன் றந்ததந்தா—யன்னே
திருப்போரூர்ச் செல்வா சிதம்பரதே வாவுன்
னிருப்பேயா மெங்கு மெலாம். *

பொ-ரை. யதிராஜனே, குறைவற்ற பிரகாசமுடைய விரத்தின தீபமே, மகிமை பொருந்திய சொப்பிரகாச சொரூபியே, உவமையற்றவ (ஏக)னே, முன்னொருநாளிலென துண்மை வடிவத்தை யெனக்குக் கொடுத்தருளிய தந்தையே, கருணையா லொப்பற்ற தாயே, திருப்போரூரிலெழுந்தருளிய வின்ப சொரூபியே, சிதம்பரமென்னுந் திருநாமங்கொண்டு விளங்குகின்ற சற்குருநாதா! மனத்தின் கற்பிதம் கற்பிதமாகக் கூறுகின்ற எல்லா விடங்களும் அவற்றிலுள்ள வெல்லா வஸ்துக்களுமுன்னுடைய சச்சிதாநந்த சொரூபமேயாம். வேறல்ல. எ—று-

மன்னேயே என்பதிலுள்ள ஏகாரம் அசைநிலை. (34)

அ-கை:- விவகாரத்திற் றோற்றுகின்ற பேதம் வாக்கு மனத்தளவன்றி யனுபூதியளவி லில்லையெனல்.

35. எல்லாநீ யென்னிலெனை யாரென்பேன் யானென்னி
லல்லவென வத்துவித மாண்டழிவு—புல்லுதலா
லோங்குபுகழ்ப் போரூரா வுள்ளமுரை யோய்ந்துநிற்ற
னீங்காத பாங்கா நிலை. *

பொ-ரை. மிகுந்த புகழ்பொருந்திய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருநாதா! பிரபஞ்சப் பொருள் களனைத்து மத்துவிதஞகிய உன்னுடைய சொரூபமென்று சுருதி

கூறுதலாற் சொப்பிரகாச சச்சிதாநந்த சொரூபமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற வென்னையாரென்று கூறுவேன். அங்ஙனங் கூறவேண்டின் என்னை யுனக்கு வேறாக நானென்றல்லவா கூற வேண்டும். அவ்வாறு கூறின் சச்சிதாநந்த சொரூப நீ யொருவன், சச்சிதாநந்த சொரூப நானொருவன் என்னும் பேதத்தால் நாநாத்துவம் (பலவாதற் றன்மை) தோற்றும். அது தோற்றியபோது சுருதியிற் கூறிய அத்துவைதமானது அன்றெனப்பட்டு நாசத்தை யடையும். அடையவே சுருதிக்கு அப்பிரமாணத்துவஞ் சித்தித்தலாகிய விரோதமுண்டாகும். ஆதலாலப் பேதத்திற்குக் காரணமாகிய நீ, நான் என்னும் பெயர் மாத்திரமாயுள்ள கற்பனையைக் கற்பித்தற்குக் (நினைத்தற்குஞ் சொல்லுதற்குங்) கருவிகளாயிருக்கின்ற மனமும் வாக்கு மொழிய நிற்றலேயச் சுருதிக்குச் சம்மதமாகிய பிரிவற்ற அத்துவைத நிலையாம். எ—று. (35)

அ-கை:- அஞ்ஞதசை ஞானதசைகளிற் றனக்குளவாகிய வனுபவங்களையும் அவற்றின் பயன்களையுங் கூறுதல்.

36. நிலையாகக் கண்டவெலா நின்றகனுப் போ ல
விலவாக வுள்ளதுள்ள தேயா—யிலகுகின் ற
றெந்தை சமரபுரி லேயாண்ட வன்றுமு த
லுய்ந்தே னுவந்தே னுளம். *

பொ-ரை. என்றந்தையாராகிய சிதம்பர தேசிகர் முன்னொரு நாள் திருப்போரூரில் என்னை யடிமையாகக் கொண்டுபதேசித்த வவ்வுபதேச மகிமையாலுதயமாகிய ஞானப்பிரகாசத்தால் அதற்கு முற்காலத்திற் சத்தியம்போலக் காணப்பட்ட பிரபஞ்சப் பொருள்களெல்லாம் சொப்பனவஸ்தையிற் சத்தியம்போல விளங்கி நின்ற அச்சொப்பன பதார்த்தங்களெல்லாம் சாக்கிர ஞானப் பிரகாசத்தால் மித்தையாதல்போல மித்தையாகிப்போக அநாதியிலேயுள்ள சச்சிதாநந்த மாகிய வெனது வாஸ்தவ சொரூபமே யத்

துவைத சத்தியமாக விருந்து விளங்குகின்றது. அவ்விளக்கத் தால் முன் ஜகத்துச் சத்தியமாக விளங்கிய காலத்துப் பிறந்து மிறந்தும் அநித்தியனாய் வருந்திய யான் அந்த ஞானோதய காலத் திற்குப் பின் அத்துக்க ரூபப்பிறப்பிறப்பினின்று நீங்கி நித்தியனாயி னேன். அந்த நித்தியத் தன்மையினுணர்ச்சியா லந்தக்கரணத்தின் கண்ணிரங்குசதிருத்தியு (தடையற்ற வாநந்தமு)டையவ னாயி னேன். எ—று.

அஞ்ஞானமானது தனது காரியாத்தியாசவடிவ நாமரூபத்தாற் பிரஹமான்மாவினுடைய சச்சிதாநந்த சொரூபத்தை மறைத்திருந் ததால் முற்காலத்திற் றேகந்தானாகவும் ஜகத்துச் சத்தியமாக வும் விளங்கின வென்பார் "நிலையாகக்கண்டவெலாம்" எனவும், அவை (தேகமும் அவ்வத்தியாச ஜகத்தும்) சாக்கிர ஞானப்பிரகா சத்தாற் சொப்பன பதார்த்தங்களெல்லாம் மித்தையாதல்போலச் சற்குரு மூர்த்தியினுப தேசத்தாலுதயமாகிய பரிபூரண ஞானப் பிரகாசத்தால் முன்னுள்ள சத்தியத்தன்மை கெட்டு மித்தை யாயின. ஆனாலும் மித்தியாத் தன்மை யெத்தன்மைத்து (சத்தி யத்தன்மையினும் மித்தியாத் தன்மைக்குப் பேதம் யாது) எனின்

நேத்திர விருத்திக்குப் பிரத்தியக்ஷமா (நேரா)க விளங்கிய கல் முதலியன பாபவிநாசத்திற்றாமிரபருணி நதி நீரினுட் போ டப்பட்ட காலத்திலவற்றின் சொரூபம் முழுது மறைந்து விடா மல் நேத்திர விருத்திக்குப் பிரத்தியக்ஷமாக விளங்குகின்ற நீரான் மறைக்கப்பட்டு அவற்றின் பிரகாசங்குன்றி வேற்றுத் தன்மை யுடையனவாய் விளங்குமாறுபோலச் சொப்பிரகாசமாகிய சச்சி தாநந்த சொரூபத்தா லகமும் புறமும் பூரிக்கப்பட்டு (மறைக் கப்பட்டு) நாம"சொல்"மாத்திரமாக அஃதாவது சொல்லிய சொற் குப் பொருளில்லா தனவாயினவென்பார் "நின்றகனப்போல வில வாக" எனவும்:

கயிற்றுப் பாம்புஸ்தலத்தில் அதிஷ்டான ஞானப்பிரகாசத்தாலத்தியஸ்த நிவிர்த்தியாயினவுடனே முன்னமே யுள்ள கயிறே யிருந்து விளங்குதல்போல ஜகத்துப் பிராந்தியானது அதிஷ்டானமாகிய பிரஹமான்மாவினது பரிபூரண அத்துவைத ஞானப் பிரகாசத்தால் நிவிர்த்தியாகியவுடனே முன்னமே சித்தித்திருக்கின்ற தனது சச்சிதாநந்த சொரூபமே யிருந்து விளங்குகின்றதென்பார் "உள்ளதுள்ளதேயாயிலகுகின்றது" எனவும்,

முன் ஜகத்தைச் சத்தியமென்று நிச்சயித்திருந்த மயக்கத்தா லநித்தியனுய்ப் பிறந்துமிறந்தும் வருந்திய யான் குருவுபதேசத்தாலுதயமாகிய ஞானப்பிரகாசத்தால் அத்துக்கரூபவ நித்தியத் தன்மையினின்று நீங்கி நித்தியனுயினேனென்பார் "எந்தை சமரூரிலேயாண்ட வன்று முதலுய்ந்தே" னெனவும், அந்நித்தியத்தன்மையி னுணர்ச்சியால் நிரங்குச திருத்தியுடையவனுயினேனென்பார் "உவந்தேனுளம்" என்வும் கூறினுர்.

ஏகாரமிரண்டனுள் முன்னது பிரிநிலை. பின்னது அசைநிலை. (36)

அ-கை:- தனக்குச் சற்குருமூர்த்தியினிடத்தன்பு பெருக வேண்டுமென வேண்டிக்கோடல்.

37. உள்ளத் திருந்தின் புணர்த்தியுனை யுன்னு தா
கள்ளருள்ளத் துள்ளே கரப்பவனே—கொள்ளவருள்
போரூ ரிறைவாநின் பொன்னடியி லெந்நாளு
நாரூர வேண்டுகின்றே னுன். *

பொ-ரை. உன்னையுள்ளபடி யன்பாற் சிந்திக்கின்ற மெய்யடியார்களுடைய வந்தக்கரணத்தின் கண்ணந்தரியா மியாக விருந்து பிரஹமாநந்தத்தை யவருக்கு விளக்கி, அவ்வாறுள்ளபடி சிந்திக்காத கள்ள மனமுடையவேடதாரிகளுடைய வந்தக்கரணத்தின் கண்ணிருந்தும் மெய்யடியார்க்குப் போலருள் செய்யா

மலவ்விடத் தொளித்துக்கொள்பவனே, திருப்போரூரின் கண்ணெ ழுந்தருளிய சற்குருநாதா! உனது அழகிய திருவடியினிடத்து எக்காலத்து மடியேனுக்கன்பு பெருகவேண்டுமென வாசைப் படுகின்றேன். அவ்விச்சையின்படி யவ்வன்பினை நான் பெற்றுக் கொள்ளுமாறு திருவருள்புரிக. எ—று.

ஏகார மிரண்டனுள் முன்னது அசைநிலை. பின்னது விளி யுருபு. கள்ளர் என்றதனுன் மெய்யடியாரை வருவித்தாம். (37)

அ-கை:- துவம்பதார்த்த சோதனமுறைகூறல்.

38. நானு யிருந்தநடந் தேன்முதல நற்போரூர்க்
கோனுண்ட நாளேயக் கூறொழிய—நானே நா
னுயினேன் மற்றவைகட் கங்காதி யென்றயலாய்ப்
போயினவென் னுலறியிப் போது. *

பொ-ரை. நானென்சத்தத்தி (சொல்லி)ன் வாச்சியார்த்த மாகக் கூறப்படுகின்ற ஜடசேதனக்கலப்பாயுள்ள ஜீவனுகிய வெ னது தொழில்களாக நிச்சயித்திருந்த சென்றேன், கேட்டேன், பரிசித்தேன், கண்டேன், உருசித்தேன், மோந்தேன். சங்கற் பித்தேன், நிச்சயித்தேன், சிந்தித்தேன், அபிமானித்தேன், அறி யேன் என்பனவும், பிறவும் நன்மை மிகுந்த திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வெனது சற்குருநாதன் என்னையாட் கொண்ட காலத்திலேயே யெனது வாச்சியார்த்தத்துள்ள கர்த் திருத்துவ முதலியவற்றேடு கூடிய கர்பித வமிசங்கள் கர்பிதங் களேயாக (நானல்லவாக) மிஞ்சியிருந்த விலக்கியார்த்த வடிவ கூடஸ்த சேதனமேயாக நானுயினேன். அவ்வாறு கற்பிதங்கள் கர்பிதங்களாக நான் கூடஸ்த சேதனமாயினேனெனக் கூறின் மேற்கூறிய சென்றேன் முதலிய தொழில்கள் கூடஸ் தனுடையனவாம். ஆகவே யவன் விகாரியும், அநித்தியனும், ஜட—

னுமாவனன்றேனெனின் அதற்கு மேற்கூறுகின்றார். அப்படியன்று மேற்கூறிய சென்றேன் முதலிய தொழில்களுள் சென்றது தேகமும், கேட்டது சுரோத்திரமும், பரிசித்தது துவக்கும், கண்டது சக்ஷுசும், உருசித்தது சிங்ஙுவையும், மோந்தது கிராணமும், சங்கற்பித்தது மனமும், நிச்சயித்தது புத்தியும், சிந்தித்தது சித்தமும், அபிமானித்தது அகங்காரமும், அறியாதது அஞ்ஞானமு மாகின்றனவாதலாற் றேகாதிகளே யத்தொழில்களுக்குக் கர்த்தாவாமென்று இக்காலத்திற் சச்சிதாநந்த வடிவகூடஸ்தனுகிய என்னாலறியப்படுதலாலவை யெனக்கு வேறாயின. வேறாகியவக் காரணத்தால் அசத்தும் ஜடமுமாயொழிந்தன. எ-று

தொழில்களெல்லாம் முற்காலத்திலான்மாவை யாசிரயித்தனவாகக் காணப்பட்டனவென்பார் "நானுயிருந்த நடந்தேன் முதல" எனவும், அவ்வாறு காணப்பட்டமை அஞ்ஞான மயக்கத்தாலாகிய கற்பனையாதலின் அது சற்குரு மூர்த்தியினுபதேசத்தால் நீங்கிற்றென்பார் "போரூர்க் கோனுண்டநாளே யக்கூற்றொழிய" எனவும், அம்மயக்க நீங்கிய விக்காலத்தில் ஆன்மா தானுகவும் அநான்மாவாகிய தேகாதிகள் தனக்கு வேறாகவும் வேறு வேறறியப்பட்டனவென்பார். "நானே நானுயினேன் மற்றவைகட்கங்காதி யென்றயலாய்ப் போயின வென்னாலறியிப் போது" எனவும் கூறினார்.

ஏகாரங்களிரண்டும் தேற்றப் பொருளில் வந்தன. பிரிநிலை யெனினுமமையும். மற்று அசைநிலை. அறி முதனிலைத் தொழிற் பெயர்.

(38)

அ-கை:- குருமூர்த்தியே எனது நாவிற்கும் மனத்திற்கு முனது பணியே யருளுக. எனல்.

39. போதாவே தாந்தப் பொருட்சுகா போரூரெ ன்
னுதா நினைப்பாட நாதாவே—சீ தா

சிதம்பரதே வாநினது செந்தா மரைத் தா
ணிதஞ்சார்ந்து நெக்கிட நன் னெஞ்சு *

பொ-ரை. சொப்பிரகாச ஞான சொரூபனே, உபநிடதப் பொருளாகிய பரமாநந்த சொரூபனே; திருப்போரூரிலெழுந் தருளியவென திறைவனே, தண்ணிய கருணையாளனே, சிதம்பர நாமங் கொண்டு விளங்குகின்ற சற்குருநாதா! எனது நல்ல நாவிற்கு உன்னை யெப்பொழுதும் பாடுதற் றொழிலருளுக. செம்மையாகிய தாமரை மலர்போன்ற வுனது திருவடியை யெப்பொழுதுஞ் சார்ந்துருக எனது நல்லமனத்திற்கன்பருளுக. எ—று.

நாவிற்குத் துதியும் மனத்திற்குப் பிரஹ்மாநந்தானுபூதியும் முன்பே சித்தித்திருத்தல் இந்நூலின் கண்ணுள்ள 31, 36, முதலிய பல செய்யுட்களாற் காணப்படுதலால் அவை நன்றே நன்மனம் என விசேடிக்கப்பட்டன. சொல்லின்ப நோக்கிப்பாடநாதா, சார்ந்துருக நெஞ்சுதாவெனக் கூறப்படினும் நாவிற்குக்கவிபாடித் துதிக்குந் தொழிலும், மனத்திற்குச் சார்ந்துருநதற்குரிய அன்பும் தா என்பது கருத்தாகக் கொள்க.

என்னென்பதும், தாவென்பதும், நிதமென்பதும், நல்லென்பதும் பிறவிடங்களிலுஞ் சென்றியைந்தன. ஏகாரம் அசைநிலை. (39)

அ-கை:- மனத்திற் கறிவுறுத்தல்.

40. நெஞ்சமே சீவித்து நிற்க விரும்புதியே ன்
மஞ்சுதாழ் மாட வரிசைசூ—ழஞ்சமரூர் த்
தாயனையான் செம்பதுமத் தாளிணையை நீங்கா து
நேயமுட னேசுமந்து நில். *

பொ-ரை. மனமே நீ வாழ்ந்து நிற்க விரும்புவாயாகில் மே

கங்கள் தவழா நின்ற மாளிகை வரிசைகள் நிறைந்த திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய தாய்போலுங் கருணையாளனாகிய சிதம்பரதேசிகனது செம்மையாகிய தாமரை மலர்போன்ற திருவடிகளைவிட்டு நீங்காமலன்போடு தாங்கி நிற்பாயாக. எ—று.

ஜீவித்து நிற்க விரும்புதியேல் சுமந்து நில்லென விதித்தமையால் அங்ஙனஞ் சுமந்து நில்லாயேல் அவனது திருவருள் வலியாலுனது சொரூபத்தைக் கெடுப்பேனென்ப தெஞ்சி நின்றது.

ஏகாரம் அசைநிலை. (40)

அ-கை:- குருமூர்த்தியிடம் தனது மனவிருப்ப நிறைவேறுமாறு வேண்டிக்கோடல்.

41. நில்லா வுடலை நிலையென்று போற்றியுன் ரு ட்
புல்லாத புல்லரிதம் போயொழிய—நல் ல
சமரூ ரிறைவாநின் ருளடியார் நாளு ந்
தமராகிச் சூழவருடா. *

பொ-ரை. நன்மையமைந்த திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருநாதா! அநித்தியமாகிய தேகத்தை நித்தியமெனக் கருதிப் பாதுகாத்து உனது திருவடியினிடத்தன்பு செய்யாத விழிகுணத்தவருடைய சிநேகமானது எப்பொழுதும் அடியேனைவிட்டு நீங்கியொழியவும் உனது திருவடித் தொண்டர்கள் உறவினராகி யெப்பொழுதுஞ் சூழ்ந்திருக்கவுங் கிருபை செய்க. எ—று.

நானும் என்பது முன்னுஞ் சென்றியைந்தது. (41)

அ-கை:- மனத்திற்கிதங் கூறுதல்.

42. தாவுந் தொழில்கற்றென் பெற்றுய் சதுர்த்தச மா
மேவும் புவனமெலா மேல்கீழு—சாவியப ன்

மாலேதுன் புற்ருர் மனமேபோ ரூரிறைதா ன்
மேலடங்கி யின்பாய் விடு. *

பொ-ரை. எனக்கிதஞ் செய்கின்ற மனமே! விஷயங்களைக் குறித்துத் தாவித்தாவிச் செல்லுகின்ற தொழிலையிந்நாளளவுஞ் செய்துசெய்து யாது பயனடைந்தாய்? துன்புற்றுயன்றி யோரற்ப சுகமாயினு மடைந்தாயாசொல். ஆனுல் விஷயக்கவர்ச்சியாற் சுக மடையப்படாதோ வெனவினவுதியேற்கேள். பதினன்கென்னு மெண்ணுடையனவாகப் பொருந்தி நிற்கின்ற வுலகங்களுள் அன்னப்பக்ஷியாய்ப் பறந்து மேலுலகங்களிலும் பன்றி வடிவாய கழ்ந்து கீழுலகங்களிலும் அக்கினி மலையின் முடியையுமடியையு முறையே நெடுங்காலந் தேடியுமறிய முடியாது பிரஹமாவுந் திருமாலுமாகிய தேவரே துன்பமடைந்தனரன்றிச் சுகமடைந்தில ரெனப் புராணங் கூறுமாஞல் மற்றியாவர் சுகமடையவல்லு நராவரொருவருமாகாரென்க. அப்படியாஞற் சுகமடைதற்கு வழியில்லையோ வெனிற்கேள். திருப்போரூரின்கண் ணடியார்கட் கனுக்கிரகிக்கும் பொருட்டு மானுடவடிவாயெழுந்தருளிய நமது சற்குருமூர்த்தியினுடைய திருவடியின் கண்ணடங்கிய சைவற நிற்றி. அங்ஙனம் நிற்பாயெனின் ஆநந்தமடைவாய். எ—று.

சிறப்பும்மை விகாரத்தாற் றெக்கது. ஏகாரம் பிரமாதியர் பிரபாவத்தை யுணர்த்தி நின்றது. விடுவென்பது முன்னுஞ் சென்றியைந்தது. (42)

அ-கை:- மனத்தை நோக்கித் தொழில் சுகமா அஃதின்மை சுகமாவென வினவல்.

43. விடுகின்று யில்லை விடயங் களில்வீழ் ந்
தடுகின்ற தீப்பதங்க மாகிக்—கெடுமன மே

யீதோ சுகம்போரூ ரெந்தை கழனிழலி ற்
றீதற் றிருப்பதுவோ செப்பு. *

பொ-ரை. தன்னைத்தகித்துக் கெடுக்கின்ற நெருப்பினைத் தனக்குண்ணத் தகுந்த வுணவாகிய சுகசாதனமெனக் கருதிச் சார்ந்து அந்நெருப்பாற் றகிக்கப்பட்டுக் கெடுகின்ற விட்டிற் பறவைபோலத் தன்னைத் துன்புறுத்துகின்றன வாயுள்ள சத்தாதி விஷயங்களைச் சுகசாதனங்களெனக் கருதி யவ்விஷயங்களிலோடியோடி வீழ்ந்து துன்புற்றுக் கெடுகின்ற மனமே! இவை சுகசாதனமல்லவல்லவென எத்தனை விதமாகவோ வறிவுறுத்தினும் அவ் விடயங்களைக் குறித்தோடுகின்ற வோட்டத்தை விடுகின்றாயில்லை. துன்பகாரணமாகிய இவ்வோடுதற் றொழில் சுகம் என்பது உனது நிச்சயமா அல்லது திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய என்றந்தையாராகிய சிதம்பர தேசிகரது திருவடி நிழலிற் கலந்து அவ் விஷயாக்கினியால்வரும் தாபமாகிய குற்றமின்றி யசைவற்றிருத்தல் சுகமென்பதுனது நிச்சயமா கூறுக. எ—று.

உருவகப் படுத்திக் கூறிய உவமைப் பொருள்களிரண்டனுள் உவமையடை பொருளினும் பொருளடை உவமையினும் சென்றியைந்தன. ஓகாரங்கள் பிரித்துக் கூட்டப்பட்டன. சுகமென்பது பின்னுஞ் சென்றியைந்தது. (43)

அ-கை:- மேலவற்றையே வலியுறுத்தல்.

44. செப்புகின்றே றென்றுநன்னெஞ் சேயின்பஞ் சேருவழி
தப்புமொழி யன்று சமரூர்வா—ழப்ப ன்
றுணைத்தா டுணைசார் துயரின் விடய ந்
தணக்கும் பகையாந் தவிர். *

பொ-ரை. நல்லமனமே நீ சுகமடைதற் கேதுவாகிய வொரு வழி கூறுகின்றேன் கேள். அது யாதெனிற் றிருப்போரூரி லெ

ழுந்தருளிய நமது தந்தையாராகிய சிதம்பர தேசிகருடைய திரு வடிகளே யுறவாகும் அவற்ரேடு கூடுக. துக்கத்தைத தருகின்ற சத்தாதி விஷயங்கள் நீக்குதற்குரிய பகையாகும். அவற்றை விட்டு விலகுக. இதுகபடவார்த்தை யன்று. உனக்கின்பந் தருகின்ற வுறுதிமொழியென்றறிக. எ—று.

சேரு முதனிலைத் தொழிற் பெயர். ஆமென்பது முன்னுஞ் சென்றியைந்தது. (44)

அ-கை:- மனமேமேலைக் கவியிற் கூறியபடி குருவின்றிருவடி யிலடங்கி நின்ருயே லுனக்குண்டாம் பயனிவையெனல்.

45. தவிருந் துயரஞ் சமரூரி லெங் தை
யவிரு மலர்த்தாளி லன்பாய்க்—கவரின்றி ப்
புல்லிக் கிடக்குநிலை பூணுதிநெஞ் சேயத ணை
வெல்லுந்த ரம்பெருகு மே. *

பொ-ரை:- மனமே! திருப்போரூரிலெழுந்தருளிய எமது தந் தையாராகிய சிதம்பரதேசிகரது தாமரை மலர்போற் பிரகாசிக் கின்ற திருவடியினிடத்துப் பிரிவற்ற அன்பாற் கலந்து அடங்கி நிற்கின்ற நிலையினைப்பொருந்துக. அங்ஙனம் பொருந்தி நிற்பாயேல் உன்னிடத் தடைந்திருக்கின்ற துன்பங்கள் விலகும். இனியடையக்கடவனவாகிய துன்பங்களைக் கெடுக்கத் தகுந்த வலியதிகரிக்கும். எ—று.

ஏகாரம் ஈற்றசை. (45)

அ-கை:- தனக்கு இத் தகையர் பகைவ ரித்தகையருறவின ரெனல்.

46. மேவாரா வார்கள் விளங்கமரூ ரெந்தைசர ண்
மேவா தவர்களே மேவினர்—நாவா ர

வன்னவன்சீர் பாடியவ னங்கிரியம் போருகப் பூ
மன்னுமது வண்டாகு வார். *

பொ-ரை. புகழினலே சிறந்து விளங்குகின்ற திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வென்றந்தையாராகிய சிதம்பர தேசிகரது திருவடியைப் புகலிடமாக வடையாதவர்களே யவருக்கடிய வணுகிய வெனக்குப் பகைவராவர். அத்தேசிகரது புகழை நாத்தழும்புறப்பாடியவரது திருவடியாகிய தாமரை மலரினிடத்துண்டாகின்ற வாநந்தமாகிய தேனைப் பருகுதற்கு அதனை விட்டு நீங்காமற் பொருந்தி வசிக்கின்ற வண்டாகிய தொண்டர்களே உறவினராவர். எ---று:

விகாரத்தாற் ளுெக்கதும் தொகாததும் ஆகிய எகாரங்கள் பிரிநிலைப் பொருளில் வந்தன. (46)

அ-கை:- சற்குருமூர்த்தியினது திருவடித் தொண்டரிடத்து நமன் வாரானெனல்.

47. வாரானே யந்தகப்பேர் மன்னுவோன் முன்னெ ளி
லோரன்பன் பாலுற் றுதைபுண்டு—தீர்வருந்து ன்
புற்று னதனலே யொண்போரூ ரெந்தை தா
ளிற்று முடியா ரிடம். *

பொ-ரை. நன்மையமைந்த திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வென்றந்தையாராகிய சிதம்பர தேசிகருடைய திருவடியில் வணங்குகின்ற வடியவரிடத்து அவரை யுடம்பினின்று பிரித்துக் கொண்டு செல்லுதற்கு இயமன் வரமாட்டான் எதனலெனில் முன்னொரு காலத்தில் மார்க்கண்டேயனென்று மோரடியவனிடத்திலுயிர் பிரிக்கச் சென்று அதனலே பரமேசுரன் றிருவடியா லுதைக்கப்பட்டுத் தீர்தற்கரிய துன்பமடைந்தான். அவ்வச்சத்தாலென்க- ஆகையினலே விவேகிகளே நீவிரெல்லீரும்

நமனடையாதிருக்க விரும்பின் அச்சற்குரு மூர்த்திக்கடிய ராகுமின். எ—று.

அடியாரிடம் நமன் வாரானென்பது "மார்க்கண்டனுக்கா மறலிபட்ட பாட்டை யுன்னிப், பார்க்கிலன்பர்க் கென்னபயங் காண் பராபரமே', எனக்கூறிய ஸ்ரீ தாயுமானார் வாக்கியத்தானும், "நெஞ்சமேயுட லந்தமாதியைவிடார் நிற்கமற்றையர்க் கெல்லாம், வெஞ்சமற்குதிப் பரிதிவைக்கொருமிரு கண்டுபுத்திரன் சான்ற, லஞ்சலிவ்வுடற் கிறுதியிப்பொழுதென வறியொணுமையி னுநந், தஞ்சமென்றான் சரண்விடேலியாமுமச் சமன்வலி தடுப்பாமே" எனக்கூறிய ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் வாக்கியத்தானும் நன்கு விளங்கும்.

ஆகையினாலே விவேகிகளே நீவிரெல்லீரும் நமனடையாதிருக்க விரும்பின் அச்சற்குருமூர்த்திக்கடியராகுமின் என்பது இசை யெச்சம்.அடியாரிடம் நமன் வரானென்பது. நாளென்செயும் வினைதா னென்செயு நம்மை நாடிவந்த, கோளென்செயுங் கொடுங்கூற்றென் செயுங் குமரேச ரிரு, தாளுஞ்சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந், தோளுங் கடம்பு மெனக்குமுன்னே வந்து தோன்றிடினே. எனக்கூறிய ஸ்ரீ அருணகிரிநாதர் வாக்கியத்தானும். (47)

அ-கை:- சற்குரு மூர்த்தியின் றிருவடியானது ஐகத்தத் தியாசத்திற் குறவாகவும் பகையாகவு மிருக்கிறதெனல்.

48. இடமாகு மெல்லா மெனும்பொருள்கட் கிசை தே
படர்கற் பனைக்குப் பகையாய்—மடமுடைக் கு
மிம்மா நிலம்புகழு மோராகும் போரூர் வா
மும்மானெம் மானு மடி. *

பொ-ரை. இப்பெரிய பூமியின் கண்ணுள்ளாரி யாவராலும்

புகழப்படுகின்ற அழகுநிறைந்த திருப்போரூரின் கண்ணெழுந் தருளிய எனது தந்தையாராகிய சிதம்பர தேசிகருடைய எம்போ லிகளை யாட்கொள்ளுகின்ற திருவடியானது எத்தன்மைத்தாயிருக் கிறதெனில் ஒருவிதத்தா லஞ்ஞானத்தின் காரியமாய் எல்லா மென்று கூறுதற்குரிய பல பொருள்களின் சமுதாய வடிவமாய் விளங்குகின்ற பிரபஞ்சமாகிய வத்தியாசத்திற் காதாரமா (உறவா) கவும், மேலுமத்திருவடிதானே மற்றொருவிதத்தா லப்பிரபஞ்ச மாக விரிதற்குக் காரணமாகிய வத்தியாச வடிவ அஞ்ஞானத்தைக் காரியத்தோடு கெடுக்கத்தகுந்த வதிஷ்டானமா (பகையா)கவு மிருக்கின்றது. எ—று.

கயிற்றின்கண்ணத்தியஸ்தமாகிய பாம்பிற்கு அக்கயிறானது சாமானிய வமிச (இதுவெனும் வடிவ) த்தாலாதாரமாக விருத் தல்போலப் பரம்பொருளினிடத் தத்தியஸ்தமாகிய ஜகத்திற்கு அப்பரம்பொருளானது சொப்பிரகாச சொரூப ஞானமாகிய சா மானிய வமிசத்தாலாதாரமா (உறவா) க இருக்கிறதென்பார். "இடமாகு மெல்லாமெனும் பொருள் கட்டு" எனவும்,

அத்தியாசத்திற்காதாரமாயிருந்தவக் கயிறு தானே அதிஷ்டான (விசேட) வமிசத்தாற் பாம்பு வடிவ அவ்வத்தியாசத்தைக் கெடுக் கின்ற பகையாகவுமிருத்தல்போலச் சகத் தத்தியாசத்திற் காதார மாயிருந்த அப்பரம்பொருள்தானே அந்தக்கரண விருத்தி வாயிலா கப் பிரகடமாகின்ற விசேட வமிசத்தின் (சச்சிதானந்தாதிகளின்) ஞானத்தாலவ்வத்தியாசத்தைக் கெடுக்கின்ற பகையாகவுமிருக் கிறதென்பார் "அஃதே படர்கற்பனைக்குப்பகையாய் மடமுடைக் கும்" எனவும் கூறினர்.

இங்கு அடியென்றது சச்சிதானந்த முதலிய விசேஷணங் களோடு கூடிய பரையென்னும் பெயருடைய வபின்ன சத்தியை. அச்சத்தியானது கற்பனைக்கெல்லாம் முதலாயிருத்தலாலப் பெயர்

பெற்றது. பிரஹமத்திற்கு அபின்னமாயி (வேருகாதி) ருத்த லால் அதன் விசேஷணங்கள் உபசாரத்தால் நிருவிசேஷமாயிருக் கின்ற பிரஹம சேதனத்தின் விசேஷணங்களாகக் கற்பிக்கப் பட்டிருக்கின்றன.

அவ்விசேஷணங்களுள் * சத்ரூபத்தைச் சாமானிய வமிச மெனவும், சேதனுதிகளை விசேஷவமிசமெனவுஞ் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்விசேஷ வமிசம் வாஸ்தவங், கற்பித மென்னும் பேதத்தாலிரண்டு வகையாயிருக்கின்றது.

---

* விசாரித்துப் பார்க்குமிடத்து சத்துரூபமுஞ் சேதனுதி கள்போல விசேட வமிசமாகுமன்றிச் சாமானிய வமிசமாகாது. எதனுலெனில் சத்தினிலக்கணமானது எக்காலத்தும் எந்த ஞானத் தினுலும் பாதிக்கக்கூடாததாம். அந்தப் பாதிக்கக்கூடாத சத்தே நித்தியமுமாம். அதனின் வேறன்று.யாவனெருவன் றன்னை நான் சத்துவடிவன், நித்தியன் எனவறிகின்ருனே அவன் ஞானியே யன்றி யஞ்ஞானியாகான். அத்தன்மைய ஞானியினிடத்தில் அஞ் ஞான முறவாயிருக்கிறதெனல் வசங்கதமாதலா லெனவறிக.

அப்படியானுற் சாமானிய வமிசம் மற்றியாதெ னில் பரம்பொருளின் சொப்பிரகாச ஞான சொரூபமேயாம். எத னுலெனில் எல்லாத்தேச காலங்களினு மிருத்தலினுலும் தனது வியவகாரமாகிய வுணர்ச்சியின்பொருட்டு வேறு சாதனங்களின் அபேக்ஷையின்றிய தாயிருத்தலினுலுமென்க. ஆதலால் அச்சொப் பிரகாச ஞான சொரூபமே அஞ்ஞானத்திற்கும் அதன் காரியமா கிய பூதாதி ஜகத்திற்குமாதாரமா யிருப்பதோடு தனது சத்தாஸ் பூர்த்தி (இருப்புவிளக்கங்)களை யவற்றிற்குக் கொடுத்து உறவா யிருக்கின்றதென்றறிக.

அப்படியானுற் சத்ரூபஞ் சாமானிய வமிசமெனக் கூறு தலசங்கதமன்ருேவெனில் இலக்கியார்த்த சத்தையா (பாதிக்கப்

படாததையா)வது இலக்கியார்த்த சத்தின் ஞானத்தையா(நான் நித்தியன் என்றறிதலையா)வது கொள்ளாமல் வாச்சியார்த்த சத்து (இருப்பு) மாத்திரத்தைப் பொருளாகக் கொண்டால் அது (அவ்விருப்பு) பாதயோக்கியம், பாதிக்கப்படாதது என்னுமிரண்டற்கும் பொதுவாய் நின்று பிராந்திகாலத்திற் பாதயோக்கியத்துடனும், ஞானகாலத்திற் பாதிக்கப்படாததுடனும் பொருந்துமாதலாலசங்கதமாகாது. அவ்வாறின்றி யிலக்கியார்த்த சத்தைப் பொருளாகக்கொள்ளின் அது ஞானவாயிலாக அசத்தின் விரோதியாதலின் அஞ்ஞானத்திற் குறவு மாதாரமுமாகாது. அன்றியுமஞ் ஞானந்தான் மறைக்கப்படுதலா லதனிடத்துச் சாமானிய வமிசத்தினிலக்கணமும் பொருந்தாது. இலக்கியார்த்த சத்தின் ஞான (விளக்க)த்தைப் பொருளாகக் கொள்ளினோ அது உடனே அஞ் ஞானத்தை யத்தியந்தம் பாதித்தேவிடும். ஆதலால் இலக்கியார்த்த சத்தையாவது அதன் ஞானத்தையாவது கொள்ளின் அசங்கதமாம் என்றறிக. இவ்வளவு விசாரஞ் செய்து சத்துருபத்திற் சாமானிய வமிசத்தைக் கொள்ளுதலரிது. பரம்பொருளின் சொப்பிரகாச ஞானசொரூபத்தைக் கொள்ளுதலெளிது. திருஷ்டாந்த வடிவக் கயிற்றோடு வஸ்துத்தன்மையா லொப்புடைமையுஞ் சித்திக்கின்றதென்றறிக.

இவ்வாறே பரம்பொருளின் விசேஷ வமிசம் சச்சிதானந்தாதிகளெனக் கூறப்பட்டிருப்பினும் அவற்றின் சொரூபங்களைக் கொள்ளலாகாது. ஏனெனில் சச்சிதானந்தாதிகள் பரம்பொருளின் சொரூபமெனக் கூறப்பட்டிருத்தலால் அவையெல்லாமுமநாதியு நித்தியமுமாம். அவ்வாறநாதி நித்தியமாகிய சச்சிதானந்தாதிக ளிருக்கும்பொழுது அவற்றின் விரோதியாகிய அஞ்ஞானத்தின் காரியவடிவ ஜகத்தத்தியாச முண்டாகலாகாது. அதுவோ

வடிவக்கயிற்றின்புரி, நார் முதலியன வாஸ்தவ விசேஷமும், அத்தியஸ்த வடிவப் பாம்புமுதலியன கற்பித விசேஷமுமாதல் போல ஜகத்தத்தியாசத்திற்கதிஷ்டானமாகிய பிரஹ்மத்தினது சேதனாதிகள் வாஸ்தவ விசேஷமும்,அத்தியாச வடிவ ஜகத்துக் கற்பிதவிசேஷமுமாகின்றன. மேலும் அவ்விசேஷ வமிசங்களுள் அதிஷ்டானவடிவக் கயிற்றின்புரி, நார்வடிவ விசேஷவமிசந்தோற்றுத போது கற்பித விசேஷ வடிவ சர்ப்பந்தோற்றி அவ்வாஸ்தவ

வுண்டாயிருக்கின்றது. இஃதொரு விரோதம். அன்றியும் பிராந்திஸ்தலங்களில் அற்பதேச காலங்களி லிருப்பதெதுவோ அது விசேட வமிசமெனவும், அத்தன்மைய விசேஷவமிசஞ் சேதனாதிகளெனவுங் கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே நித்தியமாகிய சேதனாதிகளையற்ப தேசகாலங்களிலிருப்பதாகக் கூறுதலொரு விரோதமாம். வேதானுசாரமாகிய சாஸ்திரங்களில் விரோதார்த்த பதங்களிராவாதலா லவற்றிற்கு அவிரோதமாகிய வருத்தங்களை யாராய்ந்து கொள்ளவேண்டும்.அவ்வவிரோத வருத்தம் யாதெனில், பரம்பொருளினது சொப்பிரகாச ஞானமொரூபம் சாமானிய வமிசமெனவும், அதனது சச்சிதானந்தாதி விசேஷணங்களின் பிரகடமாதற்குச் சாதனமாகிய அந்தக்காண விருத்தி ஞானம் விசேஷாமிசமெனவுங், கொள்ளின் அவற்றிற்குக்கூறிய விலக்கணங்களுக்கு விரோதமின்மை சித்திக்கின்றது. அவ்வாறு கொள்ளுதற்குப் பிரமாணமுளதாவெனில், "சொரூப ஞானமும் விருத்திஞா னமுமென்று சோதிஞானமு மிரண்டாஞ், சொரூப ஞானமே விருத்தியின் ஞானமாய்த் தோன்றும்வே றிலமைந்தா' சொரூப ஞானமஞ் ஞானசத் துருவன்று சுழுத்தியிற் கண்டாயே, சொரூப ஞானத்தின் மருவுமஞ் ஞானத்தைச் சுடும்விருத்தியின்ஞானம்" எனக் கூறப்பட்டிருக்கின்ற கைவல்லியச் செய்யுளாற் பரம்பொருளின் சொரூப ஞானமும், விருத்தி ஞானமும் முறையே அஞ்ஞானத்திற்குறவும், பகையுமாதலறிக.

விசேஷத்தின் றோற்றத்தாற் கற்பித சர்ப்ப நிவிர்த்தியாதல் போல அதிஷ்டானப் பிரஹமத்தின் சேதனத்தன்மை முதலிய விசேஷ வமிசந் தோற்றுதபோது கற்பித ஜகத்துத் தோற்றி, யச்சேதனுதிகள் தோற்றியபோது கற்பித ஜகத்து நிவிர்த்தியாத லாற் கற்பித விசேஷத்திற்கு வாஸ்தவ விசேஷம் பகையாக விருக்கின்றது. ஆனுற் சாமானிய வமிச மிவ்வாறு அத்தியாச வஸ்துவிற்குப் பகையன்று உறவாம். அஃதெவ்வாறெனில், திருஷ்டாந்த வாயிலாகச் சுருக்கமாகக் காட்டப்படுகின்றது.

எதிரிற் கிடக்கின்ற கயிற்றையறியும்பொருட்டு அந்தக்கரண விருத்தியானது நேத்திரேந்திரிய வாயிலாக வெளிப்பட்டுக் கயிற்றினிடத்துச் சென்று முதலிலிதுவொரு வஸ்துவென்று அக்கயிற்றின் சாமானிய வடிவமாகிய வஸ்துத் தன்மை மாத்திரத்தை விஷயம் பண்ணுகின்றது. அந்த வஸ்துத் தன்மையானது உண்மையாகிய வக்கயிற்றின் சாமானிய வடிவமாதலால துவும் அதன் ஞானமும் எதார்த்தமாம். அப்பாலதனையின்ன வஸ்து வென்றறியும் விருப்பத்தால் விருத்தியானது அக்கயிற்றின் விசேஷாமிசத்தை விஷயஞ்செய்யப் புகுமிடத்து மந்தாந்தகார முதலிய தடை நேரிடுமாயின் அப்பொழுது அக்கயிற்றனுடைய புரி, நார் முதலிய விசேஷ வமிசந்தோற்றுகிறதில்லை. எப்பொழுது அக்கயிற்றனுடைய சாமானிப வடிவந் தோற்றிப் புரி, நார் முதலிய விசேட வமிசந் தோற்றவில்லையோ வப்பொழுது அக்கயிற்றையுபாதியாக வுடைய பிரஹம சேதனத்தையிடமாகக் கொண்டு அதனையே மறைக்கின்ற அஞ்ஞானமானது அத்தியாசத்தை யுண்டுபண்ணும் பக்குவத்தையடைகின்றது. அடையவே யதன் தமோகுணுமிசம் பாம்பின் வடிவப் பரிணமத்தையுமதன் சத்துவகுணமிசம் அப்பாம்பின் ஞானவடிவப் பரிணமத்தையு மேககாலத்திலடைகின்றன. அப்போதவ்வஞ்ஞான மானது கயிற்றின் சமானிய வமிசமாகிய வஸ்துத் தன்மையோடு தன்னுற்

கற்பிக்கப்பட்ட சர்ப்பத்தை யேகமாக்குகின்றது. அவ்வேகத்தன் மையால் இங்குத் தோற்றுகின்ற வஸ்து சர்ப்பம்என அக்கயிற் றின் சாமானிய வடிவ விளக்கமானது அத்தியாச வலியாற் கற் பித சர்ப்பத்தின் விளக்கமாகப் பிராந்தியடைந்த புருடனுக்கு விளங்குகின்றது. இல்லாமையும் விளங்காமையு முடையவப் பாம்பு இருத்தல்போலும், விளங்குதல்போலுங் காணப்படுதற்கு உண்மையாக விருந்து விளங்குகின்ற அக்கயிற்றின் சாமானிய வமிசமாதாரமாயிருத்தலா லுறவாகின்றது. அதுபோல இல்லாமை யும் விளங்காமையு முடைய ஜகத்து இருத்தல்போலும், விளங்குதல் போலும் காணப்படுதற்கு உண்மையாக விருந்து விளங்குகின்ற அப்பிரஹ்மத்தின் சாமான்ய வமிசம் ஆதாரமாயிருத்தலாலுற வாகின்றது. ஆகையினாலே சச்சிதாநந்தாதிமயமாகிய திருவடி யானது சத்துரூபமாகிய சாமானிய வமிசத்தாற் கற்பித ஜகத் திற்கு உறவும், சேதனமுதலிய விசேஷவமிசத்தாற் பகையு மாக விருக்கின்றதென்றறிக.

படர் என்பது முதனிலைத் தொழிற் பெயர். ஆயென்பது முன் னுஞ் சென்றியைந்தது. உடைக்குமென்பதை முற்றாகக் கொள் ளினுமமையும். (48)

அ-கை-- தன்னிடமிருந்த மடமையையும், ஞானாசிரிய ரிடமிருக்கின்ற பெருங் கருணையையும் வெளிப்படுத்தல்.

49. அடியார்க் கடித்தொண்ட னானேனம் பொற்றா ண்
முடிசூடி யஞ்சலித்து முன்னின் றிடையிடை—நின்
சீருந் துதியேன் சிதம்பரா வென்னேனை ப்
போரூரி லாள்வற் புதம். *

பொ-ரை. ஓ சற்குருநாதா! பொன்போற் பிரகாசிக்கின்ற அழகிய வுனது திருவடியை யெனது முடிக்கு முடியாகச் சூடிக்

கைகுவித்து வணங்கி யுனது சந்நிதி யிலொவ்வொரு சமயங்களிலா யினு நின்று உனது கீர்த்திகளை யறிந்து துதியேன். ஒருவழிப் பட்ட மனத்தாற் சிந்திக்கத்தகுந்த வுனது திருநாமத்தைச் சிதம்பர தேவாவென்று அபுத்தி பூர்வகமாகவேனுஞ் சிந்தித்தறியேன். இவையெல்லாஞ் செய்யேனுயினும் உன்னடியார்க்காவது திருவடித்தொண்டு புரிந்துளேனு அதுவும் புரிந்திலேன். இத்தன்மைவாய்ந்த மடமையேனையும் முன்னொருநாளிற் றிருப்போரூரில் ஆளுதற்கெழுந்தவுனது பெருங்கருணை யாவராலு மதிசயிக்கத்தக்கதாம். எ—று.

ஆள்வு தொழிற் பெயர் ஆள்தலென்று பொருள். எச்சவும்மை பிரித்துக் கூட்டப்பட்டது. (49)

அ-கை:- குருமூர்த்தியினிடத்துத் தனது ஞானனுபவங் கூறுதல்.

50. புதிதொன் றெழுந்திப் புவனம் விழுங் கி
யிதுவென்ற வெல்லா மிறப்பித்—ததுவேயாய்ப் ப்
பூரணவின் பாகிப் பொலிகின்ற தேற்போ ரூ
ராரணு நானார்நீ யார். *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வேதப் பொருளாகிய சற்குருநாதா! நீ யாட்கொண்டபிற் காலத்திலற்புதமாகிய வொரு சோதி சொரூபமானது வெளிப்பட்டு இப்பிரபஞ்சமனைத்தையுமுண்டு தன்னுள் மறையும்படியாக வியாபித்து) இதுவிது வென்று சுட்டியறிதற்கு விஷயமாயிருந்த பிரபஞ்சப் பொருள்களெல்லாவற்றினு முள்ள சத்தியத்தன்மையைக் கெடுத்துத்தானே சத்தியப்பொருளாயிருந்து பரிபூரணமாகி அதனுலே நித்தியாநந்த சொரூபமாகி விளங்குகின்றதேல் இவ்வகண்டைகாச சொரூபத்தில் ஜீவனுகிய யானெத்தன்மை

யன் ஈசுரனாகிய நீ எத்தன்மையை. எ—று.

ஆர் என்பன வேறன்மையை யுணர்த்தி நின்றன.

ஞானாசிரியரை விளித்துத் தனது புத்திக் கதிட்டான வடிவப் பிரஹமான்மா இவ்வித விசேஷணங்களோடு விளங்குகின்றதென்பார் "போரூராரண! புதிதொன் றெழுந்திப் புவனம் விழுங்கி, யிதுவென்ற வெல்லா மிறப்பித் தததுவேயாய்ப் பூரணவின் பாகிப் பொழிகின்றது." எனவும் அவ்விடத்து ஜீவேசுரபேதங்காணப்படவில்லை யென்பார் "நானார் நீயார்" எனவுங் கூறினார். (50)

அ-கை:- ஞானாசிரியருபதேசத்தின் பயன் கூறுதல்.

51. யாவ ரெவைசொலினு நற்புகழார் போற்போரூர்த்
தேவன்சொற் போலின்பஞ் செய்யுமா—பூவில்
வருந்துன் பனைத்தினையு மாற்றுமா சாவா
மருந்தா யிருந்துதவு மா.

பொ-ரை. எத்தன்மைய மகிமையாளர் எத்தன்மையவாகிய வார்த்தைகளைக் கூறினும் அவையெல்லாங் கேட்குந்தோறுமினிமையைத் தருகின்ற புகழாணிறைவு பெற்ற வழகுபொருந்திய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய எனது சற்குரு ஸ்வாமியாலுபதேசிக்கப்பட்ட சொற்போலப் பிரஹமாநந்தத்தைக் கொடுக்குமா, பூமியின் கண்ணத்தியான்மிக முதலியவற்றாலடையப் பட்டதுக்கங்களனைத்தையும் விலக்குமா, சாவாமைக்குமருந்தாக வந்தக்காரணத்தின் கண்ணிலைத்திருந்து அச்சாவாமையாகிய மோக்ஷத்தைக் கொடுக்குமா, இவற்றுள் யாதொன்றையுங் கொடா. எ—று,

எனவே திருப்போரூர்த் தேவன்சொல் இன்பஞ் செய்யும், பூவில் வருந்துன் பனைத்தினையும் மாற்றும், சாவா மருந்தா யிருந்துதவும். என்பதாயிற்று.

மற்றவர் கூறுஞ் சொற்பொருளெல்லாம் மாயாமயமாதலால் அவை மாயாதீதமாயுள்ள பிரயோசனத்தைக் கொடாவென்பார் "யாவ ரெவைசொலினு நற்புகழார் பொற்போரூர்த், தேவன் சொற் போலின்பஞ் செய்யுமா பூவில்,வருந்துன் பனைத்தினையு மாற் றுமா சாவா, மருந்தா யிருந்துதவுமா" என்றார். (51)

அ-கை:- பிரபஞ்சம் அஞ்ஞானிகளுக்குள்ள பொருளும் சத்தசத்து விவேகிகளுக்கில்லாத பொருளுமாகின்றதெனல்.

52. மாவெல்லஞ் சார்ந்து மதுரகுணம் பெற்றது போ
லேவிரியைம் பூதாதி யெல்லாமு—மோவலி லா
நின்னை மருவி நிகழ்வனவான் போரூ ரா
வுன்னிற் பிரியினுள வோ.

பொ-ரை. பெருமை பொருந்திய திருப்போரூ ரிறைவா மதுரத்தன்மை தன்னிடத்தில்லாத நெல் முதலிய வற்றின் மாவானது இயல்பாகவே மதுர சுபாவமுடைய வெல்லத்துடன் கலத்தல் வாயிலாக அவ்வெல்லத்தினது மதுரத் தன்மையைப் பெற்றுத்தானும் மதுர வடிவமாக விளங்கினாற்போல அசத்து, ஜட, துக்க,நாம,ரூபமயமாய்ப் பஞ்சபூத முதலியனவாக விரிந்துள்ள பிரபஞ்ச வஸ்துக்களெல்லாம் எந்த ஞானத்தினாலும் பாதிக்கக் கூடாத சச்சிதானந்த சொரூபமாயிருக்கின்ற உன்னிடத்து அஞ்ஞான வலியாற் கலத்தல் வாயிலாக உனது சச்சிதானந்த சொரூபத்தை யத்தியாச ரூபமாகப் பெற்றுத் தாமும் சச்சிதானந்தம் (இருப்பனவும், விளங்குவனவும், பிரியமுடையனவும்) போலச் சத்த சத்துக்களின் விவேகமில்லாத அஞ்ஞானிகளுக்குத் தோற்றுகின்றன. இவையெல்லாம் உனது சச்சிதானந்த சொரூபத்தினின்று புத்தியினாற் பிரிக்கப்படின் அங்ஙனம் பிரிவாக வறிகின்ற விவேகிகளுக்கு இருப்பனவும் விளங்குவனவுமாமோ ஆகா. எ-று

மாவானது மதுரத்தன்மையில்லாத வஸ்து, வெல்லமானது மதுரத்தன்மையுள்ள வஸ்து வென்று அவற்றின் பேதமறியாத அவிவேகி புருஷன் அவ்விரண்டுங் கலப்புற்றகாலத்து அம்மாவினிடத்து அத்தியஸ்தமாகித் தோன்றும் மதுரத் தன்மையைக் கண்டு இம்மாவானது மதுர சுபாவமுடைய தென்றறிந்தாற் போலப் பிரபஞ்சமானது அசத்து,ஜட,துக்க, நாம,ரூபமய வஸ்து, பிரஹ்மான்மா சச்சிதானந்தமய வஸ்துவென்று அவற்றின் பேதமறியாத அவிவேகி புருஷன் அவ்விரண்டுங் கலப்புற்றுத் தோன்றுமஞ்ஞதசையிலப் பிரபஞ்சத்தில் அத்தியஸ்தமாய்த் தோற்றுகின்ற சச்சிதாநந்த (இருப்பு விளக்க பிரிய)ங்களைக் கண்டு இப்பிரபஞ்சம் சத்தியமென்றறிகின்றுனென்பார் "மாவெல்லஞ் சார்ந்து மதுரகுணம் பெற்றதுபோ லேவிரியைம் பூதாதி யெல்லாமு மோவலிலா நின்னை மருவி நிகழ்வன." எனவும்.

அவனின் வேறுய் மாவும் வெல்லமுமாகிய விரண்டு மதன தன்றருமத்தோடு வேறு வேறுவஸ்துக்களென்றறிந்த விவேகி புருஷன் அம்மாவினிடத்து அத்தியஸ்தமாகித் தோன்றும் மதுரத்தன்மையைக் கண்டானுயினும் இம்மாவினிடத்து மதுரத்தன்மையில்லை இது வெல்லத்துடன் கலத்தல் வாயிலாக வெல்லத்தின் கண்ணுள்ள மதுரத்தன்மை யிம்மாவின் கட்டோற்றுகின்றது. அவ்வெல்லத்தினின்று மாவைப் பிரித்துவிட்டால் வெல்லத்தினின்று பிரிக்கப்பட்ட மாவினிடத்து மதுரத்தன்மை யிராதென்றறிந்தாற் போல நின்மலாந்தக்காணமுடைய முமுக்ஷு அல்லது சத்தசத்துக்களின் அபரோக்ஷ விவேகியானவன் பலவும் பரிச்சின்னமாகியனவும் நாமரூபமே சொரூபமாயுள்ளனவுமாகிய பிரபஞ்ச வஸ்துக்களிடத்து அகண்டைகாசமாகவும் பூரண வியாபகமாகவும் பூரித்துள்ள சச்சிதானந்த (இருப்பு விளக்க பிரிய)ங்களைக் கண்டானுயினும் இப்பிரபஞ்ச வஸ்துக்களிடத்துள்ளன போலக் காணப்படுகின்ற சச்சிதாநந்தங்கள் இவற்றினுடையன

வல்ல, பிரஹ்மாபின்ன ஆன்மாவின் சொரூபமாம், அவை அஞ்ஞானத்தாற் செய்யப்பட்ட வத்தியாசவாயிலாக இப்பிரபஞ்ச வஸ்துக்களிடத்துக் காணப்படுகின்றன வென்றறிந்து, தனதந்தக்கரண விருத்தியை யாதொரு விஷயாகாரமுமடைய வொட்டாது தடுத்து, அநேக விஷயங்களுள்ளடங்குமாறு வியாபகப்படுத்தி, யந்த வியாபகப் பிரஹ்மாகார விருத்தியாற் பிரஹ்ம சேதனத்தை யாசிரயித்து, அதனையே மறைக்கின்ற வஞ்ஞானத்தைக் கெடுத்துவிடுகின்றான். அவ்வஞ்ஞான மாவரணத்தோடு நாசமாகவே பிரஹ்ம சேதனம் சொப்பிரகாசமாதலால் அன்னியப் பிரமாணாபேக்ஷையின்றி அகண்டபரிபூரண சொரூபமாகத் தானே பிரகாசிக்கின்றது. அவ்விடத்து விருத்தி யாதொரு விஷயாகாரத்தையுமடையாமையால் அந்தச்சசத்தசத்துக்களின் விவேகிக்கு அப்பிரிக்கப்பட்ட யாதொரு விஷயமுங் காணப்படாதென்பார். "போரூரா உன்னிற் பிரியினுளவோ" எனவும் கூறினார்.

இங்குச் சேதனசொரூபமாகிய சச்சிதானந்தங்களையுமசேதன சொரூபமாகிய நாமரூபங்களையும் புத்தியால் வேறுவேறு காண்டலென்பது சேதனம் வேறு, அசேதனம் வேறென வாக்காற் சொல்லுதல் அல்லது மனத்தானினைத்தன் மாத்திரமன்றி யவ்விரண்டன் சொரூபமும் உள்ளபடி யெவ்வாறு பிரிக்கப்படும். கலப்புற்ற பாலு நீருமெவ்வாறொருவாலும் பிரிக்கப்படமாட்டாவோ அவ்வாறு பிரிக்கப்படமாட்டாவெனச் சங்கிக்கக்கூடும். அச்சங்கை பொருத்தமுடையதன்று. எதனாலெனிற் கலப்புற்ற பாலு நீரும் எவராலும் பிரிக்கப்படமாட்டாவென்பது சத்தியமே. ஆனாலு மன்னப்பறவைக்குத்தனது மூக்கின் கண்ணுள்ள வொருவகைச் சத்தியானீரையுட் கொள்ளாது விலக்கிவிட்டுப் பாலைமாத்திரங் கிரகித்தல் வாயிலாக அவ்விரண்டையும் பிரிக்குஞ் சாமர்த்தியமிருத்தல்போல மேற்கூறிய சேதன ஜடங்களை மற்றெவராலும்

பிரித்தல் கூடாதென்பது சத்தியமே. ஆனாலும் நின்மலாந்தக்கரணமுடைய முமுக்ஷு அல்லது ஞானியென்பவர்களாற் றம தந்தக் கரணத்தின்கண் மல (பாவமென்கின்ற வழுக்கு) விக்ஷேப (விஷயாகாரமடைதலிற் பற்றுடைமை) வடிவதோஷ நிவிர்த்தியாற் சூக்குமத் தன்மை, யாபேக்ஷிக சொப்பிரகாசத்தன்மை வடிவ வோர்வகைச் சத்தி பிரகடமாயி(வெளிப்பட்டி)ருக்கின்றது. அச்சத்தியால் அசேதனவடிவ நாமரூபங்களிலு பேக்ஷையும், சேதனவடிவ சச்சிதாநந்தங்களிலபேக்ஷையு முண்டாகின்றன. அவ்வுபேக்ஷய பேக்ஷைகளான் முறையே நாமரூபவாகாரங்களையடையாமல் விடுத்து நிராகாரமாயும் வியாபகமாயுமுள்ள பிரஹ்மாகாரத்தை யவ்வந்தக்கரண விருத்திதரிக்கின்றது. அந்த வியாபக விருத்தியால் வியாபக சேதனத்தை யாசிரயித்து அதனையே மறைக்கின்ற அஞ்ஞானத்தினுவரண நாசமாகின்றது. ஆகவே சேதனஞ் சொப்பிரகாச மாயிருத்தலாற் றானே பிரகாசிக்கின்றது. அவ்விடத்து விருத்தி நாமரூபமாகிய வாகாரங்களையடையாமையாற் பிரபஞ்ச விஷயங்கள் அவருக்குத் தோற்றுகிறதில்லை. சேதன மாத்திரம் அனுபவரூபமாக விளங்குகின்றது. இவ்வாறு பிரபஞ்ச விஷயங்களிருக்கவும் அவற்றினனுபவ நீங்குதலும், பிரஹ்மானுபூதியோங்குதலுமே ஜடசேதனங்கள் புத்தியினாற் பிரிக்கப்படுதலன்றி வாக்காற் சொல்லுதல், அல்லது மனத்தானினைத்தன் மாத்திரமன்றென்க.

இவ்வனுபூதியே ஜீவன் முத்தியெனவும், பிரபஞ்ச விஷயங்கள் தோற்றிக்கொண்டிருக்கத் தான் பிரஹ்ம சொரூபமாக நிலைத்திருத்தலாகிய விவ்வனுபூதியுடையவனையே ஜீவன் முத்தனெனவுஞ் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஏகாரம் அசை நிலை. (52)

அ-கை. யாவர்தமதந்தக்கரணமாத்திரத்திற்குச் சாக்ஷியாயி

ணரோ அவர் எமது குருமூர்த்தியின் றிருவடியைத் தரிசித்தவரா வரெனல்.

53. ஓங்கலென வுள்ள முறைத்தொளியா யோருருவு ந்
தாங்காது நிற்குந் தலங்கண்டார் தேங் கு
புனல்வளஞ்செய் போரூரிற் பொல்லா மணிதா ள்
வனமறிந்தா ரெம்முறவா வார். *

பொ-ரை. தமதந்தக்கரணமானது ஜடசேதன வடிவப் பிரபஞ்சப் பொருள்களுள் யாதொரு வஸ்துவிஞகாரத்தையுந் தரிக்காமல் மலைபோலசைவற வுறுதியாகப் பிரகாசித்துத் தனித்து நிற்குமிடத்தை யனுபூதியளவில் யாவர் தரிசித்தனரோ அவர் நீரால் வளம்பெருகுகின்ற திருப்போரூரின்கட் டமரிடா மாணிக்க மணிபோற் பிரகாசிக்கின்ற எமது குருமூர்த்தியினுடைய வழகிய திருவடியைத் தரிசித்தவர் அவ்வேதுவாலவர் எமக் குறவினருமாவர். (எ-று.)

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. (53)

அ-கை. ஒரு சமுத்திர ஜலமாத்திரத்தைப் பருகி யுமிழ்ந்தவன் பெரியனு, அதனெடெல்லாவுலகங்களையு முண்டுமிழ்கின்றது பெரியதாமெனல்.

54. வாரியையோர் கான்முன் மடுத்துவிட்டான் சன்னுவென
லோர்பெரிதோ விந்த வுலகமெலா நேரறி ய
நித்தியந்த னுள்ளடக்கி நெஞ்சு விடல்பெரி தோ
மத்தியஞ்சொல் போரூர் மனே. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய யதிராஜனே! முன்னெரு காலத்திற் சமுத்திரமாதற்குத் தகுந்த பெருக்குடையதாய்ப் பகீரதனுற் கொண்டுவரப்பட்ட கங்கா ஜலத்தை

யெல்லாங் குடங்கையிற் கொண்டாசமனஞ்செய்து செவி வழியாக வெளிப்படுத்திய சன்னுமுனி பெரியனு, ஒவ்வொரு நாளிலும் யாவரும் பிரத்தியக்ஷ வனுபவத்தாலறியுமாறு அச் சமுத்திரத்தோடு கூடச் சர்வ வுலகங்களையுந் தன்னுள்ளே மறைத்துப் பின்பு வெளியே விளங்குமாறு காட்டுகின்ற மனம் பெரிதோ, நடுவாகியிருந்து இவற்றினை யாராய்ந்து கூறுக. எ-று.

கர்த்தாவின் பெருமை கிரியை மேலேலற்றப்பட்டது. ஜகத்து மனமொடுங்கியவிடத் தொடுங்கி யஃதுள்ளபொழுது காணப்படுதலால் அச் சகத்திற்கு மனத்தை யிடமாக்கினுர். கெங்கையை சன்னு முனிவர் குடங்கையிலடக்கி யாசமனஞ்செய்து செவியின் வழியாக வெளிப்படுத்தின சரிதத்தைக் காசி காண்டத்திலும் கம்ப ராமாயணம் அகலிகைப் படலத்திலும் காண்க. (54)

அ-கை, மனத்திற்கறிவுறுத்தல்.

55. மனனே சலித்து மழுங்கா தம ரு
ரினனே மறவொளிரு மெம்மான் றனசெதிரு ஞ்
சென்றிடா தாண்டே யடங்கிநிதி சேவடி யி
னொன்றி யுடனதுவே யாய். *

பொ-ரை- மனமே! சதா விஷயங்களினிடத்துத் தாவித் தாவி வீழ்ந்து அவற்றினுகாரங்களை யடைதலால் வருந்தியுனது சொரூபப் பிரகாசங் குறைகின்றாய். இனி யவ்வாறு விடயங்களை எதிரிட்டுச் செல்லாமலும், திருப்போரூரின்கண் சூரியனு மொப்பாகாவண்ணம் சொப்பிரகாசமாக விளங்குகின்ற எமது தெய்வமாகிய சற்குருநாதனை நோக்கிச் செல்லாமலும் உனக்காதாரமாயிருக்கின்ற அவனது திருவடியிற் கலந்து அதுவேயாயடங்கி நில். அவ்வாறு நிற்றியெனி னத்திருவடியாநந்தத்தை யனுபவித்துப் பிரகாசிப்பாய். முன்போல் வருந்திப் பொலிவு குன்றாய். எ—று.

எம்மான்றனமெததிரும் என்ற எச்சவும்மையால் முன் விஷயச் செலவு வருவிக்கப்பட்டது. அவ்வாறு நிற்றியெனினத்திருவடியானந்தத்தை யனுபவித்துப் பிரகாசிப்பாய். முன்போல் வருந்திப் பொலிவு குன்ருய் என்பது இசையெச்சம். சிறப்பும்மை விகாரத்தாற் ருெக்கது. ஏகாரம் மூன்றனுள் முன்னது விளியுருபு. இடை நின்றது அசை நிலை. பின்னது பிரிநிலை. (55)

அ-கை. மோக்ஷவிருப்புடையார்க்கு அதனை-யடையு மார்க்கமிதுவெனல்.

56. ஆகுதியா கம்பலசெய் தாலமரூ ரம்மான்ற ட்
பாகுதிக முன்பற் பமேபதியு மோகம ற
வெந்நாளு நீங்கா வியைபி னெழுமின்ப ஞ்
சன்னமா கூறத் தகா. *

பொ—ரை. ஓமாக்கினியிலவிசொரிந்து பலவகைப்பட்ட யாகங்கள் செய்யப்படின் அவற்ருலொருவனுக்கு சித்தசுத்திவாயிலாகத்திருப்போரூரெமது குருஸ்வாமியினது திருவடியினிடத்துக் கற்கண்டுபோலு மினிமைவாய்ந்த சுகத்திற்கேதுவாகிய அன்பு சிறிதுண்டாகும். அவ்வன்பின் பெருக்காற் றிருவடித்தொண்டும், அவ்வன்போடுகூடிய தொண்டினுல் அவனது கருணுதிருஷ்டியும், அத்திருஷ்டியால் மயக்கத்திற்கேதுவாகிய வஞ்ஞானத்தின் நாசமும், அவ்வஞ்ஞான நாசத்தால் எக்காலத்திலும் பிரிதலில்லாத கூடஸ்த பிரஹமங்களினைக்கியானுபவமும் உளவாவனவாம். அவ்வைக்கியானுபவத்தால் விளங்கும் பிரஹமாநந்த மானதற்படீமா, அன்று அன்று இவ்வளவென்று வரையறுக்க முடியாத வபரிச்சின்னமாம். எ—று.

இயைபு என்றது கூடஸ்த பிரஹமங்களின் ஐக்கியானுபவத்தை.

முதலில் நிஷ்காமகன்மமும், இடையிலஞ்ஞான நாசமு மீற்றிலக்கிய ஞானமும் கூறப்பட்டிருத்தலா லவற்றிற்கிடையே சொல்லப்படாத சாதனங்கள் வருவிக்கப்பட்டன. ஏகாரம் அசைநிலை. (56)

அ-கை:- ஞானதிகாரியிட மிருக்கத்தகாதவையு மிருக்கவேண்டியவையு மிவையெனல்.

57. தகாமை சமரூர்வாழ் தந்தைதாட் குள் ள
நெகாமையுட லாதிகளி னின்று—பகா மை
தகுதி யவன்றுளிற் சார்ந்தயலுன் று மை
பகுதி யறநிற் பதாம். *

பொ-ரை. ஒரு ஞானதிகாரியிட மிருக்கத்தகாதனயாவையெனில் திருப்போரூரின்கண்ணெழுந்தருளிய தந்தையாராகிய சற்குருநாதனுடைய திருவடியை நினைக்குந்தோறு மன்பால் மனமுருகாமையும், தேகாதிகளினின்று தான் வேறுபடாமை (தேகாதிகளிலான்மபுத்தி)யுமாம். அவனுற் சம்பாதிக்கத்தக்கவை யாவையெனில் அன்னியமாகிய விஷயங்களொன்றையுஞ் சிந்திக்காமையும், அக்குருநாதன் றிருவடியிற் பொருந்திப் பிரிவற நிற்றலுமாம். எ—று. (57)

அ-கை:- குருவின்றிருவருள் பெற்ற அன்பர்கள் நிற்குநிலைகூறல்.

58. பதாம்புயவின் பத்தேன் பருகுவண்டா மன் ப
ரிதாகிதமுந் தாழ்வுயர்வு மெண்ணார்—சதாவறிவா ய்
உய்யுநெறி நிற்பா ருவப்புவர்ப்பி லொன்றூர்க ள்
செய்பசம ரூர்த்தேசிகன். *

பொ-ரை. அழகுபொருந்திய திருப்போரூரின் கண்ணெ

ழுந்தருளிய ஞானசிரியருடைய திருவடியாகிய தாமரை மலரினிடத்துண்டாகின்ற பிரஹமாநந்தமாகிய தேனைப் பருகுகின்ற வண்டாகிய அன்பர்கள் தமது தேகத்திற்குளவாகின்ற நன்மை தீமைகளையும், புகழ்விகழ்வுகளையுங் குறித்து மகிழ்ச்சி வாட்டங்களையடையாமலும், அவைகாரணமாக முறையே இராகத்துவேஷங்களையடையாமலும், பிறவிப்பிணியினின்று தப்புவதற்கு வழியாயுள்ள பிரஹமான்மைவைக்கிய ஞான சொரூபிகளாயிருப்பர். எ-று.

எண்ணார். ஒன்றார். நிற்பார். எனத்தனித்தனி முடிப்பினுமமையும். (58)

அ-கை:- தனதங்கங்களுளின்னவின்னவை பணி செய்யுமாறருளுக வெனல்.

59. சிகரந் திருக்காளிற் சேர்ந்துதினந் தா ழ
வகமுன்பே ரன்பி லழுந்தி நெகிழ்—வடைய க்
கண்ணுனையே கண்டு களித்தமுத மேபெருக்க ப்
பண்ணுதிபோ ரூரிற் பரா. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வெளதுகடவுளாகிய சிதம்பர தேசிகா! அடியேனுடைய சிரமானதுவுனது திருவடியையே யெப்பொழுதும் பொருந்தி வணங்கவும், மனமானதுன்னையே யெப்பொழுதுஞ் சிந்தித்து அதனார் பெருகுகின்ற அன்பின்கண் மூழ்கியுருகவும், கண்களானவை யுனது சொரூபத்தையே யெப்பொழுதுந் தரிசித்து அதனாலாநந்த பாஷ்பம் (நீர்) பெருக்கவும் கிருபை செய்க. எ—று:

அ-கை:- குருமூர்த்தியைப் பல விசேஷணங்களாற்றுதித்துத் தன்னை முற்ற வாளும்படி வேண்டிக்கோடல்.

60. பராபரமாய் நிற்கும் பரசுகா வே கா
நிராமயநி ராலம்ப நித்தா—புராதன னே

விண்ணுடி யோடி விரிபொழில்சூழ் போரூ
லண்ணலே யென்னையென்று மாள்.

பொ-ரை. ஆகாயத்தின் கண்ணனைசைந்துயர்ந்து பரவிய சோலைகளாற் சூழப்பட்ட திருப்போரூரின் கண்ணன்பர்கணிமித்தஞ் சேதனமுஞ் சடமுங் கலந்து சிதம்பர தேசிகனென மானுடவடிவாக நிற்கின்ற பெரியோய் பரமார்த்தமாக நோயற்றவனும் யாதொரு பொருளுக்கு மாதாரமாகாதவனுமனாதி நித்தியனுமாக நிற்கின்ற வகண்டைகாசமாயுள்ள பரமாநந்த சொரூபியே! அடியேனையெக்காலமுமாண்டருளுக. எ—று. (60)

அ-கை. சற்குரு மூர்த்தியிடம் தனது குறை கூறுதல்.

61. ஆளா தொழியா யெனினு மடர்படர்
ணீளா தொழியு நெறியறியேன்—வா
விருக்கின்றே னுற்றுலென் செய்வேன் றவிர்த்
டிருக்கிளர்போ ரூர்நித் தியா.

பொ-ரை. செல்வத்தாலுயர்வு பெற்ற திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய நித்தியனாகிய சற்குருநாதா! உன்னிடத்தடைக்கலமாகவடைந்த வடிமையை முற்றிலுமாள்வாயேயன்றி நீக்கிவிடமாட்டாய். அவ்வாறாயினும் வருத்தத்திற்கேதுவாகிய வியாதிகள் நீடிக்காமல் நாசமாதற்குரிய மார்க்க மறியேனாகி வெறுமனேயிருக்கின்றேன். அவை வருத்துமாயின் பராதீனனா (உனக்கடிமையா) கிய யான் யாது செய்வேன். ஒன்றுஞ் செய்ய வல்லு) னல்லேன். ஆதலால் நீயே யவற்றைப் போக்கி யருளுக எ-று (61)

அ-கை. ஞானசிரியரிடத்துத் தனதபீஷ்ட நிறைவேறுமாறு வேண்டிக்கோடல்.

62. தியாதா தியானந் தியேயமெனு மூன்று
மெயாயல்லை யாய விமலா—தயாநிதி

யன்பர்க் கமுதா னவனே யமரூ ரா
வின்பதமே வின்பமின்று மீ. *

பொ-ரை. விசாரித்துப் பார்க்குமிடத்து வெளிப்பட்ட சமஸ்காரங்களைத் தடுத்து அடங்கிய சமஸ்காரத்தை வெளிப்படுத்தல் வடிவ தியானமும், தியானிக்கப்பட்ட வஸ்துவு (தியேயமு) ம், அந்தத்தியானத்தைச் செய்யுங் கர்த்தாவு (அந்தக்கரணமு) ம் ஆகிய மூன்றுஸ் பட (ஆகார) ங்களும் பரமார்த்தமாக ஆகாமல் அவற்றிற் கதீதமா (வேரு) யுள்ள நின்மல சொரூபியே, கருணையாற் கடல் போன்றவனே, தனதன்பர்களுக்கு அமுதம் போனித் தியத் தன்மை கொடுப்பவனே, திருப்போரூரிலெழுந்தருளிய சற்குரு நாதா! உனது திருவடியிற் பொருந்திய வினிமையாகிய பிரஹ மாநந்தத்தை யடியேனுக் கிந்நாளிலுங் கொடுத்தருளுக எ—று.

உம்மையிரண்டனுள் முன்னது முற்றும்மையும் பின்னது எச்சவும்மையுமாம். (62)

அ—கை:- உடைமையைக் காத்தலுடையவனுக்கே கடமை யெனல்.

63. ஈயென்று கேட்கு மியல்பில்லா வேழையை யு
நீயுவந்தன் ருண்டுன் னிலையுதவி—னே யே
னுடலாதி யுன்னுடைமைக் கொண் சமரூ ரெந் தா
யிடரார் தவிர்ப்பா ரினி. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வென்றந்தையாராகிய சற்குருநாதா! உறுதிப் பொருளையறிந்து விரும்பி அதனையெனக்கீயென்று கேட்குந்தன்மையில்லாத வறிவிலியாகிய வென்னையும் முன்னொரு நாளில் நீயேவிரும்பியாட்கொண்டு உனது நிலைமையையுங் கொடுத்தனையேல் யினியிவ்வுடன் முதலிய பொருள்களுன்னுடைமையல்லவோ வந்த உன்னுடைமைகட்கு

வந்த துன்பங்களையுடையவனாகிய நீ தவிர்க்க வேண்டுமேயன்றி யன்னியர் யாவர் தவிர்ப்பா ரொருவருந் தவிரார்.. எ—று (63)

அ-கை:. மேலைக்கவியிற் கூறியபடி தடுத்தாட்கொண்டவனாகிய வுன்னைத்தவிர வேறு கதியில்லை யெனல்.

64. இனியா ரினியா ரெனக்குநீ யன் றி
யனியாய மாம்வே றறையிற்—றுனிபுறு மே
லோலமிடு வேனன்றி யொன்றறியேன் போரூ ரா
காலடைந்தேற் கென்னே கதி. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய எனது சற்குருமூர்த்தியே! மேலைக்கவியிற் கூறியவாறு தடுத்தாட்கொண்ட பின்னரங்ஙனமாண்டவனாகிய வுன்னைத்தவிர வடிமைக்குத் துன்புறினத் துன்ப நீங்கவு மின்பமோங்கவுஞ் செய்ய வல்லுநர் யாவருள ரொருவருமிலர். அங்ஙனமில்லாதிருக்கவு மஃதறியார் அன்னியருளரெனக் கூறுவாருயி னவ்வார்த்தை யநியாயமாகுமன்றி நியாயமாகாது. ஆதலால் யானவ்வாறு கூறேன். அப்படியானல் யாதாயினுந் துன்பநேரிடுமாயின் யாது செய்வாயெனக் கேட்கின் உன்னைச் சிந்தித்து அத்துன்பத்தைப்போக்கியருளவேண்டுமென முறையிடுவேன். அவ்வளவேயன்றி வேறொன்றுஞ் செய்யவறியேன் உனது திருவடியைச் சரணடைந்த வடியேனுக்குப் புகலிடமத்திருவடியல்லது வேறி யாதுளது ஒன்றுமேயில்லை. எ-று, (64)

அ-கை. குருமூர்த்தியின் றிருவடியானது மெய்யடியாருக்கின்பயன் றருமெனல்.

65. கதிகூட்டு மெய்யடியார் கட்கழியா நல் ல
நிதி கூட்டுந் துக்கமெலா நீக்கும்—மதிகூட்டு ம்

வம்பார் மலர்ச்சோலை மன்னுசம ரூரிறை வ
னம்போ ருகப்பூ வடி. *

பொ-ரை. வாசனை பொருந்திய மலர் நிறைந்த சோலை சூழ்ந்து நிலைபெற்று விளங்குகின்ற திருப்போரூரின் கண்ணெழுந் தருளிய வெனது சற்குரு நாதாது தாமரை மலர் போன்ற திருவடியானது மெய்யடியார்களுக்குக் கெடுதலில்லாததாயு மின்பத்தைத் தருவதாயுமுள்ள செல்வமாகிய வைராக்கியாதி ஞான சாதன குணங்களைப் பெருகச் செய்யுமவ்வளவேயன்றி யவற்றின் வாயிலாகச் சர்வ துக்கங்களையு நீக்குதற் கேதுவாகிய பிரஹ்ம ஞானத்தையு மதன் வாயிலாக மோக்ஷத்தையுந் தரும். எ—று.

"செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்," என்றாற்போல வைராக்கியாதி ஞான சாதன குணங்களிங்கு நிதிகளுள் ளழியாத நல்ல நிதியெனப்பட்டன. எதனுலெனிலவைதா மொருவனுக்கு நிதிபோலுடைமையாயிருந்து பகரித்தலாலென்க.

நிதிகளுளெல்லாங் கெடாததும் இன்பத்திற்குப் பரம்பரா சாதனமாயுள்ளதுமாகியவைராக்கியாதி ஞான சாதன குணங்களைப் பெருகச் செய்யுமென்பார் "அழியாநல்ல நிதி கூட்டும்." என்றார். அழியாமை விதேக மோக்ஷ பரியந்தம் அந்தக்காணத்தில் நிலைத்திருத்தல்.

ஞான சாதன குனங்கள். பகவற் கீதை-"மானமும் பிறர்தனை மதிக்கப் பண்ணலு,மூனமும் பிறவுயிர்க் குறு கண்செய்தலும், யானெனுஞ் செருக்குமிவ் விகபரங்களி,லானபே ராசையோ டறுக்குமாற்றலும், பெற்றநன் மனையொடு பெண்டிர் பாலர்பா, லுற்றெழு மவாவிட லுடம்பின் றூய்மையும், மற்றவைம் பொறிகளின் வாயில்

வாழ்க்கையுஞ், செற்றமுஞ் சிறியவர் குழுவுந் தீர்தலும். ஒருபெரும் பொருளையே யுளத்துள் வைத்தலு, மிருவினை கடப்பவ ரிடங்க ளெய்தலுங், குருவினை வழிபடு குணமுங் குற்றமி, லுருவினை யுள்ளவா றுணரு முண்மையும். முன்றிகழ் பிறப்பொடு மூப்பி றப்பினுற், சென்றடை யிடும்பையைச் சிந்தை செய்கையும் என்றிவை யினைத்தும்'' என்பனவாம். (65)

அ-கை. துன்ப நிவிர்த்தியைக் குறித்துத் தன்னை யாட்கொண்டது யாது காரணத்தின் பொருட்டெனல்.

66. அடிப்போதி லன்பருனை யாநந்தத்தா லே
படித்தாடிக் கூடிப் பரவுங் கடிப்பொழில்சூ ழ்
தென்போரூ ராவெனைமுன் றேடிப்—பிடித்தாண் ட
தன்பகற்றித் துன்புறுத்தற் கா. *

பொ-ரை. இன்பப் பெருக்குடைய வுனது திருவடியாகிய தாமரைமலரைத் தேன் பெருங்காலதனைப் பருகி நீங்காது சூழ்ந்து களித் திரீங்காரஞ்செய்கின்ற வண்டினங்களாகிய மெய்யன்பர்கள் விட்டு நீங்காது அத்திருவடியாநந்தத்தாலே தாண்டவம் புரிந்து துதித்துக் குழுமி நின்று வணங்கப்பரிமளப் பூஞ்சோலை சூழ்தலாலழகுபொருந்திய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருநாதா! முன்னொரு நாளங்ககாத்திலடியேனை வலிந்து விசாரித்தாட் கொண்டாயே யவ்வாறாட் கொண்டது அவ்வடியாரைப் போல வடியேனையு மவ்வாநந்த மேலீட்டாலாடிப் பாடியுன்னை வணங்கச் செய்யவா? அல்லது அடியேனிடத்துத் துன்பங்களை யடைவித்து அதனுன் முன்னிருந்த வன்பையும் போக்கவா? கூறுக. இனியவ்வாறு துன்புறுத்தற்க. எ—று.

அடிப்போதென்றமையாற் றேன்முதலியன வருவிக்கப் பட்டன. அன்பகற்றித் துன்புறுத்தற்கா வென்றதனுல் அவ்வடியா

ரைப்போல வடியேனையு மவ்வாநந்த மேலீட்டாலாடிப்பாடியுன்னை வணங்கச் செய்யவா வென்றற் ஜொடக்கத்தன வருவிக்கப்பட்டன.

வி-ரை:- முன்னொருநாளநகரத்து முருகப்பெருமானைத் தரிசிக்கச் சென்ற தன்னை நீயாவன், எக்காரணத்தின் பொருட் டெங்குற்றுயென விசாரிப்பித்து, இந்நூற் பொருளைக் கேளென வாஞ்ஞாபிக்கச்செய்து, உபதேசித்தனை யென்பார். அவ்வாறு விசாரித்தலைத் "தேடி" எனவும், இந்நூற் பொருளைக் கேளென வாஞ்ஞாபித்தலைப் "பிடித்து" எனவும், உபதேசித்தலை "ஆண் டது" எனவும் கூறினர்.

ஏகாரம் அசைநிலை. (66)

அ-கை:- தனக்குப் பரிபூரணகிருபை செய்யவேண்டு மெனல்.

67. காக்கின்று யென்னிற் கடிய மனக்குரங்கு ன்
பூக்கழலை விட்டுப் புறம்போமோ—தேக்குறு பே
ராநந்த மன்றி யடையுமோ போரூரி ற்
கோநந் திடாநற் குணு. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய யதிரா ஜனே குறைவற்ற கருணை முதலிய நற்குணங்களையுடைய சற்குரு நாதா! அடியேனைப் பரிபூரண கிருபையோடு காக்கின்றுயென்ப துண்மையானுற் குரூரத்தன்மையுடைய குரங்குபோற் றுவுந் தொழிலுடைய மனமானது தாமரை மலரையொத்த வுனது திரு வடியினுகாரத்தையடைவதன்றி யன்னியமாகிய விஷயாகாரங் களையடையுமோ, பரிபூரணுநந்தாகாரத்தை விட்டுத் துக்காகாரத் தை யடையுமோ வடையாவாதலால் நீ பரிபூரண கிருபைசெய்ய வேண்டும். எ—று. (67)

அ-கை. இதுவுமது.

68. குணக்குன்றே போரூர்க் குருபரா வின் ப
மணக்கும் பதாம்புயப்பூ வண்டா—யிணக்கமு ற
நிற்கு நிலையினையிந் நெஞ்ச மனவரத ங்
கற்குமெளி தானவழி காட்டு. *

பொ-ரை. பேருளுடைமை முதலிய நற்குணங்களான் மலை போன்றவனே, திருப்போரூரிலெழுந்தருளிய சற்குரு நாதா! பிரஹமாநந்தமாகிய தேன்கமழ்கின்ற வுனது திருவடியாகிய தாமரை மலரினிடத்து அத்தேன் விருப்பமுள்ள வண்டானது நீங்காது பொருந்தியிருத்தல்போலச் சுகவிருப்பத்தாலதனை யனுபவிக்க விசைந்து கலந்து நிற்குந் தன்மையை யிம்மனம் விருப்பமுற்றுத் தெரிந்து கொள்ளுதற்கு எளிதாகிய மார்க்கத்தினை யறிவிக்கவேண்டும். எ—று. (68)

அ-கை:- இதுவுமது.

69. காட்டு மிருகமெனக் கட்டுவிட்ட நாயென் ன
வோட்டம் பிடிக்கு முளமடக்காய்—நாட்டுபுக ழ்
புல்லுந் திருப்போரூர்ப் பூரணபு ராதன னே
நல்லுதவி யாமீதிந் நாள். *

யாவரும் விரும்பத்தகுந்த புகழ்பொருந்திய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வநாதி பரிபூரணனே வனங்களிற் றனதிஷ்டப்படி யோடித்திரிகின்ற மிருகம்போலவும், கட்டிய கட்டறுபட்ட நாயைப்போலவும் பூர்வப் பழக்கத்தா லோடித்திரிகின்ற மனத்தினது அவ்வாசனை யடங்குமாறு திருவருள் புரிக. அங்ஙனஞ் செய்யினிக் காலத்திலடியேனுக்கு அது கிடைத்தற்கரிய வுதவியாம். எ—று. (69)

அ-கை:- இதுவுமது.

70. நாளுக்கு நாளினிக்கு நற்கரும்பே நாயே ளை
யாளு மமரு ரரசேநின்—றுளரு ளா
யன்புமீக் கூர வகமசைவி லாதடங் கி
யின்புருவா யொன்று யிட. *

பொ-ரை. எந்நாளுந் தின்னுந்தோறுந் தெவிட்டுதலின்றி யினிமை யேதருகின்ற கரும்புபோன்றவனே! நாயினுங் கடைப்பட்ட என்னையுந் திருப்போரூரின் கண்ணடிமைகொண்டருளிய யதிராஜனே யிம்மனத்திற்குன் பாலன் பதிகரிக்கவும், அதனாலம் மனம் விஷயங்களைக் குறித்துச் சலிக்கா மலடங்கவும், அவ்வடக்கத்தாற் சுகாகாரமாயேகீபவித்து நிற்கவு முனது திருவடியை யாதாரமாகத் தந்தருளுக. எ—று.

சொற்பபாகந்தின்றவுடன் வேண்டாமென வெறுக்கத்தக்கதாய் விளைநிலத்திலுண்டாகி நசிக்கின்ற வேளைய கரும்புபோலின்றி யெந்நாளு மனுபவிக்குந்தோறும் பிரஹமாநந்த வடிவினிமையே தருதலாலும், அநாதி நித்தியமாயிருத்தலாலும் "நாளுக்கு நாளினிக்கு நற்கரும்பே," என்றார். (70)

அ-கை:- மனத்திற்குத் தளர்ச்சி நீங்குமுறை கூறல்.

71. இடராம் விடயத் திடைநாடி யோடி ப்
படருற்று வாட்டப் படுகை—விடுமன மே
சீராரும் போரூர்ச் சிதம்பரதே வன்றிருத்தா ள்
வாரீசப் பூவா வையேல். *

பொ-ரை. துன்பமயமாகிய விடயங்களிடத்து விருப்பமுற்றோடியோடி வீழ்ந்து அவ்வோட்டத்தாற்றுக்கித்துத் தளர்கின்ற மனமே! நீயத்தொழிலை விடுத்துச் செல்வநிறைந்த திருப்போரூரின்

கண்ணெழுந்தருளிய சிதம்பர தேசிகருடைய திருவடியாகிய தாமரை மலர் வடிவ மாகுதி. அங்ஙன மாவாயே லுனக்குப் பிரஹமானந்தமடையப்படு மதனடைவான் முன்னுடையப்பட்டுள்ள தளர்ச்சி யுன்னை விட்டு நீங்கும். எ—று.

சீராரும் போரூர்ச் சிதம்பரதேவன்றிருத்தாள் வாரீசப் பூவாவையேல் என்றதனுல் விடுத்து என்பதும் உனக்குப் பிரஹமானந்தம் அடையப்படுமென்பதும் வருவிக்கப்பட்டன. (71)

அ—கை:- இதுவுமது

72. வையா கரணமெலாங் கற்றூன் மனந்துய ரா
னையாம லுய்யுநிலை நல்குமோ—வையா
சமரூ ரிறைவாநின் றுணிழலி லன்பு ற்
றமையுநிலை யொன்றே யலால். *

பொ-ரை. திருப்போரூருக் கிறைவனுகிய சற்குருநாதா! மனம் துன்பத்தால் வருந்தாமற் சுகமடையுமார்க்கத்தை யுனது திருவடிநிழலிலன்போடடங்கி நிற்குநிலை யொன்றுமாத்திரமம் மனத்திற்குத் தருவதன்றி யதற்கு வேருகிய வியாகரணந்தருக்க முதலிய நூல்களைக்கற்று லவ்வெல்லாக் கல்வியும் தருமோ தாரா. அதற்கு மாருகிய துக்கத்தையே தரும். எ-று.

பிரஹமாநந்தத்தை யனுபூதி ஞானத்தா லடைவதன்றிச் சாஸ்திர ஞானத்தாலடையக் கூடாதென்பார் "நின் றுணிழலி லன்புற் றமையுநிலை யொன்றே யலால் வையா கரணமெலாங் கற்றூன் மனந்துயரா னையாம லுய்யுநிலை நல்குமோ" என்ருர். (72)

அ—கை:- பிராரத்ததுன்ப நீடிக்காமற் போக்கியருளுக வெனல்.

73. அல்லா மவித்தை யவித்ததுபோ லற்பதுன் பு
நில்லா தொழித்தியிந்த நெஞ்சினுக்கு—நல்லதிரு ப்
போரூ ரரசேநின் பொற்றாளில் வற்று த
வாரா தரந்தருத லால். *

பொ-ரை. நன்மையமைந்த திருப்போரூரின் கண்ணெழுந் தருளிய யதிராஜனே! இருள்வடிவாகிய வஞ்ஞானத்தை முன்னொரு சொல்லாற் கெடுத்ததுபோல விந்நாளிலுனது அழகிய திருவடியினிடத்து இம்மனத்திற்குக் குறைவற்ற வன்பினைக் கொடுத்து அதன்வாயிலாக வற்பமாகிய பிராரத்தத்தால் வருந் துன்பங்களையு நீடித்து நிற்கவொட்டாமல் விரைவிற் போக்கியருளுக, எ—று.

சஞ்சிதம்போல வநேக ஜன்மத்திற்குக் காரணமாகாமற் பிராரத்த மிவ்வொரு ஜன்மத்திற்கு காரணமாகுதலா லற்பமெனப் பட்டது.

இம்மனத்திற்குனது திருவடியினிடத்து மிகுந்த அன்பினைக் கொடுத்துப் பிராரத்த துன்பத்தைக் கெடுத்து விடென்பார் "இந்நெஞ்சினுக்கு நின் பொற்றாளில் வற்றுத வாரா தரந்தருதலால் அற்பதுன்பு நில்லாதொழித்தி" யென்றார்.

அவித்தது போல் என்றதனால் இந்நாளில் என்பதும் முன்னொரு சொல்லால் என்பதும் வருவிக்கப்பட்டன. அற்பம் ஆகுபெயர். வற்றுத வாராதா மென்றது மஹத்தரமான வன்பை. (73)

அ—கை:- மனம் பிராரத்த துக்கத்தால் வருந்தா வண்ணந் திருவடி நிழலருளும்படி வேண்டிக்கோடல்.

74. ஆலைக் கரும்பா யகந்துயரா லையாது ன்
காலருளிக் காலங் களிப்படைய—மேலோர்க ள்
சூழ்ந்துதொழப் போரூரிற் றாயசிதா காயமதா ய்
வாழ்ந்துவரு தேசோ மயா, *

பொ-ரை. அறிஞர்கள் வலஞ்செய்து வணங்கத்திருப்போ ரூரின் கண்ணின் மலமாகிய ஞானவிண்வடிவா யெழுந்தருளிய பேரொளிப் பிழம்பே! செக்கின் கண்ணகப்பட்ட கரும்பு நைதல் போலப் பிராரத்தத்தால் வருந்துன்பங் களிலகப்பட்டு மனம் வருந்தாவண்ண மிந்நாளிற் சுகமடையும் பொருட்டுனது திரு வடியைத் தந்தருளுக. எ—று. (74)

அ-கை:- நிருவிகற்ப சமாதிக்கு விக்கினம் பண்ணுகின்ற துன்பங்களைக் கெடுக்கவேண்டுமெனல்.

75. மயல்கெடுத்தாய் துட்ட மதிக்கதிக தீ ய
வியல்கெடுத்தாய் நன்றே யெனினும்—முயல் கெடுக்கு ந்
துன்பங் களையேன் றுடைக்கின் றிலைபோ ரூ
ரென்பரமா நந்தா விசை. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வெனது பேரின்ப சொரூபியே! மயக்கத்திற் கேதுவாகிய வஞ்ஞானத் தையும், மனத்தின் கண்ணிருந்த மிகுந்த கொடிய தீய குணங் களையும் முன்பு கெடுத்தனை. இவையெல்லா மடியேனுக்கு நன் மையேயாமென்றாலும் உனது திருவடியின் கண்ணடங்கிச் சுக மடையும் பொருட்டுச் செய்கின்ற முயற்சியைத் தடைசெய்கின்ற துன்பங்களை யாது காரணத்தாற் கெடுக்காதிருக்கின்றா யிங்ஙனம் மிருத்த லுனது பேரருளுக்குக் குறைவா? அல்லவா? கூறுக. எ-று.

முயலென்றதனால் உனது திருவடியின்கண்ணடங்கிச் சுக மடையும் பொருட்டுச் செய்கின்ற என வருவித்தாம். (75)

அ-கை:- இம்மனத்திற்கு வாசனக்ஷய முதலியன வருளுக வெனல்.

76. இசைவாக வுன்ற னின்னடியென் சென் னி
மிசைநிறுவி யல்விடயம் வீட்டி—நசையின் ப
மொன்றிலே யோங்க வுளமுவப்பச் செய்தியா ல்
வென்றிபெறு போரூர் மெயா. *

பொ—ரை. வெற்றிபெற்று விளங்குகின்ற திருப்போரூரி லெழுந்தருளிய சச்சிதாநந்த சொரூபியே! சூரியன்போற் பிர காசிக்கின்ற வுனது திருவடியினை யெனது சிரத்தின்மீது இணங்கி நிற்குமாறு நிறுத்தி, யவ்வேதுவால் மனத்தின் கண் ணிருந்த விருளையொத்த வஞ்ஞானத்தின் காரியமாகிய விஷய வாசனையைக் கெடுத்து, அவ்வாசனக்ஷயத்தா லம்மனத்திற்குப் பிரஹமாநந்த மொன்றின் மாத்திரமே விருப்பம் பெருகச் செய்து, அப்பெருக் காலாநந்தானுபூதியு மதனூற்றிருத்தியு முள வாகும்படி யருள்புரிக. எ—று.

விடயம் ஆகு பெயர். உவப்ப என்றதனல் ஆனந்தானுபூதி வருவிக்கப்பட்டது. தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கது. செய் யுளிலுள்ள ஏகாரம் சாரியை இடைச்சொல். ஆல் அசைநிலை. (76)

அ—கை:- தேகம் தனக்கு வேறுபட்ட காரணங் கூறல்.

77. மெய்யென்ற போரலே மேவுடனு னென்றிருந் த
னு சுமையவினை மாற்றியதை மாறுக்கி—யைய ன்
சமரூர னம்மெய் ஜடமென் றெரு பே
ரமையுமது வுங்காட்டி னன். *

பொ-ரை. திருப்போரூருடையவனுகிய சிதம்பர தேசிகன் பிராரத்தத்தால் வந் துபொருந்திய தேகத்திற்கிட்டு வழங்குகின்ற

மெய்யென்னு மொருபெயர் மாத்திரத்தா லப்பெயர்க்குப் பொருள் சத்தியமென்றும் அதுபற்றி யச்சத்தியமாகிய வத் தேகமேதானென்றும் நிச்சயித்திருந்த பிராந்தி ஞானத்தை யதற்கு மாருகிய வுண்மை ஞானத்தை யுபதேசித்தல் வாயிலாகக் கெடுத்து மேலு மச்சரீர மான்மாவல்லவென்பது திடமாதற் பொருட்டு அத்தேகத்திற்கு ஜடமென வொருபெயர் மருவி வழங்குவதையு மறிவித்தான். எ-று.

தேகமேதானென நிச்சயித்திருந்த பிராந்தி ஞானத்தை நீ தானுக நிச்சயித்திருந்த தேகம் சேதனனுகிய வுன்னு லறியப்படுதலால் ஜடமும் உனக்கு வேறு மாமெனவுண்மை ஞானத்தை யுபதேசித்துக் கெடுத்தானென்பார் "உடனுனென்றிருந்த மையவினைமாற்றி யதை மாருக்கி" எனவும், தனதுபதேச வுண்மையை யுலக வழக்கானுங் காட்டினனென்பார் "அம்மெய் ஜடமென்ருெரு பேரமையு மதுவுங் காட்டினன்" எனவும், கூறினர். ஜடமென்ருெரு பேரமையு மதுவுங் காட்டினன் என்றதனல் சரீர மான்வா வல்ல வென்பது திடமாதற் பொருட்டு என வருவித்தாம்.

ஏகாரம் அசை நிலை. மாருக்கி என்பது செயவெனச்சத்திரிபு. அதை என்றது உருபு மயக்கம். (77)

அ-கை. குருவைப்பல விசேடணங்களாற்றுதித்துத் தன்னிடத்துப் பரிபூரண கிருபை செய்யவேண்டுமென வேண்டிக் கோடல்.

78. ஆனு வமுதே யடியார் மிடிகெடுத் து
வானோர்க் கரியசுக வாழ்வருளுங்—கோ னே
ஜகநா யகனே சமரூரில் வாழ் தே
சிகநாய காகிருபை செய். *

பொ-ரை. என்னினின்றும் பிரிவற்ற மோக்ஷ சொரூபியே, தனதடியார்களுக்குப் பிறவித் துக்கமாகிய வறுமையைக் கெடுத்துத் தேவர்களுக்குங் கிடைத்தற்கரிய பிரஹமானந்தமாகிய செல்வத்தைக் கொடுக்கின்ற விறைவனே, பிரபஞ்சத்திற்குத் தலைமையானவனே, திருப்போரூரின்கண்ணெழுந்தருளிய சற்குரு நாதா, அடியேனிடத்துக்குறைவற்ற கருணை செய்க. எ-று.

ஆனுவென்பது பின்னுஞ் சென்றியைந்தது. சிறப்பும்மை விகாரத்தாற் ெறாக்கது. சுகவாழ்வு என்றதனுல் பிறவித் துக்கமாகிய என வருவித்தாம். (78)

அ—கை. தனது சுதந்தரமின்மையையும் ஆசிரியாது பேரருளுடைமையையுங் குறிப்பித்தல்,

79. செய்வித்தாற் செய்வேன் செயலொழித்துன் றாணிழ லி
லுய்வித்தா லுய்வேன்வே றொன்றறியே—னையா
திருவுளத்தா னல்லவருள் செய்யமரூர் வாழ்வே
யொருதமியே னின்புற் றுய. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெனது செல்வமாக வெழுந்தருளிய சற்குருநாதா! * ஆண்டவனுகிய நீ யெதையாயினுஞ் செய்வித்தா லதனைச் செய்வேன். அவ்வாறின்றி யுனது திருவடி நிழலிற் சுகியாக்கினுற் சுகியாவே னிவ்வளவேயன்றி யான் சுயமாக வொன்றுஞ் செய்யவறியே னுதலாலிழிவினுலுவமையற்ற வடியேனுஞ் சுகானுபவ முற்று வாழும்படி தெய்வீகமாகிய வுனது சித்தத்தாலினிய கருணைபுரிக. எ—று.

---

*இங்கு ஆண்டானடிமை யென்னும் பேதம் துவம்பத வாச்சியத்துள்ள சிதாபாசனுக்குக் கூறினர். எனெனின் அவனே தேகாதிகளினபிமானியாதலாலென்க. இவ்வாறு பேதத்' தன்மை யபேதத் தன்மை கூறியவிடங்களில் முறையே சிதாபாசனையுங் கூடஸ்தனையும் பொருளாகக் கொள்க.

அ—கை:- மனத்திற்கின்ப மடையும் வழி கூறல்.

80. உய்யுநெறி யாதென் றுளமேகேள் கேட்கின ம
தையன்போ ரூரினமை யாண்டவனை—மெய்யார ச்
சூழ்ந்து புகழ்ந்து துதிசெய்தட் டாங்கமுற த்
தாழ்ந்தின் புறுவதுவே தான். *

பொ-ரை. மனமே! நாம் பிராரத்த துக்கத்தினின்று தப்பிப் பிழைக்கு மார்க்கமியாதென்று கேட்கிற் கூறுகின்றேன் கேள். நமது தந்தையும், திருப்போரூரின் கண்ணெம்மையாட்கொண்டவனுமாகிய சிதம்பரதேசிகனை வலஞ்செய்து சரீரத்தின் கண்ணுள்ள எட்டுறுப்புக்கள் பூமியிற் பொருந்தும்படி வணங்குதலாலும், அவனது கீர்த்திகளை நாவாரப் புகழ்ந்து தோத்திரஞ் செய்தலாலும், அவனது திருவடியிற் பொருத்தமுறக் கலந்தசைவறவிற்றலாலு மின்பமடைதல் கூடும். இவ்வாறின்ப மடைதற்கேதுவாகிய முக்கரண வியாபாரங்களே யுய்யுநெறி யென்றுணர்க. எ-று. (80)

ஒருமொழி யொழித தன்னினங் கொளற்குரித் தென்பதனால் மனத்தின் றொழில் வருவிக்கப்பட்டது.

புகழ்ந்து துதிசெய்து என்றதனால் அவனது கீர்த்திகளை நாவார என வருவித்தாம். துதிசெய்து என்பதூம் தாழ்ந்து என்பதூம்செயவெனச் சத்திரிபுகள். ஏகாரமும் தானும் அசைநிலைகள். முடிக்குஞ் சொற்றொக்கு நின்றமையின் வருவித்தாம். (80)

அ—கை:- அநாதி நித்திய சொப்பிரகாச னெனது குருவெனல்.

81. தானய் முழுதுமாய்ச் சாரு முழுமுதலாய் க்
கோனய்ப் பொதுவினின்றைங் கூத்தாடு-வான்முறையே
யாட்டி யருள வமரூரி லந்நாளி ற்
கூட்டி யெனையாள் குரு. *

பொ—ரை. பிரளயகாலத்திலநாதி நித்திய சொப்பிரகாச வடிவத்தாற் றன்மாத்திரமாய், சிருட்டிகாலத்திற் றன்னிடத் தத்தியஸ்தமாகிய பிரபஞ்சப் பொருள்களனைத்துமாய்த், தன் னிடத்துக் கற்பிதமாகப் பொருந்தியெல்லாப் பொருள் கட்குங் காரணனுமாய், இறைவனுமாய், எல்லாச் சீவர்களிடத்துஞ் சம மாக நின்று பஞ்ச கிருத்தியமாகிய திருநடனஞ் செய்கின்றவ னெவனோவவனே யவ்வைந்தனுள் முன்னையவாகிய சிருட்டி, திதி சங்காரம், திரோபாவ மென்னும் நான்கன் பயனாகிய சுக துக்க வடிவ போகங்களை முந்திய பிறவிகள்தோறும் உண்பித்து இப்பிறவியிற் றன்னிற் கலப்பித்துப் பிரமானந்த வடிவ மோ க்ஷத்தைக் கொடுத்தற் பொருட்டுத் திருப்போரூரின்கண் முன் னொரு நாளென்னைத் தடுத்தாட்கொண்டு சற்குருமூர்த்தியுமா யினன். எ—று.

பொது என்பதற்கு மன்றமெனப் பொருளுரைப்பினுமமை யும் முறையே யாட்டி கூட்டி யருளவென்றியையும். (81)

அ-கை. அடிமையாகக் கொள்ளப்பட்ட தன்னிடத்துக் குற்றங் காணப்படினு மதுபற்றி விலக்காதாள வேண்டுமென்பதை நியாய பூர்வகமாக வேண்டிக் கோடல்.

82. குருபத்தி யில்லாக் கொடியே னெனினு
மருகுறலா காதென் றகற்றிற்—பெருகுபழி
யுன்னையே சாருமெலா மோர்ந்தாண்ட போரூரா
வென்னைநீ கைவிடா தே. *

பொ-ரை. எனது குணக் கிரியை களனைத்தையுஞ் சர்வஞ் ஞனாகிய நீ யறிந்து முன்னொரு நாளத் திருப்போரூரின் கண் ணென்னை யாட்கொண்டருளிய சற்குரு நாதா! குருபத்தி யில் லாத கொடியேனாயினும் அதுபற்றி யடியேனைச் சமீபத்தில் வா லாகா தென்றடிமைத் தன்மையினின்று விலக்கலாகாது. அங்

கனமின்றி விலக்குவாயேல் முதலிலாட்கொண்டு பின் விலக்குத லால் விருத்தியாகின்ற நிந்தையான துன்னேயே வந்தடையுமென்க. அப்படியன்று குரு பத்தியில்லாத துஷ்டனைத் தண்டித்து விலக் குதல் நியாயமாகுமேயன்றி நிந்தையாகாதென்பாயேல் முற் கா லத்திற் சோதித்தறியாதடிமைகொண்டு பின் விலக்குதல் "எண் ணித் துணிக கருமந் துணிந்தபின் னெண் ணுவமென்பதிழுக்கு" எனக்கூறுகின்ற நீதி நூல் வாக்கியத்திற்கு விரோதமாதலோடு முற்காலத்திலேயே யென்னிடத்திருந்த கெட்டகுணங்களை யறியாமலாண்டதாகிய அவ்வறியாமையால் உனது சர்வஞ்ஞத் தன்மைக்கும் பங்கமுண்டாகும். ஆதலாலத்தன்மைய குற்றங்கள் சாராவண்ணம் அடியேனை விலக்காமல் முற்றுங் காத்தரு ளுக. எ-று.

எகாரம் பிரி நிலை. உன்னேயே சாருமென்னை நீ கை விடா தே என்றதனால் இடையிற் பிற சொற்கள் வருவித்தாம். (82)

அ-கை. தனக்குக் குருவின் றிருவடி யினிடத்தித் தன் மைத்தாக வன்புண்டாகவேண்டுமென்பதைத் திருஷ்டாந்தங் காட்டி வேண்டிக்கோடல்.

83. ஏவிழியார் பால்விடர்க்கன் பெவ்வாறவ் வாறுன து
சேவடிக்க ணன்புதிக்கச் செய்குவாய்—பூவகத்துத்
தேன்றுளிக்க மீன்றுளிப்பாய் செந்தா மரைத்தடஞ்சூழ்
வான்றுதிப்போ ரூரிலிறை வா. *

பொ-ரை. மலர்களினிடத்து நிறைந்துள்ள தேனை து ளித்துளியாகச் சிந்தும்படி மீன்கள் துள்ளித் தாவுகின்ற வழ கிய தாமரைத் தடாகங்கள் சூழ்தலாலும், பெருமை பெற்ற அன் பர்கள் செய்யுந் துதிகளாலுஞ் சிறந்து விளங்குகின்ற திருப்போ ரூரின்கண் ணெழுந்தருளிய சற்குரு நாதா! அம்புபோற் கூர்மை

பொருந்திய கண்களையுடைய மங்கையரிடத்துக் காமுகர்களுக்கு எப்படி மிகுதியாக விருப்பமுண்டாகுமோ அப்படி மிகுதியாக வழகு பொருந்திய வுனது திருவடியினிடத் தடியேனுக்கன்புண்டாகும் வண்ணந் திருவருள் புரிக. எ—று.

சூழ் என்பதும் ஆதி என்பதும் முதனிலைத் தொழிற்பெயர். வான்-ஆகுபெயர். (83)

அ-கை. குரு மூர்த்தியைத் தன் மனத்தின் கண்ணிருந்து துன்பங்களை நீக்குமாறு வேண்டிக்கோடல்.

84. வாராயோ வேழை மனத்தின்கண் வந்திருந் து
தீராத் துயரனைத்துந் தீராயோ—போரூ ரா
வற்பரு மெய்யடியார்க் காரமிர்தா யங்கில கு
சிற்பரா நந்த சிவா. *

பொ-ரை. திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய சற்குருநாதா! அன்புமீங்கு தலில்லாத மனமுடைய மெய்யடியார்களுக்கு அனுபவிக்கத்தக்க வமிர்த மயமாயவ் வவரிடத்து விளங்குகின்ற வொப்பற்ற சிதாநந்த சிவ சொரூபியே! அடியேன் மனத்தின் கண்ணு மவ்வடிவமாய் வெளிப்படுக. வெளிப்பட்டு நின்று வேறுபாயங்களாற் றீராத துன்பங்களை யெல்லாந் தீர்த்தருளுக. எ-று.

ஓகாரங்களிரண்டும் அசை நிலைகள். சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. (84)

அ-கை. மனவடக்கத்தின் பயன் கூறுதல்,

85. சிவாவென்ற சொற்குமறுத் தீவினையா ளு
முவாவிந் தொளிபோ லொடுங்கி—னிவா த
விளக்காய்த் துளக்கறுள மேவுபரா நந் த
மளக்கவல்லா ரார்போரூ ரா. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருநாதா! ஏகாக்கிர சித்தத்தாலொருகாற் கூறும் சிவாவென்ற சொல்லுக்கும் அம்மனவொருமையின் மகிமையால் வேறுபாயங்களாற் றீராத கொடிய வினைப்பயன்களும் பூரணைச் சந்திரனது பிரகாசம் வரவரக் குறைதல்போல நாள் செல்லச் செல்லக் குறைந்தொடுங்கி விடுமெனப் புராணங் கூறுகின்றன. அவ்வளவுகால மனைவடக்கத்திற்கும் அவ்வளவு பயனுளதாமாயின் காற்றின் பிரதிபந்த மில்லாத விளக்குப்போல நெடுங்காலம் விஷய வாசனையின் பிரதிபந்த மில்லாம லசைவறுதியைப் பெற்ற வுள்ளத்தின்கட் பொருந்துகின்ற பிரஹமாநந்தத்தை யிவ்வளவின தெனவரை யறுப்பவர்யாவ ரொருவருமிலர். எ—று

ஆன். ஆல். அசைநிலைகள். ஆர் என்பது யாவரென்னுஞ் சொற்றிரிபு. (85)

அ—கை:- குருவினெதார்த்தத்தன்மை யிதுவெனல்.

86. ஆவின் முதலெழுத்தொன் றெல்லாமாய் வேறுமா ய்
மேவுதல்போற் பூதாதி மெய்யிருப்—பாவியங்கு ப்
பூரணனாய் வேறு பொருளாகி நிற்குதி யே
லார்போரூ ராதினறி வார். *

பொ—ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருநாதா! நெடுங்கணக்கி லாகாரமென்னும் நெட்டுயிருக்கு முன் வைக்கப்பட்டுள்ள அகாரமென்னும் பெயருடைய குற்றுயிரெழுத் தொன்று தானே தனித்தியங்கும் வன்மையுடைய வுயிரு மவ்வுயிரோடு கூடியியங்குதலல்லது தனித்தியங்கும் வன்மையில்லாத மெய்யு மவ்விரண்டன் கலப்பாற்றோன்றிய வுயிர் மெய் முதலிய சார்புமென வொலிவடிவத்தால் விரிந்துள்ள வெல்லா வெழுத்துக்களுமாய் அவற்றிற் பூரணமுமாய் அங்ஙனம் எல்லா எழுத்துக்

களுமாக விரிந்து அவற்றிற் பூரணமாயிருப்பினும் அவ்வெல்லா வெழுத்துக்களோடுஞ் சம்பந்தியாது வேறுமாய் நிற்றல் போலச் சொப்பிரகாச சொரூபமாயிருத்தலாற் சுவகதாதி பேதமற்ற நீ யொருவனே சுயமே விளங்கும் பிரஹம சேதனமும், உனது சம் பந்தத்தால் விளங்குதலல்லது சுயமே விளங்காத ஜடவடிவப் பிரகிருதியும் அவ்விரண்டன் (பிரஹமப்பிரகிருதிகளின்) கலப்பாற் (கற்பிததாதான்மியசம்பந்தத்தாற்)றோன்றிய பஞ்சபூதமுதற் றூல தேக பரியந்தமாகிய ஜடசேதனவடிவ நாமரூபமயப் பிரபஞ்சப் பொருள்களனைத்துமாக விரிந்து அவற்றி னகமும் புறமும் பூரணனு (நிறைந்தவனு) மாய் அவ்வாறு பொருள்களனைத்துமாக விரிந்து பூரணனுமாயிருப்பினுமப் பிரபஞ்சப் பொருள்களிற் சம்பந்தியாது அவற்றின் வேறுமாப் (அசங்க சச்சிதாநந்த சொரூபியுமாய்) நிற் கின்றாயெனி லித்தன்மையனாகிய வுன்னையுள்ளபடி யறிபவர் யாவர் அஞ்ஞானிகளொருவருமறியார். எ—று.

அகாமொன்றுதானே யேனையவுயிரும் மெய்யுமாகிய முத லெழுத்துக்களும் அவ்விரண்டன் கலப்பாற் றோன்றிய வுயிர் மெய்யும், ஆய்தமும், உயிரளபெடையும், ஒற்றளபெடையும், குற் றிய லிகரமும் குற்றியலுகரமும், ஐகாரக் குறுக்க மும், ஔகாரக் குறுக்கமும், மகாரக் குறுக்கமும், ஆய்தக் குறுக்கமெனக் கூறப்படுகின்ற பத்து வகைச் சார்பெழுத்துக் களுமாகிய வெல்லாமு மாயென்பார் "ஆ வின் முதலெழுத்தொன்றெல்லாமாய்" எனவும், ஏனைய வெழுத் துக்கள்போலக் கழுத்தும் மூக்கும் மார்பும் உச்சியுமாகிய நான் கிடத்தையும், உதடும் நாக்கும் பல்லும் மேல்வாயுமாகிய நான் கன் றொழிலையும் பற்றிப் பிறந்து கெடாமையா லவற்றினும் வே றென்பார் "வேறுமாய்" எனவும் நீயொருவனே சுயமே விளங் குஞ் சேதனமுஞ் சுயமே விளங்காத பிரகிருதியுமென்று கூறப் படுகின்ற விவர்த்தவுபாதான பரிணாமியு பாதானமாகிய விருவ

கைக் காரண வஸ்துக்களும் அவ்விரண்டன் கலப்பாலுண்டா கிய பஞ்சபூதமுதற் றூலதேக பரியந்தமாகிய காரிய வஸ்துக்க ளுமாக விரிந்தனை யென்பார் "பூதாதி மெய்யீருப்பாவி" எனவும், அவ்வாறு எல்லா வஸ்துக்களுமாயிருப்பினும் அங்கு அசங்க சச் சிதாநந்த பரிபூரண சொரூபியாயு மிருக்கின்றாயென்பார் "அங்குப் பூரணனாய் வேறுபொருளாகி நிற்குதி" எனவும், இவ்வாறிருக் கின்ற வுனதெதார்த்த சொரூபத்தை யஞ்ஞானிகளறியாரென் பார் "நினறிவாரார்" எனவும் கூறினர்.

பொருள்வினை உவமையின் கண்ணுஞ் சென்றியைந்தது. முற்றும் எச்சமுமாகிய உம்மைகள் விகாரத்தாற் றொக்கி நின்றன. நீனறிவாரென்பது தொகுக்கும் வழி தொகுத்தல். (86)

அ-கை:- ஏகனாகிய நீ சிலருக்கவாவர் வடிவ முஞ்சிலருக்குப் பிரபஞ்சவடிவமுமாக விளங்குதற்குக் காரணம் யாதெனல்.

87. ஆராய்வார் பாலவரே யாகி யதுவொழிந் த
நீரா ரிடத்துலகாய் நிற்கின்றாய்—போரூர் ச்
சினகரத்தி லெந்நாளுந் தேவதுதி மல்க த்
தினகரனாய் வாழுச் சிதா. *

பொ-ரை. எக்காலமுந் தேவத் தன்மை யுடையாற் செய் யப்படுகின்ற துதி பெருகத் திருப்போரூரின்கண் விளங்குகின்ற வாலயத்தினிடத்துச் சூரியன்போல ஞானச் செல்வ வழகனா யெ ழுந்தருளிய சற்குரு நாதா! உன்னை யெத்தன்மையுடையையா யிருக்கின்றாயென்று விசாரிக்கின்ற வடியாரிடத்து நீயவாது எ தார்த்த சொரூப மேயாயிருக்கின்றா யவ்விசாரிக்குந் தன்மை யில் லாத வநதிகாரிகளிடத்துச் சட சேதன வடிவப் பிரபஞ்சமாகவே நிலைத்து நிர்கின்றாய். இங்ஙனமாகி நிற்றற்குக் காரணம் யாது எ—று.

தொக்கதும் தொகாததுமாகி யேகாரங்களிரண்டும் தேற்றப் பொருளில் வந்தன. நிற்கின்றூயென்பது முன்னுஞ் சென்றி யைந்தது. (87)

அ-கை. திரிகாணங்களு நின்பணியே செய்யுமாறருளுக வெனல்.

88. சிதாநந் தகனு முத் தேகதக னுவை ற்
புதாநந் தகநாப் புதைகள்—விதானமுற ச்
சிந்திக்க வாழ்த்தப் பணியத் திருப்போ ரு
ரெந்தா யருளுதியா வீண்டு. *

பொ-ரை. திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய வெந்நந் தையாராகிய சற்குரு நாதா, சச்சிதாநந்தக் கட்டியே, எனது தூல சூக்கும காரணமென்னும் மூன்று தேகங்களையுந் தகித்தவனே, யறிந்தோ ரதிசயிக்கத் தக்க சொரூபியே! யுருவங்கெட்ட மனமும், நாவும், சரீரமுமாகிய வித் திரிகாணங்களும் முறையே நிராகார மேயாய் நிற்கவும், துதிக்கவும், வலஞ்செய்து வணங்கவும் விரை விற் கிருபை செய்க. எ—று.

ஆல் அசை நிலை, (88)

அ-கை. பார்த்தவிடமெல்லா முனது சொரூபமே விளங்கு மாறருளுக வெனல்.

89. ஈண்டாண் டெனும்விகற்ப மெல்லா மழிந்தொழி ய
யாண்டுநீ யாய்விளங்கு நன்மையொன்றே—வேண்டு ந்
திருப்போரூர் மேவியமெய்த் தேசிகா செந் தா
ளருப்புவிடா நாயேற் கருள். *

பொ-ரை. திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய சற்குரு

நாதா! இக் கடமிருப்பதிவ்விடம் அப்படமிருப்பதவ்விடம் என வஞ்ஞான மயக்கத்தாற் காணப்படுகின்ற பேதங்களெல்லாம் மித்தையாயொழிய மனோ கற்பிதமாகிய எவ்விடங்களும் பாமார்த்தமாகிய வுன்னுடைய சச்சிதானந்த சொரூபமேயாக விளங்குகின்ற விலாபமொன்றே விருப்பம். அவ்விலாபத்தை யுனதழகிய திருவடியாகிய தாமரை மலரைப் புகலிடமாக வடைந்த வடியேனுக்குக் கொடுத்தருளுக. எ—று.

ஈண்டாண்டெனும் விகற்பமெல்லா மழிந்தொழிய என்றவதனுல் மனோகற்பிதமாகிய பரமார்த்தமாகிய எனச் சிலவடைகள் பொருட்சிறப்பு நோக்கி வருவித்தாம். ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது- அரும்பு அருப்பென நின்றது. (89)

அ-கை. மேலதையே வலியுறுத்தல்.

90. அருளமுதந் தேக்க வடியேற் கருத் தி
மருள்வா சனையையற மாற்றித்—தெருளமை ய
நல்லசம ரூரிடையெந் நாளுஞ் சிதம்பரப்பே ர்
புல்லிவளர் வாழ்வே புரி. *

பொ-ரை. எக்காலமு நன்மை பொருந்துகின்ற திருப்போரூரின்கண் சிதம்பரமென்னுந் திருநாமத்தைப் பொருந்தி வளர்கின்ற ஞானச் செல்வமே! அடியேனுக் குனது கிருபையாகிய வமிர்தத்தை நிறையப் புசிப்பித்து அதனுல் மயக்கத்துக்கேதுவாகிய விஷய வாசனையை முற்றுங் கெடுத்து அதனுலுள்ளதை யுள்ளவாறெப் பொழுதுங் காணுந்தெளிவு நிறையுமாறு கிருபை செய்க. எ—று.

எந்நாளுமென்பது முன்னுஞ் சென்றியைந்தது. (90)

அ—கை. அடியேனுக்குனது திருவடியிலேயே யன்புண்

டாகவு மதனுன் மனமடங்கவு மதனுற்றுக்க நீக்கிச் சுகமுண்டா கவுங் கிருபை செய்யெனல்.

91. புரிவென்று நீங்காதுன் பூவடியிற் ரே ய
விரிவொன் றுளங்குவிவை மேவப்—பரிவின் றி
யின்பம் பெருக வியற்ருய் திருப்போ ரூ
ரென்பரமா நந்தா வெனக்கு. *

பொ-ரை· திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வெனது பேரின்ப சொரூபியே! அடியேனுக்கன்பானது தாமரை மலர் போன்றவுன்னுடைய திருவடியினிடத் தெக்காலமு நீங்காது பொருந்தவும், அவ்வன்பினுலே நாநாவிஷயாகாரமாக விரிவையடைந்த மனமதனையொழித்தனது திருவடியிலடங்கவும், அவ்வடக்கத் தாற் பிராரத்த துக்க நீங்கிப் பிரஹமாநந்தாநுபூதி யதிகரிக்கவுங் கிருபை செய்க. எ—று.

உன் பூவடியில் உளங்குவிவை மேவ எனப் பின்னுஞ் சென் றியைந்தது. (91)

அ—கை. தன்னிடத்துக் குற்றங் காணப்படினும் பொறுத் தருளுக வென்று வேண்டிக்கோடல்.

92. எனக்கினியா ரில்லை யிருந்தாலும் வேண்டே ன்
மனக்கினிய வின்புதவெம் மானே—தனக்குவ மை
யற்றதிருப் போரூ ரரசே யடியேன்பா ற்
குற்றமுறி னும்பொருத்தாட் கொள். *

பொ-ரை. செல்வ முதலியவற்றின் வளங்களாற் றனக்குவமையற்ற திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய யதிராஜனே, மனத்திற்கு சிரங்குச நிருத்தியைத் தந்த பிரஹமாநந்தத்தை விளக்கிய வெம்பிரானே! அடியேனுக்கு இத்தன்மைய வுபகாரஞ் செய்தருளிய வுன்னைத்தவிர வினியன செய்வாரில்லை. அங்ஙன

மில்லாதிருக்கவு மினியன செய்வாருளரெனப் பிறர் கூறினு மக் கூற்றை யான் மனத்துட் கொள்ளேன். இவ்வாறுன்னையே நம் பியிருக்கின்றவற்ப வறிவுடைய வடியேனிடத்துக் குற்றங்காணப் படினும் அதைப் பொறுத்துக் கிருபை செய்க, எ—று.

இருந்தாலும் என்பது அங்ஙனங் கூறுவார் இன்மை விளக்கி நின்றது. மனத்துக்கு என்பது மனக்கு என நின்றது. இனியது என்பது துவ்வீறு குறைந்து நின்றது. உதவு என்பது முன்னுஞ் சென்றியைந்தது. (92)

அ-கை. தானணிகின்ற வந்தாதித் தொடையைப் புன்றொவாற் செய்யப்பட்டதென்றுவது, வெள்ளையென்றுவது தள்ளி விடாமல் அணிந்துகொள்ளும்பொருட்டு நியாய பூர்வகமாக வேண்டிக்கோடல்.

93. கொள்வாய்போ ரூர்மேவு கோவேபுன் னுவடியேன்
விள்ளு மிசைத்தொடையை வெள்ளையென்று-தள்ளாதே
வெள்ளையின்பாற் கள்ளமொன்று மேவாமை கொண்டு [முன்சீ
ருள்ளுரையாய் நிற்பதுகொண் டும். *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய யதிராஜனே! அடியேனெனது புல்லிய நாவாலுனது திருவடிக்கணியும் பொருட்டுப் பெயர் வினை யிடை யுரியென்று நான்கு வகைச் சொற்களாகிய மலர்களாலந்தாதி யென்னும் பெயருடைய இசைத் தொடை (சொன்மாலை) யைக்கூறு (தொடுக்) கின்றேன். இத் தொடையை வெள்ளை யென்றுவது புல்லிய நாவாலாகியதென்றுவது வெறுப்புற்றுத் தள்ளிவிடாதே யேனென்றால் வெள்ளையினிடத்து யாதொரு கள்ளமும் பொருந்தாமையானும், நாப்புல்லியதாயினுமதன் கண்ணுளவாகிய சொற்கள் சுவையுடைத்தாயிருத்த

லாலும், படித்தன் முதலியவற்றைச் செய்வோர்க்கு அவற்றின் பொருள் சித்த சுத்தியைத் தாத்தகுந்த வுனது கீர்த்தியை யுடையதாயிருத்தலாலும், அவ்வெள்ளைத் தன்மை புல்லிய நாத்தன்மைகளைக் கருதாது விடுத்து அவற்றின்கண்ணுள்ள கள்ளமின்மை, புகழ்ப் பொருட்டன்மைகளை மனத்திற் கொண்டணிந்து கொள்க. எ—று.

இசைத் தொடை யென்னு மேகதேச வுருவத்தால் அத்தொடைக்குக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப் பூக்கள் கருவியாதல்போல வித்தொடைக்குக் கருவியாகிய பெயர்ச்சொன் முதலியவை வருவிக்கப்பட்டன. முற்காலத்திற் புல்லிய சொற்கள் பயின்றநா புன்மை வெனப்பட்டது. புல்லிய சொற்களாவன-பயனில்லனவு மிழிந்தனவுமாம்.

வெள்ளையென்றது-1. வெள்ளை மாலையையும், 2. வெண்பாவையும் 3. வெளிப்படையாகிய பொருளுடையதையுமென்க. அம்மூன்றன்கண்ணுந் தள்ளுதற்குரியனவாயமைந்துள்ள விழிவுகள் யாவை யெனின்

1.— வெள்ளை மாலையிற் செம்மைமுதலிய கண்டங்களின்மை [யால் அழகில்லாமையும்

2.— வெண்பாவில் அன்னியபாக்கள் போலாது இரண்டடியாலா [கிய சிறுமையும்

3.— வெளிப்படையாகிய பொருளுடைமையில் வெற்றெனத் தொ [டுத்த லென்னுங் குற்றமுமாம்.

வெள்ளையின்பாற்கள்ள மின்மைகளாவன

1.— வெள்ளைமாலையின்கட் கண்டமாலையிற் போலப்பசிய கண் [டத்திற்குரிய விலை முதலியன கலவாமையும்

2.— வெண்பாவில் அன்னிய பாக்களிற்போல வேற்றுத்தளை [விரவாமையும்

3. — வெளிப்படையாகிய பொருளுடையதில் அரும் பொருளுடைய திற்போலப்புலவரல்லாதார்க்குப் பொருள் விளங்காமையின்மை (எல்லோர்க்கும் பொருள் விளங்குந் தன்மை) யுமாம்.

பண்டைக் காலத்திலறியாமை யேதுவாகப்பயனில் சொற்களையு மிழிந்த சொற்களையும் பயின்ற நாவாலென்பார் "புன்ஞ" எனவும், சொன்மாலை யென்பார் "இசைத் தொடை" எனவும், வெள்ளைமாலை யாதலாற் கண்டமாலை போலழகில்லை யென்றுவது, வெண்பாவாதலாலன்னிய பாக்கள்போலாது இரண்டடியாகிய சிறுமையுடைய தென்றுவது, வெளிப்படையாகிய பொருளுடைமையால் வெற்றெனத் தொடுத்த லென்னுங்குற்ற முடைய தென்றுவது தள்ளற்கவென்பார் "வெள்ளையென் று தள்ளாதே" எனவும், வெள்ளைமாலையின்கட் கண்டமாலையிற்போல இலை முதலியவற்றின் கலப்புக்குற்றமும், வென்பாவிலன்னிய பாக்களிற்போல வேற்றுத்தளைவிரவுதற் குற்றமும், வெளிப்படையாகிய பொருளுடையதில் அரும் பொருளுடையதிற்போலப் புலவரல்லாதார்க்கு விளங்காமையாகிய குற்றமுமில்லாமையாலென்பார் ' வெள்ளையின் பாற்கள்ளமொன்றும் மேவாமை கொண்டும்" எனவும், புல்லிய நாவாற் செய்யப்படினும் அச்சொற்களுமவற்றின் பொருள்களும் சுவையோடு கூடியனவாயிருத்தலாற் கோரோசனை முதலிய வுயர்ந்த வஸ்துக்களை விவேகிகள் காணுங்கால் அவற்றினுயர்வை மாத்திரநோக்குதலன்றி யவற்றின் பிறப்பிடங்களினிழிவை நோக்கார். அவ்வேதுவாற்றுன் அசுத்த வஸ்துக்களினிடத்துப் பிறந்த கோரோசனை முதலியவற்றை யாவரும் விருப்பமுடனேற்றுக் கொள்ளுகின்றனர். அதுபோல விச்சொன் மாலையை நாவினது புன்மையை நோக்காமலதன் காரியமாகிய சுவையுடைச் சொற்களையும், அவற்றின் பொருளாகிய வுனது கீர்த்தியையும் மனத்துட்

கொண்டு விரும்பி யணிந்துகொள்ளென்பார் "உன்சீருள்ளுரை யாய் நிற்பதுகொண்டும் கொள்வாய்" எனவுங் கூறினர்.

காரிய வஸ்துக்களினுயர்வை நோக்குதலன்றி யவற்றின் பிறப்பிடங் களினிழிபை நோக்காரென்பதற்கு தாரணம்.

"தாமரை பொன் முத்துச் சவாங்கோ, ரோசனைபால் பூம ருதேன் பட்டுப்புனுகுசவ்வா தாமழன்மற், றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்க, ளெங்கே பிறந்தாலு மென்" எனவரும் மற்றும் வருவனவற்றுற் கண்டுகொள்க.

புன்னுவென்பதும் சீரென்பதும் பிறவிடங்களிலுஞ் சென் றியைந்தன-

அ—கை:- குருவின்றிருவடி தனது முடிக்கு முடியாகவு மவாது சொரூபம் மனத்திற்கு வசிப்பிடமாகவு நிலைபெறுமாறரு ளுகஎனல்.

94. உன்னடியே யென்முடிக்கோர் தென்முடியா வுற்றெளிர
வன்வடிவே யுள்ளத் துறையுளா—மன்னவருள்
செய்யாய் திருப்போரூர்ச் செய்யா சுயஞ்சோதி
யையாமெய் யாயது யா. *

பொ-ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய வழகிய சொப்பிரகாச நித்திய நின்மல சொரூப சற்குருமூர்த்தியே! உனது திருவடியே அடியேனுடைய சிரத்தின் கண்ணெப்பற்ற வழகிய கிரீடமாகப் பொருந்தி விளங்கவும், உன்னுடைய சச்சி தாநந்த சொரூபமே யெனதந்தக் கரணத்திற் குறைவிடமாக நிலைபெற்று நிற்கவுங் கிருபைசெய்க. எ—று.

ஏகாரங்களிரண்டும் பிரிநிலைப் பொருளில் வந்தன. துய்யா வென்பது துயாவென நின்றது. எ—று. (94)

அ—கை:- தன்னையடிமைத் தன்மையினின்று விலக்கலாகாதென்றுந் தனக்குத்திருவடி நிழல் கொடுக்கவேண்டுமென்றுங் குருமூர்த்தியினிடத்து நியாய பூர்வகமாக வேண்டிக்கோடல்.

95. ஆதார நீயே யகற்றிலடி யேன்வெறு
ஞாதா ரகமற் றவனுவே—னீ
ஜகத்தார் பணியமரூர்ச் சாமீ யபய
புகத்தா வடியம் புயம்.

நா
கா
ம்
*

பொ-ரை. சர்வாதாரனாகிய நீ யெந்நாளிருக்கின்றாயோ வந்நாளே ஆதேயனாகிய வடியேனுமிருக்கின்றேன். இவ்வாறநாதியே யடிமையாகிய வென்னை யவ்வடிமைத் தன்மையினின்று விலக்கலாகாது. விலக்குவாயேல் அடியேன் வெறுநான் (ஆதாரமிழந்த ஜீவன்) ஆகவேண்டும். இவ்வார்த்தை கேட்போர்க்கெல்லாம் வியப்பையுண்டு பண்ணுவது மாத்திரமேயாம். இவ்வளவேயன்றி யானொரு காலத்து மாதாரமிழந்தவனுகேன். எதனாலெனில் "என்று நீ யன்று நானுன்னடிமையல்லவோவென்னும்" பெரியார் வாக்கியத்தானும் முகமாகிய விம்பமே கண்ணாடியாகிய வுபாதி திருஷ்டியாற் பிரதிவிம்பமாகத் தோற்றுகின்றதன்றி யுண்மையில் விம்பத்திற்கு வேறாகப் பிரதிவிம்பமில்லாமைபோல சேதன சொரூப விம்ப வடி வினனாகிய பரமேசுரனென்னு நீ அவித்தையாகிய வுபாதி திருஷ்டியால் பிரதிபிம்ப வடிவ அனீசுரனென்னும் ஜீவனாகத் தோற்றினு முண்மையிலுனக்கு வேறாக நானில்லாமையாலுமென்க. ஆதலால் உலகத்தாரெல்லாம் வந்து வணங்குகின்ற திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய நீதி பரனாகிய தெய்வமே! அடியேன் புகலிடமாகச் சார்ந்து நிற்றற்குத் தாமரை மலரையொத்த வுனது திருவடியைக் கொடுத்தருளுக. எ—று.

ஆதார நீயேயெனச் சுருங்கச் சொல்லியதை விளங்கவைத்

தாம். ஏகாரம் பிரிநிலை.

ஆ — வியப்புப் பொருளது. ஆதாரகமற்றவனுவேன் என்பது கற்கறித்து நன்கட்டாய் என்முற்போலக் குறிப்பாலாதாரமற்றவனுகே னென்னும் பொருளைத் தந்து நின்றது-

சர்வம் என்றது - பிரபஞ்சத்தை. சேதனனதற் காதாரனுதலாற் சர்வாதாரனெனப்படுகின்முன். நீயெந்நாளிருக்கின்முயோ வந்நாளேயடியேனு மிருக்கின்றேனெனப் பேதங்கூறியது ஈசுவர ஜீவாது உபாதிகளாகிய மாயையவித்தைகளாலாகிய ஔபாதிக பேதத்தைச் சொரூபபேதத்தை யன்று. எதனுலெனின் அவர் சொரூபம் நித்திய முமேகமுமாதலினென்க. ஆகவே ஔபாதிக பேதத்தன்மை (யீசுரத்தன்மை, ஜீவத்தன்மைகள்) மாயை அவித்தைகளினதீனமாதலால் மித்தையென்ற வாமுயின. இவ்வாற்முல் அவ்வீசுரத்தன்மை ஜீவத்தன்மைகள் எவ்வளவு காலபரியந்தம் சத்தியமாகவாவது மித்தையாகவாவது காணப்படுகின்றனவோ அவ்வளவு காலபரியந்தம் அவ்வீசுவரனது திருவடிக்கண் ஜீவனுக் கடங்குந்தன்மை யவசியம் வேண்டுமென்பது குறிப்பிக்கப் பட்டிருக்கின்றது. எ—று. (95)

அ—கை,- குருமூர்த்தியினுற் செய்யப்பட்ட வுபதேசத்தின் முறையையும் பயனையு மனுபவ கோசரமாக்கி விண்ணப்பித்தல்.

96. புயத்தின் முகமணையப் புல்லியத்தஞ் சென் னி
யியைத்துரைத்த வோர்சொல் லிருளின்—மயத்தவெலா
நீக்கி யமரூரா நின்றநம்பே தத்தினையு ம்
போக்கியதே யீதற் புதம். *

பொ—ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குரு நாதா! முன்னொரு நாளந்நகரத்திலெனது முகமுன்னுடைய

திருப்புயத்தின்கட் பொருந்துமாறிடக் காத்தாலணைத்து வலக் காத்தை யெனதுச்சியின் கண்வைத்து நீயுபதேசித்த வொப்பற்ற வாக்கியமானது அஞ்ஞானத்தின் காரியமாகிய கற்பிதாமிசங்களை யெல்லாம் மித்தையாக்கியப்பாற் சச்சிதாநந்த சொரூபமாத்திரமாகச் சேடித்துநின்ற நம்மிடத்துக் கூடஸ்தன், பிரஹமமென்று கூறும்படிக் கிருந்த நாமகற்பித பேதத்தையுங் கெடுத்துவிட்டது. இதுவே மிக்க ஆச்சரியமாம். எ—று.

ஒப்பற்ற வாக்கியமானது அஞ்ஞானத்தின் காரியமாகிய கற்பிதாமிசங்களை யெல்லாம் மித்தையாக்கியப்பாற் சச்சிதாநந்த சொரூபமாத்திரமாகச் சேடித்து நின்ற நம்மிடத்துக் கூடஸ்தன் பிரஹமமென்று கூறும்படிக்கு இருந்த நாமகற்பித பேதத்தையும் கெடுத்து விட்டது. இதுவே மிக்க ஆச்சரியமாம். ஆகாய கமன முதலிய பிறவெல்லாம் ஆச்சரியமல்லவென்பார். ஓர் சொல்லி ருளின் மயத்தவெலா நீக்கிநின்ற நம்பேதத்தினையும் போக்கிய தேயீதற்புத மென்றார். பிரித்துக் கூட்டப்பட்ட ஏகாரம் பிரிநிலை. (96)

அ—கை:- குருபக்தர்களுக்கு நவக்கிரகங்களு மிடையூறு செய்யா. பிரஹமாநந்தமே யடையப்படுமெனல்.

97. புதனசிதன் பானுகுசன் பொன்னிருபாம் பிந் து
சிதனிவர்கோ பங்களொன்றுஞ் செய்யா—துதிபெரு கு
போரூரில் வாழும் புனிதாநின் பொன்னடி ப
ஞரினர்பா லின்பே நனும். *

பொ—ரை. அன்பர்களாற் செய்யப்படுகின்ற துதியானது நாள்தோறும் விருத்தியடைகின்ற திருப்போரூரின் கண்ணெழுந் தருளிய-நின்மல சொரூபியாகிய சற்குருநாதா! உனது பொன் போன்ற திருவடியின் கண்ணன்புடையாருக்கத் திருவடியினின்

றுண்டாகின்ற வாநந்த மடையப்படுமேயன்றிக் கிரகங்களாகிய புதனும், சனியும், சூரியனும், செவ்வாயும், வியாழனும், இராகுவும், கேதுவும், சந்திரனும், வெள்ளியுமாகிய வொன்பதும் யாதோரி டையூறுஞ் செய்யா. எ—று.

மெய்யடியார்களுக்கு நவக்கிரகங்களுமிடையூறு செய்யா வென்பது.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந் தெனுளமே புகுந்தவதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய்புதன் வியாழன்வெள்ளி சனி பாம்பி
[ரண்டு முடனே
யாசறுநல்ல நல்லவவை நல்ல நல்ல வடியாரவர்க்கு மிகவே."

என்று கூறிய ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகள் வாக்கானு நன்குண ரப்படும்.

பிரி நிலை ஏகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது. அன்றி யென் னும் வினையெச்சம் வருவிக்கப்பட்டது. (97)

அ-கை. குருவின் றிருவடியை விட்டு நீங்காத வடியார்க் குப் புண்ணிய முதல் மோக்ஷாநந்தம் வரையாகிய பயனுளவாமெ னல்.

98. நண்ணு மனமே நமது திருப்போரூரன்
றண்ணளினத் தாணிழலைச் சார்வாருக்—கெண்ணரிய
புண்ணியமுந் தீயதுன்பப் போக்கும் புனிதமும்பின்
னுண்ணிறைபே ராநந்தமும். *

பொ-ரை. மனமே! திருப்போரூரின்கண் ணெழுந்தருளிய நமது சற்குருமூர்த்தியினுடைய குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரை யொத்த திருவடியை யன்புடன் சார்ந்து நிற்பார்க்கு யாது பயனென்று கேட்பாயேற் கூறுகின்றேன். அத் திருவடியைச்

சார்ந்து நிற்றலாலளவற்ற புண்ணியமும், அப்புண்ணியப் பேற்ருற் கொடிய துக்கத்திற் கேதுவாகிய பாவத்தினது நாசமும், அப்பாவ நாசத்திஞற் சித்த சுத்தியும் அப்பால் அச்சுத்தியாற் பிரஹமான்ம வைக்கிய ஞானமும், அந்த ஞானத்தாலந்தக்கரணத்தின் கண்விளங்குகின்ற பரிபூரணநந்தமு மடையப்படும். எ—று.

துன்பம் ஆகு பெயர், உண்ணிறை பேரானந்தமு மென்றதனுல் பிரஹமான்ம வைக்கிய ஞானம் வருவித்தாம். (98)

அ—கை:- குருமூர்த்தியின் றிருவடியே ஜீவர்களுக்கு மும்மைப் பயனுந் தருமெனல்.

99. உம்முடைய வல்ல வொருபயனு மோதுல கீ
ரெம்முடையான் போரூ ரிறைவன்ருண்—மும்மை ப்
பயனுந் தருநேர் பணிந்து துதிசெ ய்
தியைந்ததுவாய் நிற்பீ ரெனின். *

பொ—ரை. கருமபூமியென்று கூறப்படுகின்ற இவ்வுலகின் கண்ணுள்ள விவேகிகளே! போகமோக்ஷ சுகங்களுள் ளெந்தச் சுகமும் உமததீனமல்ல வாஞலவை யாருடைய வதீனமெனின் எம்மையாண்டவனுகிய திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குருநாதனுடையனவாம். ஆதலால் அவற்றை விரும்பின் அவனது திருவடியின்கண் சரீரத்தால் வணங்கி, வாக்காற் றுதித்து, மனத்தாலத்திருவடி வடிவாகப் பொருந்தி நிற்கக்கடவீர். அவ்வாறு நிற்பீராயின் இம்மைச் சுகத்தையும், மறுமைச் சுகத்தையும், முத்திச் சுகத்தையும் முறையாகவத் திருவடியே யுமக்குக் கொடுக்கும். எ—று.

உலகீரென விளித்தது சிதாபாச வடிவ ஜீவரை. எதனுலெனில் சுகத்தை விரும்புதற்கும், கருமத்தைச் செய்தற்கும், சுகத்தை யனுபவித்தற்கு முரியவரவரே யாதலாலென்றறிக. சரீரத்

நால் வணங்கு வார்க்கிம்மைச் சுகமும்; வாக்காற் றுதிப்பார்க்கு மறுமைச் சுகமும், மனத்தாலத்திருவடியிற் கலந்து நிற்பார்க்கு மோக்ஷசுகமு மடையப்படு மென்பார் "பணிந்து துதிசெய்து இயைந்ததுவாய் நிற்பீ ரெனில் இறைவன்றாள் மும்மைப் பயனும் சேர்தரு" மென்றார்.

கருமஞ் செய்யவேண்டியது ஜீவர்கடன் என்பதற்கும், சுகங் கொடுத்தலிறைவன் கடனென்பதற்கு முதாரணம் தேவாரம். "தன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன், றென்க டம்பைத் திருக் கரக் கோவிலான், றன்க டனடி யேனையுந் தாங்குத, லென்க டன் பணி செய்து கிடப்பதே." எனவரும்.

பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற் றொக்கது. (99)

அ—கை:- மோக்ஷமானது நித்திய நிவிர்த்தத்தினி விர்த்தியு நித்தியப் பிராப்தத்தின் பிராப்தியுமாமெனல்.

100. என்னின்னு ணிற்பாம் பியல்பா யிலவா க
வன்னியயா மின்றேக மாயினேம்—மன்னிவைக ள்
போரூரா நின்செயலா பூருவத்தே யுள்ளன வா
சோராதி யானறியச் சொல். *

பொ—ரை. திருப்போரூரின் கண்ணெழுந்தருளிய சற்குரு நாதா! முன்னாளில் என்னுடையவு நின்னுடையவுமாகிய இச்சரீராதிகளிடத்துளவாகிய பேதஞானத்தின் சத்தியத்துவத்தால் ஜீவத்தன்மையடைந்த யானடிமை யெனவு மீசுரத்தன் மையடைந்த நீயாண்டவனெனவும் வேறுவேறுயினை மவ்வாறு வேறுவேறுதற்குக் காரணங்களாக வென்னை யாசிரயித் திருந்த இவ்வவித்தையோடு கூடிய வியட்டி சரீராதிகளு முன்னை யாசிரயித்திருந்த மாயையோடு கூடிய சமட்டி சரீராதிகளுமாகிய விக்கற்பிதங்களெல்லாம் நீ திருப்போரூரின் கட்செய்த வுபதேச மொழியாற்

கயிற்றின்கட் கற்பிதமாகத் தோற்றிய சர்ப்பம்போலப் பாதிதமா (மித்தையா)யொழிந்தன. அக்கற்பித நிவிர்த்தியால் கடாகாய மடாகாயமிரண்டும் அக்கடமடவுபாதி நீங்கிய விடத்தொரே மகாகாயமாயினாற்போல ஜீவோபாதி யீசுரோபாதியாகிய விரண்டு நீங்கியவிடத்து அவற்றிற் பரிபூரணமாக நிறைந்துள்ள சச்சிதாநந்த வடிவம் ஏகரசமாதலால் அவ்வடிவமாகிய யாமிக்காலத்திலேகமாயினேம். இவ்வாறு முன்நிலை பெற்றுள்ள பேதத்தினாலாகிய சர்வதுக்கங்களினிவிர்த்தியும் இக்காலத்தில பேதத்தினாலாகிய பரமாநந்த வடிவப் பிரஹ்மத்தின் பிராப்தியுமாகிய மோக்ஷாமிசமிரண்டும் உனதுபதேச மொழியாற்றற் காலமுளவாயினவா? அல்லது அநாதியே சித்தித்துள்ளனவா? இவற்றினுண்மையை அயர்வின்றி யடியேனறியுமாறு கூறுக. எ—று.

நின்செயலா வென்றதா லுபதேசமொழி வருவிக்கப்பட்டது. என், நின் என்பன ஜீவேசுரருடைய தூலாதி வியட்டி சமட்டி சரீரங்களும் அவித்தை மாயை முதலியவைகளு மவற்றின் றருமங்களுமாம்.

யான், நீ யென்னுந் தன்மை முன்னிலைப் பெயர்களின்றிரிபாகிய என், நின் என்பன ஆறன்றொகையாய் நின்று, ஜீவேசுர சரீராதிகளையும் இரண்டன் உருபும் பயனுமுடன் றொக்க தொகையாய் நின்று, முறையே அவித்தை மாயைகளையும் உணர்த்தின. ஆயினேம் என்பது அன்னியம் என்பதுடனும் கூட்டப்பட்டது. ஏகம் இன்றென்றதால் அன்னியம் முன்னுளென்பது பெறப்பட்டது.

மோக்ஷவடிவமாகிய துக்க நிவிர்த்தியும் சுகப்பிராப்தியுங் கூறுவார் அவற்றை யவற்றிற்குக் காரணங்களாகிய பேதநிவிர்த்தியின் கண்ணும் ஏகப் பிராப்தியின் கண்ணுமடக்கிக் கூறினார். ஏதனாலெனில் பேத நிவிர்த்தி யுளதாகவே சர்வ துக்க நிவிர்த்தியும், பரமாநந்த வடிவப் பிரஹ்மத்தினைக்கிய முளதாகவே

சுகப்பிராப்தியு முளவாதலொரு தலையாதலினெனவறிக.

அவ்விருவகை யமிசமுடைய மோக்ஷம் நின்னுபதேச மாத்திரத்தாலுளதாயினதெனிற் குயவனாலாக்கப்பட்ட கடம்போல ழிவுபாடெய்து மாதலால் மோக்ஷமநாதி நித்தியமாமென்பார் "பூருவத்தேயுள்ளனவாவென வினவினர். ஆகவே அந்த மோக்ஷ வடிவமாகிய சர்வ துக்க நிவிர்த்தியும் பரமாநந்த வடிவப் பிரஹ்மத்தின் பிராப்தியும் புதிதா யடையப்பட்டனவல்ல. நித்திய நிவிர்த்தத்தினிவிர்த்தியும் நித்தியப் பிராப்தத்தின் பிராப்தியுமாமென்க. இதிலோர் சங்கை

மேற்கூறியவாறு துக்க நிவிர்த்தி சுகப்பிராப்திகள் அநாதியிலேயே சித்தித்திருந்தாற் றற்கால வுபதேசம் பயனற்றதாம். எவ்வாறெனில் இயல்பாகவே சுடுகின்ற வக்கினியைச் சுடச்செய்தானென்பது பயனற்றதாதல் போலவென்றறிக. இங்குக்கூறிய திருஷ்டாந்தம் விஷமமாதலாற் பயனற்றதாம். இவ்வுபதேச மொழி யத்திருஷ்டாந்தம்போலப் பயனற்றதாகாது. எவ்வாறெனில் ஒருவன் முனணிந்திருந்த வுருத்திராக்கக் கண்டிகை முன்னணிந்தபடியே நித்தியப்பிராப்தமாயி (அணிப்பட்டி) ருக்கவுமதனைக் கழுத்தினின் றெடுத்து மற்றோரி (குளித்தவி) டத்தில் வைத்து மறந்து வந்துவிட்டதாகப் பிராந்திபடைந்து கவலையுற்று விரைந்துசென்று பார்க்கக் குளித்தவிடத்திற் கண்டிகையைக் காணாமையா லவ்விடத்திற் குளித்த அன்னியனிடத்திற் றுக்கமுகத்துடனின்று வினவுகின்றான். அதைக்கேட்ட அன்னியன் இவன் பிராந்தியாலிவ்வாறு வினவுகின்றானெனத் தெரிந்து ஐயா! உன்னினின்று வேறுபட்டுக், காணமற் போய்விட்டதாக நீ துக்கப்படுதற்குக் காரணமாகிய வுனது கண்டிகை யுனது கழுத்தில் முன்னணிந்தபடியே நீங்காதிருக்கின்றது. அதைக்குறித்து நீ வருந்துதல் மயக்கமாமென்றறிவிக்கின்

ருன். அவ்வார்த்தையைக் கேட்ட கண்டிகையாளன் ஆ அ என்னிடமிருந்து காணாமற் போயின வெனது கண்டிகையை யிப்பொழுதென்னிடத்திலேயே கண்டு முன்னடைந்த துக்கத்தினின்று நீங்கிச் சுகியாயினேனெனத் திருப்தி (மகிழ்ச்சி) யடைகின்றான். ஆதலாலாப்தன் வாக்கியம் கண்டிகை யிழந்தவனது துக்க நிவிர்த்திக்குஞ் சுகப்பிராப்திக்குங் காரணமாகுதலா லவ்வாக்கியமவ்விருவகைப் பயனையு முடையதாயிருக்கின்ற தன்றிப் பயனற்ற தாகவில்லை. அதுபோல

ஜீவனிடத்திற் றுக்க நிவிர்த்தியுஞ் சுகப்பிராப்தியு மநாதியிலேயே சித்தித் திருக்கின்றன. அங்ஙனஞ் சித்தித்திருப்பினும் அஞ்ஞான மயக்கத்தாலவனவற்றை மறந்து தன்னை ஜீவனாக மதித்து ஜனன மரணாதி சமுசார துக்கத்தாற் றபிக்கின்றான். இங்ஙனந் தபிக்கின்ற ஜீவனிடத்துக் காருண்ணியமுடைய பரமேசுரன் குருவடிவாக வெளிப்பட்டு வந்து அப்பா நீ யெக்காலத்துந் துக்க சம்பந்தமில்லாத பரமாநந்த சொரூபப் பிரஹ்மமாக விருக்கின்றாயென்று பதேசிக்கின்றார். அதைக்கேட்டு அவ்வுபதேச மொழியின் விசாரத்தாலபரோக்ஷ ஞானமுண்டாகிய பொழுது நான் பிரஹ்மமாகவே யிருக்கின்றேனென்று அநுபூதியளவாற் கண்டு திருத்தனுகின்றான். ஆதலாற் றனது சொரூபத்தின் அவிசாரத்தாற் பந்தமடைந்து வருந்திய ஜீவனுக்கு அவ்வுபதேச மொழியானது முன்னடைந்துள்ள துக்கத்தினிவிர்த்திக்கும், முன்னிழந்த சுகத்தை யடைதற்குங் காரணமாகுதலாற் பயனுடையதேயன்றிப் பயனற்றதாகா தென்றறிக. (100)

அ—கை:- நூலாசிரியர் தமது குருமூர்த்திகளாகிய திரிமூர்த்திகளையு, மிந்நூலினையும் வாழ்த்துதல்.

பூவளஞ்சேர் கோவினகர் முத்தா நந்த பூரணனம் போ
(ருகப்பூ வடிகள் வாழ்க

காவளஞ்சேர் சோழவந்தா னகர்மே வன்பர் கருதுசிவப்
(பிரகாசன் கழல்கள் வாழ்க
நாவளஞ்சேர் துதிபெருகு சிதம்ப ரப்பேர் நங்குரவன்
(பங்கயப்பூ நகைத்தாள் வாழ்க
பாவளஞ்சேர் போரூரந் தாதி யிந்தப் படிவிளங்கும் படி
(விளங்கி வாழ்க மாதோ.

பொ—ரை. கோட்டினிடத்துங் கொடியினிடத்தும் நீரினிடத்தும் நிலத்தினிடத்தும் புஷ்பிக்கின்ற நான்குவகைப் பூக்களுஞ் செறிந்துவளஞ் செய்தற்குரிய சோலைகளும் நந்தன வனங்களும் தாமரை முதலியன நிறை நீர்த் தடாகங்களும் நன்னிலனும் பொருந்திய கோவிற் பதியென்னு நகரத்தின் கட்டிருக்கோயில் கொண்டெழுந்தருளிய முத்தாநந்த மென்னுந் திருநாமம் பெற்று விளங்குகின்ற பரிபூரண சொரூபியினது தாமரை மலரையொத்த திருவடி வாழ்க. தென்னஞ்சோலை முதலியவற்றால் வளம்பொருந்திய சோழவந்தானென்னு நகரத்தின் கட்டிருக்கோயில்கொண்டெழுந்தருளிய அன்பர்களாற் சிந்திக்கப் படுகின்ற சிவப்பிரகாச தேசிகன் றிருவடிகள் வாழ்க. அடியர் குழாங்கள் தமது நாவினாற் சொல்லழகு, பொருளழகு, இசையழகுகள் பொருந்தப் பாடுகின்ற துதி பெருகுகின்ற திருப்போரூரின் கட்டிருக்கோயில் கொண்டெழுந்தருளிய சிதம்பரமென்னுந் திருநாமம் பெற்று விளங்குகின்ற நமது சற்குரு மூர்த்தியினுடைய தாமரை மலர்போற் பிரகாசிக்கின்ற திருவடி வாழ்க. இச்சற்குருமூர்த்திக் கணியும் பொருட்டுப் பாக்களுள்ளெல்லாம் மாட்சிமை பெற்ற வெண்பாவினாலியற்றப்பட்ட திருப்போரூ ரந்தாதியானது இந்தப் பூமியின்கட் குருபக்தி சிகாமணிகளாயுள்ள அன்பர்கள் தமது பாமாநந்த சொரூபத்தை யதாயாசமாகப் பெற்று விளங்கும்படி அதற்குச் சாதனமாகி யெக்காட்டினும் விளங்கி நிலைபெறுக. எ—று.

மேவு வென்பது முன்னும் பின்னும், போரூரென்பது முன்னும் சென்றியைந்தன. துதிபெருகு என்பதை வினைத் தொகையாகக் கொண்டு துதி பெருகுகின்ற திருப்போரூர் என உரைகொள்ளவேண்டும். மேவு என்பதையும் மூன்றிடத்தும் வினைத்தொகையாகவே கொள்க. கோவிநகர் மேவிய முத்தானந்த பூரணன், சோழவந்தானகர் மேவிய சிவப்பிரகாசன் அன்பர் கருது சிவப்பிரகாசன், போரூர் மேவிய நங்குரவன் சிதம்பரப் பேர் நங்குரவன் எனவியையும். மாது, ஓ அசைநிலைகள்.

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர தேசிகரந்தாதி.

சம்பூரணம்.

உ

ஸ்ரீ சற்குரவே நம:

கோவிற்பட்டி,

ஸ்ரீ முத்தானந்த தேசிகர் அதிஷ்டான மங்களதின பஞ்சரத்தினம்.

மங்கலம்.

1. திங்களி வின்ப நல்குந் தேசிகன் சினக ரஞ்சேர்
மங்கள கால நன்கு வழங்கநா ளெங்கள் வாழ்க
வெங்குமெந் நாளு மொன்று யிருந்தில கின்ப ரூபப்
புங்கவ னுன முன்னோன் பொலிமல ரெழிற்செந் தாளே

2. உலகமெலா முதித்தொடுங்கு மிடமாய்த் தன்பா
லொருபொருளு நாணரவை யொத்தி லாம
லிலகமலா நந்தசுயஞ் சோதி யொன்றே
யிருவினையால் வருந்துயர மூன்றிற் கஞ்சி
மலரனைய கழலடைந்த வடியாரக் கிம்மை
மறுமைமுத்திப் பயன்மூன்றும் வழங்க வேண்டி
யலகறுசீர் முத்தானந் தப்பேர் கொண்டிங்

3. காசிரிய சிகாமணியா யவதரித்தே
அவதரித்த வாறடியார்க் கருளி யப்பா
லம்மனுடக் குறியகற்றி யசா விங்க
சிவவடிவா யிவணடியார் முன்னாட் செய்த
சிறந்ததவப் பயனுதவத் தெரிந்த நாளே
புவனிபுகழ் கோவினக ரெனக்கொள் பேரிப்
புரம்பொருளோ டியைந்தென்றும் பொலிய வேண்டிக்
குவலடனவற் புகழுறச்செய் பணிபா லோங்கு

4. கோவில்கொண்டு விளங்குகின்ற தெந்நா ளென்னில்
கலியுகமை யாயிரத்து முப்ப தோடு
கலந்தகொல்ல மாயிரத்து நூற்று மூன்றிற்
குலவியவை காசிமதி பத்து மொன்றுங்
கூடியதே தியினல்ல குருவின் வார
நிலவுமுத லெழுங்காலைத் தைந்தாம் பக்க
நிகழ்பூச நாளமிர்த யோகஞ் சேர்ந்த
நலமுதவு மிதுனவிலக் கினநா முய்ய
நங்குரவன் றிருக்கோவில் கொண்ட நாளே

5. திருந்திய செங்கோல் வாழ்க சீரிய நாடு வாழ்க
பெருந்திரு வியைந்து கோவி னகரினம் பெரிது வாழ்க
மருந்தெனு முத்தா னந்தன் மலரடி வாழ்க வன்னு
னிருந்தெழி லிலகுங் கோயி லிசையுற வாழ்க மாதோ.

மங்களதின பஞ்சரத்தினம்

சம்பூரணம்.

பாட்டு முதற் குறிப்பகராதி

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர தேசிகரந்தாதி
பாட்டு முதற் குறிப்பகராதி
முற்றிற்று.

திருப்போரூர் ஸ்ரீ சிதம்பரதேசிகரந்தாதி

பரிசோதனைப் பத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்
30	10	ஏகாாமும்	ஏகாரமும்
31	2	முர்த்திணைப	மூர்த்திணைப
41	3	தாச்கத்தைத	தாக்கத்தைத்
46	12	லைதனிடகதாச்	லைகனிடக்தாச்
48	23	பிராஹ்ம	பிரஹ்ம
50	6	சேப்யே	செய்யே
	22	மனத்தையு	மனைத்தையு
60	3	தேவனை	தேனை
	11	பணி	இன்னவின்னபணி
61	26	52	62
64	6	வரசனை	வாசனை
69	4	முன்னுடைய	முன்னடைய
75	20	எகாரமும்	ஏகாரமும்
78	22	பபன்	பாபன்
79	3	சற்குநாதா	சற்குருநாதா
	5	நதீராத	தீராத
80	21 16	மெம்புமாகிய — குறுக்க	மெய்புமாகிய குறுக்கு
81	12	நினறிவாலொன்	நினறிவாரென்
85 82 —	14	பன்னு மாகி —	புன்னு மாகிய
88	16	மனன	மன்ன
91	8	எ—று	எ—று
97	21	விசார்க்காற்	அவிசாரக்காற்

அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர்கள் திருவண்ணாமலை ஈசானிய மடத்தில் ஸ்ரீமத் நாராயண சுவாமிகளிடத்தில் நேரிலாவது தபால் மூலமாகவாவது கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.